நவம்பர் - 2022

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

நடப்பு நிகழ்வுகள்









வ. எண்	பொருளடக்கம்	பக்க எண்
01.	2022 – ஊழல் விழிப்புணர்வு வாரம்	03
02.	2022 – உலக பருத்தி நாள்	05
03.	சோதனை முறையில் எண்ம ரூபாய்: ஆர் பி ஐ	06
04.	2022 – இந்தியா கெம் மாநாடு	07
05.	2022 – சர்வதேச பெண்குழந்தைகள் நாள்	09
06.	IBSAMAR – பன்னாட்டு கடல்சார் பயிற்சி	12
07.	மாமன்னர் இராஜராஜ சோழனின் பிறந்தநாள் அரசு விழா	13
08.	இந்திய சர்வதேச திரைப்பட விழா: கோவா	22
09.	27ஆவது COP மாநாடு: எகிப்து	22
10.	இந்தியாவுக்கு அதிக கச்சா எண்ணெய் ஏற்றுமதி: ரஷியா முதலிடம்	26
11.	பூசா டிகம்போசர்	29
12.	10% இட ஒதுக்கீடு செல்லும்!	30
13.	2022 – உலக உணவுப் பாதுகாப்பு நாள்	33
14.	காவிரி தெற்கு வனவுயரின சரணாலயம்	35
15.	50ஆவது உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி	35
16.	முதல் தனியார் இராக்கெட்!	36
17.	தீனதயாள் உபாத்தியாய ஊரக திறன் பயிற்சி திட்டம்	87
18.	'கனவு இல்லம்' திட்டம்	88
19.	தமிழ்நாட்டின் முதல் பல்லுயிர் பாரம்பரியத் தளமானது மதுரை அரிட்டாபட்டி	92
20.	வானவில் மன்றம்	106

மேலும் பல...

1. தேசிய பாதுகாப்பு வியூகத்தை கொண்டுவருவதற்கு முனைந்துள்ள நாடு எது?

அ. சீனா

ஆ. அமெரிக்கா ☑

இ. ரஷ்யா

ஈ. இந்தியா

✓ அண்மையில் அமெரிக்கா தனது தேசிய பாதுகாப்பு வியூகத்தை (National Security Strategy) அறிமுகப்படுத்தியது. அனைத்து அமெரிக்க அதிபர்களும் தங்களுடைய NSSஐ வெளிக்கொணர்வதற்கு, 'கோல்ட்வாட்டர்–நிக்கோல்ஸ் டிபார்ட்மெண்ட் ஆஃப் டிஃபென்ஸ் ரீஆர்கனைசேஷன் ஆக்ட் ஆஃப் 1986'ஆல் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். தேசிய பாதுகாப்பு குறித்த நிர்வாகியின் பார்வையை சட்டமன்றத்திற்குத் தெரிவிப்பதை இந்த வியூகம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஜோ பைடனின் நிர்வாகமானது தேசிய பாதுகாப்பு வியூகம், அணு நிலை ஆய்வு மற்றும் ஏவுகணை பாதுகாப்பு ஆய்வு ஆகியவற்றையும் வெளியிட்டது.

2. மச்சு ஆற்றின்மீது கட்டப்பட்டுள்ள மோர்பி பாலம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ. மகாராஷ்டிரா

ஆ. குஜராத் ☑

இ. அஸ்ஸாம்

ஈ. அருணாச்சல பிரதேசம்



✓ மோர்பியில் உள்ள மச்சு ஆற்றின்மீது கட்டப்பட்டுள்ள 135 ஆண்டுகள் பழைமையான தொங்கு பாலம் அறுந்து விழுந்ததில் நாற்பது பெண்கள் மற்றும் முப்பத்து நான்கு குழந்தைகள் உட்பட நூற்று நாற்பது பேர் உயிரிழந்தனர். மச்சு ஆற்றின்மீது 754 அடி நீளத்தில் அமைந்துள்ள இப்பாலம் 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சியின்போது கட்டப்பட்டது. பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப்பணிகளுக்காக ஏழு மாதங்களுக்கும் மேலாக மூடப்பட்டு, மீண்டும் திறக்கப்பட்ட நான்கு நாட்களுக்குள்ளாக அது அறுந்து விழுந்துள்ளது. இது ஜூல்டோ புல் (அலைவுறு பாலம்) எனப்படும் பிரபலமான சுற்றுலாத்தலமாகும்.

3. 'DRDO தொழிற்துறை பல்கலைக்கழகம் – சிறப்பு மையம் (DIA–CoE)' அமைக்கப்பட்டுள்ள நிறுவனம் எது?

அ. ஐஐடி மெட்ராஸ்

ஆ. ஐஐடி ரூர்க்கி ☑

இ. IISc பெங்களூரு

ஈ. NIT கோழிக்கோடு

✓ இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகமானது இந்திய தொழில்நுட்ப நிறுவனமான ரூர்க்கியில் (IIT ரூர்க்கி) 'DRDO தொழிற்துறை பல்கலைக்கழகம் – சிறப்பு மையம் (DIA–CoE)' அமைப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த மையம் இந்திய அரசாங்கத்தின் DRDOஇடமிருந்து இதற்காக நிதியுதவி பெறும். பாதுகாப்பு பயன்பாடுகளுக்கான திறன்மிகு உட்கட்டமைப்பு மற்றும் கடினப்படுத்தப்பட்ட கட்டமைப்புகள், ஆற்றல் சேமிப்பு சாதனங்கள், நிலச்சரிவு, பனி மற்றும் பனிச்சரிவு ஆய்வுகள், லேசர் மற்றும் ஸ்பெஷாலிட்டி ஃபைபர் போன்ற முதன்மை ஆராய்ச்சிப் பகுதிகளில் இது தனது கவனத்தைச் செலுத்தும்.

4. 2022 – 'ஊழல் விழிப்புணர்வு வாரத்திற்கான'க் கருப்பொருள் யாது?

அ. Corruption free India for a developed Nation ☑

ஆ. Elimination of Corruption

இ. Embodiment of Honesty

ஈ. Ethics and Values

✓ காலஞ்சென்ற சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாள் (அக்டோபர் 31) வரும் வாரத்தில் நடுவண் விழுப்புணர்வு ஆணையம் (CVC) ஊழல் விழிப்புணர்வு வாரத்தைக் கடைப்பிடிக்கிறது. நடப்பு 2022ஆம் ஆண்டில் அக்.31ஆம் தேதி முதல் நவ.6ஆம் தேதி வரை, "Corruption free India for a developed Nation" என்ற கருப்பொருளின்கீழ் இந்த ஊழல் விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. முன்னதாக, CVC 3 மாதம் நீளும் இயக்கத்தை முன்னெடுத்தது.

5. ரிசர்வ் வங்கி சட்டத்தின்படி, பணவீக்க இலக்கை எத்தனை காலாண்டுகளுக்குப் பராமரிக்கத்தவறினால், இந்திய ரிசர்வ் வங்கி நடுவணரசுக்கு அறிக்கை அனுப்பவேண்டும்?

அ. இரண்டு

ஆ. மூன்று ☑



இ. நான்கு

ஈ. ஐந்து

✓ இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் 45ZN பிரிவின்கீழ், அவ்வங்கியானது, தொடர்ந்து மூன்று காலாண்டுகளுக்கு பணவீக்க இலக்கைப் பராமரிக்கத் தவறினால், அது எடுக்கும் காரணங்கள் மற்றும் தீர்வு நடவடிக்கைகளை விளக்கி அறிக்கையொன்றை நடுவணரசாங்கத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். 2016இல் பணவியல் கொள்கை கட்டமைப்பை நடைமுறைப்படுத்திய பின்னர் முதன்முறையாக, RBI, வங்கி பணவியல் கொள்கைக் குழுவின் சிறப்புக்கூட்டத்திற்கு அழைப்புவிடுத்துள்ளது. 2022 ஜனவரி மாதம் முதல் தொடர்ச்சியாக மூன்று காலாண்டுகளுக்கு சில்லறை பணவீக்க விகிதம் ஆறு சதவீத இலக்கைவிட அதிகமாக இருப்பதால், அது அரசாங்கத்திடம் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது.

6. ₹350 கோடியில் மருத்துவ சாதன பூங்கா கட்டப்படவுள்ள நலகர் அமைந்துள்ள மாநிலம் எது?

அ. கேரளா

ஆ. கர்நாடகா

இ. ஹிமாச்சல பிரதேசம் ☑



ஈ. ஆந்திர பிரதேசம்

✓ இமாச்சல பிரதேச மாநிலம் நலகரில் மருத்துவ சாதன பூங்கா கட்டுவதற்கான அடிக்கல்லை பிரதமர் நரேந்திர மோதி நாட்டினார். சுமார் ₹350 கோடி மதிப்பீட்டில் இந்தப் பூங்கா கட்டப்படவுள்ளது. மொத்த மருந்து பூங்காவிற்கு தெரிவான 3 மாநிலங்களுள் ஹிமாச்சல பிரதேச மாநிலமும் ஒன்று. மருத்துவ சாதனங்கள் பூங்காவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு மாநிலங்களில் ஹிமாச்சல பிரதேசமும் ஒன்று. நலகர் மருத்துவ சாதனப் பூங்கா இதன் ஒருபகுதியாகும்.

7. 'VIDA V1' என்ற பெயரில் தனது முதல் எலக்ட்ரிக் ஸ்கூட்டரை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?

அ. மாருதி சுசூகி

ஆ. ஹீரோ மோட்டோகார்ப் ☑



இ. TATA மோட்டார்ஸ்

ஈ. TVS மோட்டார்ஸ்

✓ நாட்டின் மிகப்பெரிய இருசக்கர வாகன தயாரிப்பு நிறுவனமான, Hero MotoCorp தனது முதல் மின்–ஸ்கூட்டரான 'VIDA V1'ஐ அறிமுகப்படுத்தியதன்மூலம் மின்சார வாகனப்பிரிவில் தடம்பதித்தது. 'VIDA V1' ஆனது Bajaj Chetak, TVS iQube, Ather Energy, Hero Electric, Ola Electric போன்ற பிறவற்றுடன் போட்டியிடும். ஹீரோ மோட்டோகார்ப், அமெரிக்காவைச் சார்ந்த ஜீரோ மோட்டார்சைக்கிள்களில் $60 மில்லியன் அமெரிக்க டாலர் முதலீடு செய்து மின்சார மோட்டார்சைக்கிள்களை கூட்டாக உருவாக்குவதாக அறிவித்துள்ளது. ஏற்கனவே ஏதர் எனர்ஜியில் அது பங்கு கொண்டுள்ளது.

8. 2022 அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற, 'Center for Civil Liberties' அமைந்துள்ள நாடு எது?

அ. ஆப்கானிஸ்தான்

ஆ. உக்ரைன் ☑

இ. ஈரான்

ஈ. சீனா

✓ 2022 – அமைதிக்கான நோபல் பரிசு பெலாரஸைச் சேர்ந்த மனித உரிமை வழக்கறிஞர் அலெஸ் பியாலியாட்ஸ்கி, ரஷ்ய மனித உரிமைகள் அமைப்பான மெமோரியல் மற்றும் உக்ரேனிய மனித உரிமைகள் அமைப்பான, 'Center for Civil Liberties' ஆகியோருக்கு வழங்கப்பட்டது. நார்வே நோபல் கமிட்டியின்படி, அதிகாரத்தை விமர்சிப்பதற்கும் குடிமக்களின் அடிப்படை உரிமைகளைக் காப்பதற்கும் அவை போராடியுள்ளன. போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றை ஆவணப்படுத்தும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

9. 2022 – உலக பருத்தி நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Weaving a better future for cotton ☑



ஆ. Cotton and Sustainability

இ. Assistance to Cotton-4 Nations

ஈ. Cotton by Products and its Markets

✓ உலக பருத்தி நாளானது அக்டோபர்.7 அன்று கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு (2022) இச்சர்வதேச நிகழ்வின் மூன்றாமாண்டு கொண்டாட்டத்தைக் குறிக்கிறது. ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் உழவு அமைப்பின் (FAO)படி, 2022 – உலக பருத்தி நாளுக்கானக் கருப்பொருள், "Weaving a better future for cotton" என்பதாகும். UNCTAD மற்றும் பன்னாட்டு வர்த்தக மையம் (ITC) 'பருத்தி-4' நாடுகளுக்கு (பெனின், புர்கினா பாசோ, சாட் மற்றும் மாலி) உதவி வழங்குவதற்கான முன்முனைவைத் தொடங்கியது.

10. 'தொழிற்துறை 4.0' என்ற மாநாட்டை ஏற்பாடு செய்த நடுவண் அமைச்சகம் எது?

அ. MSME அமைச்சகம்

ஆ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

இ. கனரக தொழிற்துறை அமைச்சகம் ☑

ஈ. நிதியமைச்சகம்

✓ நடுவண் கனரக தொழிற்துறை அமைச்சர் Dr மகேந்திரநாத் பாண்டே, 'தொழில் 4.0: முன்னிருக்கும் சவால்கள் மற்றும் முன்னோக்கிச் செல்லுதல்' மாநாட்டை குஜராத் மாநிலத்தில் உள்ள கெவாடியாவில் தொடங்கி வைத்தார். டிஜிட்டல் உற்பத்தி செயல்முறைகளை பின்பற்றுவதற்கும், தொழிற்துறையில் ஆட்டோமேஷன் மற்றும் புதுமைகளை மேம்படுத்துவதற்கும் நாட்டில் தொழிற்துறைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது இந்த மாநாடு. இந்த நிகழ்ச்சியில், 'மாடல் ஸ்மார்ட் தொழிற்சாலை மற்றும் மதிப்பீட்டு கருவிகள்' வெளியிடப்பட்டன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சோதனை அடிப்படையில் இன்று முதல் 'எண்ம ரூபாய்' பயன்பாடு: ரிசர்வ் வங்கி அறிவிப்பு

இந்தியாவின் முதல் எண்ம ரூபாய் (டிஜிட்டல் ரூபாய்) திட்டம் சோதனை அடிப்படையில் நவ.1ஆம் தேதியிலிருந்து பயன்பாட்டுக்கு வரவுள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

முதல்கட்டமாக அரசின் நிதிப்பத்திரங்களை மொத்தமாகக் கொள்முதல் செய்யும் நடவடிக்கைகளில் எண்ம ரூபாயின் பயன்பாட்டுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக ஆர்பிஐ தெரிவித்துள்ளது. அரசு நிதிப்பத்திரங்களை மொத்தமாகக் கொள்முதல் செய்யும் வங்கிகள் சோதனை அடிப்படையில் எண்ம ரூபாயை பயன்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எஸ்பிஐ, பேங்க் ஆஃப் பரோடா, யூனியன் பேங்க், ஹெச்டிஎஃப்சி, ஐசிஐசிஐ, கோட்டக் மகிந்திரா, யெஸ் வங்கி, ஐடிஎஃப்சி, ஹெச்எஸ்பிசி ஆகிய 9 வங்கிகளுக்கு சோதனை அடிப்படையிலான எண்ம ரூபாயின் பயன்பாட்டில் பங்கேற்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக ஆர்பிஐ தெரிவித்துள்ளது.

---

2. சொந்த விண்வெளி நிலையத்துக்கு ஆய்வகக்கலம் அனுப்பியது சீனா

சீனா சொந்தமாக நிறுவிவரும் தியாங்காங் விண்வெளி நிலையத்தில் இணைப்பதற்கான இரண்டாவது ஆய்வகக் கலத்தை அந்த நாடு வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. சீனாவிடமுள்ள இராக்கெட்டுகளிலேயே மிகவும் பிரம்மாண்டமான லாங் மார்ச்–5பி ஒய்4 இராக்கெட்மூலம் அனுப்பப்பட்டுள்ள அந்த ஆய்வுக்கலத்துக்கு 'மெங்டியன்' என்று பெயரிடப்பட்டுள்ளது. அந்த ஆய்வுக்கலம் தனது சுற்றுவட்டப்பாதையில் வெற்றிகரமாக நிறுவப்பட்டதாகவும், பின்னர் அது தியாங்காங் விண்வெளி நிலையத்துடன் இணைக்கப்படும்.

முன்னதாக, சீன விண்வெளி நிலையத்துக்கான, 'வென்டியன்' என்ற முதல் ஆய்வுக்கலம் கடந்த ஜூலையில் வெற்றிகரமாக இணைக்கப்பட்டது. தியாங்காங் விண்வெளி நிலையத்தின் மையக்கலமான தியான்ஹேவுக்கு இடர்கால மாற்றாகவும் மற்ற நேரங்களில் சக்திவாய்ந்த ஆய்வகமாகவும் 'வென்டியன்' செயல்படும். அவ்விண்வெளி நிலையம் இந்த ஆண்டு இறுதிக்குள் செயல்படத்தொடங்கும்.

---

1. 2022 – இந்தியா கெம் மாநாட்டை நடத்தும் நகரம் எது?

அ. பெங்களூரு

ஆ. புது தில்லி ☑


இ. ஹைதராபாத்

ஈ. சென்னை

✓ நடுவண் இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, "Vision 2030: Chemicals and Petrochemicals Build India" என்ற கருப்பொருளுடன் புது தில்லியின் பிரகதி மைதானத்தில் 2022 – இந்தியா கெம் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். இந்திய வணிகம் மற்றும் தொழிற்துறை கூட்டமைப்புடன் (FICCI) இணைந்து இந்தியா கெம்மின் பன்னிரண்டாவது பதிப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. 2021–22ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் இரசாயனங்கள் ஏற்றுமதி $29,296 மில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்ந்து சாதனை படைத்துள்ளது.

2. கிரீன்ஃபீல்ட் எலக்ட்ரானிக்ஸ் மேனுஃபேக்ச்சரிங் கிளஸ்டர் அமைக்கப்படவுள்ள இரஞ்சன்காவ்ன் அமைந்துள்ள மாநிலம் எது?

அ. மகாராஷ்டிரா ☑



ஆ. குஜராத்

இ. அஸ்ஸாம்

ஈ. அருணாச்சல பிரதேசம்

✓ நடுவண் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது மகாராஷ்டிர மாநிலத்தில் புனேவுக்கு அருகிலுள்ள இரஞ்சன்காவ்ன் 3ஆம் கட்டத்தில் அமைக்கப்படவுள்ள கிரீன்ஃபீல்ட் மின்னணு உற்பத்தித் தொகுதிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இத்தொகுப்பின் திட்டச்செலவு ₹492.85 கோடியாகும். நொய்டா, திருப்பதி, கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டில் மின்னணு உற்பத்தித் தொகுதிகள் உள்ளன. அங்கு பல்வேறு தேசிய நிறுவனங்கள் மற்றும் இந்திய துளிர் நிறுவல்கள் தங்கள் அலகுகளை நிறுவியுள்ளன.

3. யாரின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், 'தேசிய ஒற்றுமை நாள்' அனுசரிக்கப்படுகிறது?

அ. 'மகாத்மா' காந்தியடிகள்

ஆ. சர்தார் வல்லபாய் படேல் ☑



இ. சுபாஷ் சந்திர போஸ்

ஈ. B R அம்பேத்கர்

✓ சர்தார்வல்லபாய் படேலின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், 'தேசிய ஒற்றுமை நாள்' அனுசரிக்கப்படுகிறது. சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சராகப் பணியாற்றிய படேல், 550–க்கும் மேற்பட்ட சுதேச சமஸ்தானங்களை ஒன்றிணைப்பதற்கான தனது முயற்சிகளுக்காக, 'இந்தியாவின் இரும்பு மனிதர்' என்றும் அழைக்கப்படுகிறார். இவ்வாண்டு சர்தார் வல்லபாய் படேலின் 147ஆவது ஆண்டு பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது.

4. இந்திய ரிசர்வ் வங்கி அதன் சோதனை கட்டத்தில் எந்த வகையான 'நடுவண் வங்கி டிஜிட்டல் நாணயத்தை' வெளியிட்டுள்ளது?

அ. சில்லறை விற்பனை

ஆ. மொத்த விற்பனை ☑



இ. பண்டம்

ஈ. கிரிப்டோகரன்சி

✓ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) மொத்த விற்பனைப் பிரிவினருக்காக, நடுவண் வங்கி ஆதரவுடைய 'எண்ம ரூபாய்'க்கான முன்னோடித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. 'நடுவண் வங்கியின் எண்ம நாணயத்தின் செயல்பாடு–மொத்த விற்பனை (இ ₹–W) சோதனைமுறை' என்ற அறிவிப்பில் RBI இதனை அறிவித்துள்ளது. பாரதி வங்கி, பரோடா வங்கி, இந்திய யூனியன் வங்கி, HDFC வங்கி, ICICI வங்கி, கோடக் மஹிந்திரா வங்கி, YES வங்கி, IDFC ஃபர்ஸ்ட் பேங்க் மற்றும் HSBC ஆகிய ஒன்பது வங்கிகள் இதற்காக தேர்வுசெய்யப்பட்டுள்ளன.

5. தனது விண்வெளி நிலையத்திற்காக, 'மெங்டியான்' என்ற ஆய்வகத்தொகுதியை ஏவியுள்ள நாடு எது?

அ. ரஷ்யா

ஆ. அமெரிக்கா

இ. சீனா ☑

ஈ. இஸ்ரேல்



✓ சீனா தற்போது கட்டப்பட்டுவரும் விண்வெளி நிலையத்தின் ஒருபகுதியாக, 'மெங்டியான்' என்ற ஆய்வகத் தொகுதியை அண்மையில் ஏவியது. இந்த இரண்டாவது ஆய்வகக்கூறு, லாங் மார்ச்–5B Y4 கொண்டு ஏவப்பட்டது. மேலும் இது நுண் புவியீர்ப்பு விசையை ஆயவும் திரவ இயற்பியல், பொருண்ம அறிவியல், எரிப்பு அறிவியல் மற்றும் அடிப்படை இயற்பியல் ஆகியவற்றில் சோதனைகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படும். உயிரியல் மற்றும் விண்வெளி வாழ்க்கை அறிவியலில் கவனம் செலுத்திய, 'வென்டியன்' ஆய்வகக்கலம் இதற்குமுன் அனுப்பப்பட்டது.

6. 2022 – உலக மனநல நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Leaving None Behind

ஆ. Make mental health for all a global priority ☑

இ. Accessible Mental Health

ஈ. Sustainable Mental Health



✓ உலகம் முழுவதும் மனநலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.10ஆம் தேதி அன்று 'உலக மனநல நாள்' அனுசரிக்கப்படுகிறது. கடந்த 2013ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும், உலக நலவாழ்வு அமைப்பு (WHO) உலக மனநல நாளிற்கான உலகளாவிய பிரச்சாரத்தை ஏற்பாடு செய்து வருகிறது. "Make mental health for all a global priority" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் உலக மனநல நாளிற்கானக் கருப்பொருளாகும்.

7. 21 வயதை அடையும்முன் மணம் செய்துகொண்ட சிறுமிகள் அதிகமுள்ள மாநிலம் எது?

அ. பீகார்

ஆ. மேற்கு வங்காளம் ☑

இ. இராஜஸ்தான்

ஈ. ஹரியானா



✓ நடுவண் உள்துறை அமைச்சகத்தின் சமீபத்திய மக்கள்தொகை மாதிரி கணக்கெடுப்பின்படி, மேற்கு வங்காளத்தில் 54.9% சிறுமிகள் 21 வயதுக்கு முன்பே மணம் செய்து கொள்கிறார்கள். ஜார்கண்டில், தேசிய சராசரியான 29.5%க்கு எதிராக 54.6%ஆக உள்ளது. மாதிரி பதிவு அமைப்பின் புள்ளிவிவர அறிக்கையின்படி, ஜார்கண்ட் மாநிலத்தில் திருமண வயதை அடைவதற்கு முன்பே திருமணம் செய்து கொள்ளும் சிறுமிகளின் சதவீதம் 5.8ஆக உள்ளது. தேசிய அளவில் இது 1.9 சதவீதமாகவும், கேரளாவில் 0.0 ஆகவும் உள்ளது.

8. விண்மீனிடை விண்கற்கள் IM1 மற்றும் IM2 ஆகியவற்றைக் கண்டறிந்த நாடு எது?

அ. சீனா

ஆ. ரஷ்யா

இ. அமெரிக்கா ☑

ஈ. இஸ்ரேல்



✓ ஹார்வர்ட் பல்கலைக்கழக வானியல் இயற்பியலாளர்களின் புதிய ஆராய்ச்சியின்படி, முதல் மற்றும் இரண்டாவது விண்மீனிடை விண்கற்களான IM1 மற்றும் IM2 ஆகிய இரண்டும் பொருண்ம வலிமையில் வெளிப்புறமாக உள்ளன. மேலும் இவை சூப்பர்நோவா வெடிப்புகளினால் தோன்றியிருக்கலாம். IM1 ஆனது கடந்த 2014ஆம் ஆண்டில் அமெரிக்க அரசாங்க உணரிகளால் கண்டறியப்பட்டது; கடந்த 2019ஆம் ஆண்டில் விண்மீன்களுக்கிடையேயான பொருண்மமாக அது அடையாளம் காணப்பட்டு நடப்பு 2022இல் உறுதிப்படுத்தப்பட்டது. இரண்டாவது விண்மீன் இடை விண்கல்லான IM2 ஆனது NASAஇன் NEO ஆய்வுகளுக்கான மையத்தின் எரிகோள அட்டவணையில் இருந்த தரவுகளின்மூலம் அடையாளம் காணப்பட்டது.

9. "Our time is now–our rights, our future" என்பது அக்டோபர்.11 அன்று கொண்டாடப்படும் எந்தச் சிறப்பு நாளின் கருப்பொருளாகும்?

அ. சர்வதேச பெண் குழந்தைகள் நாள் ☑

ஆ. சர்வதேச சிறுபான்மையினர் நாள்

இ. சர்வதேச அகதிகள் நாள்

ஈ. சர்வதேச மூன்றாம் பாலினத்தோர் நாள்



✓ சர்வதேச பெண் குழந்தைகள் நாளானது கடந்த 2012ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அக்.11 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இது ஐக்கிய நாடுகள் அவையால் அறிவிக்கப்பட்டது. இவ்வாண்டு (2022) சர்வதேச பெண் குழந்தைகள் நாளின் 10ஆம் ஆண்டு கடைப்பிடிப்பாகும். "Our time is now–our rights, our future" என்பது இந்த ஆண்டு பெண் குழந்தைகளுக்கான சர்வதேச நாளுக்கானக் கருப்பொருளாகும்.

10. சமத்துவமின்மையைக் குறைப்பதற்கான உறுதிப்பாடு குறித்த 2022ஆம் ஆண்டுக்கான குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?

அ. 113

ஆ. 123 ☑

இ. 133

ஈ. 143



✓ சமத்துவமின்மையைக் குறைப்பதற்கான உறுதிப்பாடு குறித்த 2022ஆம் ஆண்டுக்கான குறியீட்டில், இந்தியா, ஆறு இடங்கள் முன்னேறியுள்ளது. 161 நாடுகளில் இந்தியா 123ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்தக் குறியீட்டை ஆக்ஸ்பாம் இன்டர்நேஷனலும் டெவலப்மென்ட் ஃபைனான்ஸ் இன்டர்நேஷனலும் இணைந்து தயாரித்துள்ளன. பொதுச்சேவைகள் (சுகாதாரம், கல்வி மற்றும் சமூக பாதுகாப்பு), வரிவிதிப்பு மற்றும் தொழிலாளர் உரிமைகள் ஆகிய மூன்று பகுதிகளில் இது அரசாங்க கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை அளவிடுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இரண்டாவது முறையாக GST வசூல் ₹1.50 இலட்சம் கோடியைக் கடந்தது!

நாடு முழுவதும் இரண்டாவது முறையாக GST வசூல் ₹1.50 இலட்சம் கோடியை கடந்துள்ளதாக நடுவண் அரசு தெரிவித்துள்ளது. 2022 ஏப்ரல் வசூலான GST வசூலுக்கு அடுத்தபடியான அதிகபட்சம் அக்டோபர் மாத GST வசூல் ஆகும். தொடர்ந்து 8ஆவது மாதமாக ₹1.40 லட்சம் கோடிக்கும் அதிகமாக GST வசூலாகியுள்ளதாக நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. GST வசூல் கடந்த ஏப்ரல் மாதத்தில் அதிகபட்சமாக ₹1.68 லட்சம் கோடி வசூலானது. கடந்த ஆண்டு அக்டோபரில் ₹1.30 லட்சம் கோடிக்கு மேல் GST வசூலானது.

அக்டோபர் 2022இல் வசூலான மொத்த GST ₹1,51,718 கோடி, இதில் மத்திய GST ₹26,039 கோடி, மாநில GST ₹33,396 கோடி, ஒருங்கிணைந்த GST ₹81,778 கோடி (சரக்குகள் இறக்குமதிமூலம் வசூலான ₹37,297 கோடி உள்பட) செஸ் ₹10,505 கோடி (சரக்கு இறக்குமதிமூலம் வசூலான ₹825 கோடி உள்ளடங்கியது) ஆகும். அக்டோபர் மாதத்தில் தமிழ்நாட்டில் GST வசூல் 25 சதவீதம் அதிகரித்து ₹9,540 ஆகவும், புதுச்சேரியில் GST வரி வசூல் 34% அதிகரித்து ₹204 கோடி என நடுவணரசு தகவல் தெரிவித்துள்ளது.

1. கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திர பிரதேசம் உள்ளிட்ட ஏழு மாநிலங்கள் கீழ்க்கண்ட எந்தத் தேதியில் தங்கள் உதய நாளைக் கொண்டாடின?

அ. நவம்பர்.01 ☑

ஆ. நவம்பர்.03

இ. நவம்பர்.05

ஈ. நவம்பர்.07



✓ சத்தீஸ்கர், பஞ்சாப், ஹரியானா, மத்திய பிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திர பிரதேசம் உட்பட ஏழு மாநிலங்களும், சண்டிகர், இலட்சத்தீவுகள் மற்றும் புதுச்சேரி ஆகிய யூனியன் பிரதேசங்களும் நவம்பர்.01ஆம் தேதி அன்று தங்கள் உதய நாளைக் கொண்டாடுகின்றன. மத்திய பிரதேசத்திலிருந்து பிரித்துருவாக்கப்பட்ட சத்தீஸ்கரில் அதன் 22ஆவது மாநில நாள் தேசிய பழங்குடியின நடன விழாவுடன் கொண்டாப்பட்டது.

2. 'மன்கர் தாம் கி கௌரவ் கதா' என்ற நிகழ்ச்சியை நடத்திய மாநிலம் எது?

அ. இராஜஸ்தான் ☑

ஆ. குஜராத்

இ. அஸ்ஸாம்

ஈ. அருணாச்சல பிரதேசம்



✓ இராஜஸ்தானில் உள்ள மன்கர் தாமில் நடைபெற்ற, 'மன்கர் தாம் கி கௌரவ் கதா' நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோதி உரையாற்றினார். அதிகம் பேசப்படாத பழங்குடியின மாவீரர்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் தியாகங்களுக்கு அவர் அப்போது அஞ்சலி செலுத்தினார். இராஜஸ்தான், மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் மற்றும் குஜராத் மக்களின் பொதுவான பாரம்பரியமாக, 'மன்கர்' கருதப்படுகிறது. பிர்சா முண்டாவின் பிறந்தநாளான நவம்பர் 15ஆம் தேதி நாடு முழுவதும், 'ஜன்ஜாதிய கௌரவ் திவாஸ்' எனக் கொண்டாடப்படவுள்ளது.

3. மூன்று நாடுகளைச் சேர்ந்த சிறுபான்மையினருக்கு குடியுரிமை வழங்கும், 'குடியுரிமைச் சட்டம்' கீழ்க்காணும் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?

அ. 1947

ஆ. 1955 ☑

இ. 1962

ஈ. 1972



✓ ஆப்கானிஸ்தான், வங்கதேசம் மற்றும் பாகிஸ்தானிலிருந்து வந்து தற்போது குஜராத்தின் இரண்டு மாவட்டங்களில் வசிக்கும் ஹிந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், சமணர்கள், பார்சிகள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு குடியுரிமைச் சட்டம், 1955இன்கீழ் இந்திய குடியுரிமை வழங்க இந்திய அரசு முடிவுசெய்துள்ளது. குடியுரிமைச் சட்டம், 1955இன் கீழ்தான் இந்தக் குடியுரிமை வழங்கப்படுகிறதே ஒழிய சர்ச்சைக்குரிய குடியுரிமை திருத்தச்சட்டம், 2019இன் கீழ் இது வழங்கப்படவில்லை.

4. எந்த நாட்டுடனான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வணிக ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது?

அ. ஐக்கிய அரபு அமீரகம்

ஆ. ஆஸ்திரேலியா ☑

இ. அமெரிக்கா

ஈ. ஐக்கிய இராஜ்ஜியம்



✓ நடுவண் வணிகம் & தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தனக்கிணையான ஆஸ்திரேலிய அமைச்சருடன் மெய்நிகராக சந்திப்பு நடத்தினார். 2022 ஏப்ரலில் கையொப்பமிடப்பட்ட IndAus ECTAஇன் (இந்தியா–ஆஸ்திரேலியா பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வணிக ஒப்பந்தம்) அங்கீகார நிலைகுறித்து விவாதிப்பதற்காக இந்தக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஒப்பந்தத்தை முன்கூட்டியே செயல்படுத்துவது குறித்தும் அப்போது விவாதிக்கப்பட்டது.

5. 'ஆபரேஷன் விஜிலன்ட் ஸ்டார்ம்' என்பது அமெரிக்காவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடத்தப்பட்ட தற்காப்புப் பயிற்சியாகும்?

அ. இந்தியா

ஆ. பிரான்ஸ்

இ. தென் கொரியா ☑

ஈ. பாகிஸ்தான்



✓ 'ஆபரேஷன் விஜிலன்ட் ஸ்டார்ம்' என்பது அமெரிக்காவுக்கும் கொரிய குடியரசுக்கும் (தென் கொரியா) இடையே நடத்தப்பட்ட ஒரு தற்காப்புப் பயிற்சியாகும். நான்கு நாள் நடந்த இந்தப் பயிற்சியில் நூற்றுக்கணக்கான வானூர்திகள் பங்கேற்றன. போர் தயார்நிலை மற்றும் இயங்குதன்மையை மேம்படுத்தும் வகையில் இந்தப் பயிற்சி வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்தப் பயிற்சிக்கு வடகொரியாவின் வெளியுறவு அமைச்சகம் எதிர்ப்பு தெரிவித்தது.

6. புதிய 'வேர்ல்ட் 6–ரெட்' சாம்பியனான இந்தியாவின் ஸ்ரீகிருஷ்ணா சார்ந்த விளையாட்டு எது?

அ. சதுரங்கம்

ஆ. ஸ்னூக்கர் ☑

இ. பூப்பந்து

ஈ. டென்னிஸ்



✓ இந்தியாவின் S ஸ்ரீகிருஷ்ணா நடந்து முடிந்த இறுதிப்போட்டியில் பக்ரைனின் ஹபீப் சபாவை தோற்கடித்ததன் மூலம் புதிய, 'வேர்ல்ட் 6–ரெட்' ஸ்னூக்கர் சாம்பியனானார். 22 வயதான ஸ்ரீகிருஷ்ணா ஏற்கெனவே, 'தேசிய 6–ரெட்ஸ்' ஸ்னூக்கர் சாம்பியனாவார். அவர், கடந்த 2019இல், தேசிய பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்பும் வென்றுள்ளார்.

7. 2022இல், 'IBSAMAR – பன்னாட்டு கடல்சார் பயிற்சியை' நடத்தும் நாடு எது?

அ. இந்தியா

ஆ. தென்னாப்பிரிக்கா ☑

இ. பிரேசில்

ஈ. ஜப்பான்



✓ IBSAMAR பயிற்சியின் ஏழாவது பதிப்பு, தென்னாப்பிரிக்காவில் வைத்து இந்திய, பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்க கடற்படைகளுக்கு இடையே ஒரு கூட்டு பன்னாட்டு கடல்சார் பயிற்சியாக நடத்தப்படவுளது. இந்திய கடற்படையின் சார்பாக டெக் வகை போர்க்கப்பல், INS தர்காஷ், சேதக் உலங்கூர்தியும் மரைன் கமாண்டோ படையின் (மார்கோஸ்) பணியாளர்களும் இதில் பங்கேற்றனர். IBSAMARஇன் முந்தைய பதிப்பு (IBSAMAR VI) தென்னாப்பிரிக்காவின் சைமன்ஸ் டௌனில் கடந்த 2018ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.

8. 'PowerEX' என்ற பாதுகாப்பு பயிற்சியை நடத்திய நிறுவனம் எது?

அ. இந்திய கடலோர காவல்படை

ஆ. இந்திய கணினிவழி அவசரகால பதிலளிப்புக் குழு (CERT-In) ☑

இ. NASSCOM

ஈ. இந்தோ-திபெத்திய எல்லைக் காவல்

✓ இந்திய கணினிவழி அவசரகால பதிலளிப்புக் குழு (CERT–In) Power–CSIRT–களுடன் (Computer Security Incident Response Teams in Power sector) இணைந்து, எரிசக்தித் துறைப் பயன்பாடுகளுக்காக 'PowerEX' என்ற இணைய வெளி பாதுகாப்புப்பயிற்சியை நடத்தியது. 'IT மற்றும் OT அமைப்புகளில் இணையவெளி நிகழ்வை அங்கீகரிப்பது, பகுப்பாய்வு செய்வது மற்றும் பதிலளிப்பது' இந்தப் பயிற்சியின் நோக்கமாகும். "Defending Cyber induced disruption in IT & OT infrastructure" என்பது இந்தப் பயிற்சியின் கருப்பொருளாகும்.

9. 2022 – உலக தரநிலைகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Value of Standardization

ஆ. Build Back Better ☑

இ. Standards and Sustainability

ஈ. Businesses and Standards



✓ ஒவ்வோர் ஆண்டும் அக்.14ஆம் தேதி உலக தரநிலைகள் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. சர்வதேச தரநிலைகள் நாள் என்றும் அழைக்கப்படும் இந்த நாள், தரப்படுத்தலின் மதிப்பைப் பற்றி நுகர்வோர், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் வணிகங்களுக்குக் கற்பிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. "Build Back Better" என்பது இந்த ஆண்டு (2022) உலக தரநிலைகள் நாளுக்கானக் கருப்பொருளாகும். கடந்த 1956ஆம் ஆண்டில் இலண்டனில் நடந்தேறிய பிரதிநிதிகளின் முதல் கூட்டத்தை நினைவுகூரும் வகையில், அக்டோபர்.14ஆம் தேதி உலக தரநிலைகள் நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

10. டைம்ஸ் உயர்கல்வியின் (THE) உலக பல்கலைக்கழக தரவரிசை – 2023இல் இந்திய அளவில் முதலிடம்பெற்ற நிறுவனம் எது?

அ. ஐஐடி மெட்ராஸ்

ஆ. IISc பெங்களூரு ☑

இ. ஐஐடி கோரக்பூர்

ஈ. ஐஐடி பாம்பே



✓ டைம்ஸ் உயர்கல்வியின் (THE) உலக பல்கலைக்கழக தரவரிசை – 2023 அண்மையில் வெளியிடப்பட்டது. இந்தத் தரவரிசைப் பட்டியலில் இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் தொடர்ந்து 7ஆம் முறையாக முதலிடத்தைப் பிடித்துள்ளது. அதைத் தொடர்ந்து ஹார்வர்ட் பல்கலைக்கழகம் (USA) மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் (UK) இரண்டு மற்றும் மூன்றாவது இடங்களில் உள்ளன. பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகம் (IISc) இந்திய கல்வி நிறுவனங்களில் முதலிடத்தைத் தக்கவைத்து, 251–300 இடங்களுக்குள் இடம்பெற்றுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மாமன்னர் இராஜராஜ சோழனின் பிறந்தநாள் அரசு விழா: தமிழ்நாடு அரசு

'மாமன்னர்' இராஜராஜ சோழனின் பிறந்தநாள், அரசு விழாவாகக் கொண்டாடப்படும் எனத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

சதய விழா: உலகப்புகழ்பெற்ற தஞ்சாவூர் பெரிய கோவிலைக் கட்டிய, 'மாமன்னர்' இராஜராஜ சோழனின் பிறந்த நாள், ஒவ்வோர் ஆண்டும் ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில், சதய விழாவாகக் கொண்டாடப்படுவது வழக்கம்.

---

2. இலக்குகளை இடைமறித்து தாக்கும் ஏடி–1 ஏவுகணை சோதனை வெற்றி

இலக்குகளை இடைமறித்து தாக்கும் ஏடி–1 ஏவுகணை முதல்முறையாக வானில் செலுத்தப்பட்டு வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது. இதுதொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: ஏடி–1 என்ற இடைமறித்து தாக்கும் ஏவுகணை வளிமண்டலத்தின் 100 கிமீ உயரத்துக்கு கீழும், அதனைத் தாண்டியும் என இருவிதமாக பாயும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தொலைதூரத்தில் உள்ள எறிகணைகள் மற்றும் விமானங்களை இடை மறித்துத் தாக்கும். இந்த ஏவுகணை உள்நாட்டில் உருவாக்கப்பட்ட நவீன கட்டுப்பாட்டு அமைப்பு, வழிகாட்டு முறைகளைக் கொண்டுள்ளது. இது இலக்கை நோக்கி துல்லியமாக பயணிக்க உதவும்.

இந்த ஏவுகணை ஒடிஸாவில் உள்ள APJ அப்துல் கலாம் தீவின் கடற்கரையையொட்டி, வெவ்வேறு இடங்களில் முதல்முறையாக வானில் செலுத்தி வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது. இந்தச் சோதனையில் ஏவுகணையின் அனைத்து துணை அமைப்புகளும் எதிர்பார்த்தப்படி சிறப்பாக செயல்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

---

3. CRPF பெண் அதிகாரிகள் முதல்முறையாக IGஆக நியமனம்

மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் (CRPF) கலவரத் தடுப்பு சிறப்புப் பிரிவான அதிவிரைவுப் படை (RAF) ஐஜியாக முதல்முறையாக பெண் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல், CRPFஇன் பிகார் பிரிவுக்கும் முதல் முறையாக பெண் ஐஜி நியமிக்கப்பட்டுள்ளார்.

நாட்டின் மிகப்பெரிய துணை இராணுவப்படையான CRPFஇல் (3.25 இலட்சம் பணியாளர்கள்), பல ஆண்டுகால காத்திருப்புக்கு பிறகு கடந்த 1987ஆம் ஆண்டில் முதல்முறையாக பெண் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இந்த நிலையில், CRPF அதிவிரைவுப்படை ஐஜியாக பெண் அதிகாரி ஆனி ஆப்ரகாம், பிகார் பிரிவு ஐஜியாக சீமா துந்தியா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக, அப்படையின் தலைமை அலுவலகம் வெளியிட்ட ஆணையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. அதிவிரைவு படைக்கு பெண் ஐஜி தலைமை தாங்குவது இதுவே முதல்முறையாகும்.

---

1. ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டுவரும் சர்வதேச நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. நவம்பர்.01

ஆ. நவம்பர்.03

இ. நவம்பர்.02 ☑

ஈ. நவம்பர்.07



✓ ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை கடந்த 2013ஆம் ஆண்டு முதல், 'ஊடகவியளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையின்மைக்கான சர்வதேச நாள்' என நவம்பர்.2ஐக் கடைப்பிடித்து வருகிறது. 2013 நவம்பர்.2 அன்று மாலியில் இரண்டு பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்பட்டதை நினைவுகூரும் வகையில் இந்தத் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டது. ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்குத் தண்டனை விதிக்கப்படாமல் குற்றம் புரிந்தோர் தப்பிப்பது குறித்து இந்த நாள் கவனத்தை ஈர்க்கிறது.

2. கல்வியமைச்சகத்தின் செயல்திறன் தரவரிசைக் குறியீட்டின்படி, 2020–21ஆம் ஆண்டில் எத்தனை மாநிலங்கள் நிலை–2 தரத்தை எட்டியுள்ளன?

அ. ஒன்றுமில்லை

ஆ. இரண்டு

இ. நான்கு

ஈ. ஏழு ☑



✓ 2020–21ஆம் ஆண்டிற்கான மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான செயல்திறன் தரவரிசைக் குறியீட்டை கல்வியமைச்சகம் வெளியிட்டுள்ளது. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள பள்ளிக் கல்வி முறைகளின் ஆதார அடிப்படையிலான விரிவான பகுப்பாய்வை இந்தக் குறியீடு கொண்டுள்ளது. கேரளா, பஞ்சாப், சண்டிகர், மகாராஷ்டிரா, குஜராத், இராஜஸ்தான் மற்றும் ஆந்திர பிரதேசம் என மொத்தம் ஏழு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் 2020–21இல் நிலை–2 என்ற தரத்தை எட்டியுள்ளன. இத்தரவரிசைக் குறியீடு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை பத்துத் தரநிலைகளாக வகைப்படுத்தியுள்ளது; அதில், அதிகபட்சமாக அடையக்கூடிய தரம் நிலை–1 ஆகும்.

3. ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டத்துடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?

அ. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்

ஆ. வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சகம் ☑

இ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ. நகர்ப்புற மற்றும் வீட்டு விவகார அமைச்சகம்

सत्यमेव जयते
रसायन एवं उर्वरक मंत्रालय
MINISTRY OF CHEMICALS AND FERTILIZERS

✓ 2022–23 இரபி பருவத்தில் (2022 அக்.1 முதல் 2023 மார்ச்.31 வரை) பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் உரங்களுக்கு நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாஷ் மற்றும் சல்பர் போன்ற ஊட்டச்சத்துகளை கிலோ கிராமுக்கு மானிய விலையில் வழங்கவேண்டும் என்ற உரத்துறையின் பரிந்துரைக்கு பிரதமர் தலைமையிலான நடுவணமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி நைட்ரஜனுக்கு ₹98.02உம், பாஸ்பரசுக்கு ₹66.93உம், பொட்டாஷுக்கு ₹23.65உம். சல்பருக்கு ₹6.12உம் கிலோவுக்கு மானியமாக வழங்கப்படும். இதன்மூலம் இக்காலக்கட்டத்தில் மொத்தம் ₹51,875 கோடி அளவிற்கு மானியம் அளிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

4. இந்தியாவில் ஆண்டுதோறும், 'ஊழல் விழிப்புணர்வு வாரத்தை' அனுசரிக்கும் நிறுவனம் எது?

அ. இந்திய ரிசர்வ் வங்கி

ஆ. நடுவண் விழிப்புணர்வு ஆணையம் ☑

இ. முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம்

ஈ. செக்யூரிட்டீஸ் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆஃப் இந்தியா

✓ நடுவண் விழிப்புணர்வு ஆணையமானது ஒவ்வோர் ஆண்டும் ஊழல் விழிப்புணர்வு வாரத்தைக் கடைப்பிடித்து வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் ஒருமைப்பாடு என்ற செய்தியைப் பரப்புகிறது. நடுவண் விழிப்புணர்வு ஆணையத்தின் புதிய புகார் மேலாண்மை அமைப்புக்கான வலைத்தளத்தை பிரதமர் நரேந்திர மோதி சமீபத்தில் தொடங்கி வைத்தார். 'நெறிமுறைகள் & நன்னடைமுறைகள்' பற்றிய சிற்றேடுகங்களையும் அவர் வெளியிட்டார். 'தடுப்பு விழிப்புணர்வு' பற்றிய சிறந்த நடைமுறைகளின் தொகுப்பு மற்றும் அரசாங்க கொள்முதல் குறித்த 'விஜே–வாணி' என்ற சிறப்பு வெளியீடையும் அவர் அப்போது வெளியிட்டார்.

5. இடைமறித்துத் தாக்கும் AD–1 என்ற எறிகணையின் இரண்டாம் கட்ட சோதனையை நடத்திய நிறுவனம் எது?

அ. ISRO

ஆ. DRDO ☑

இ. BEL

ஈ. HAL

✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) இடைமறித்துத் தாக்கும் AD–1 என்ற எறிகணையின் இரண்டாம் கட்ட சோதனையை வெற்றிகரமாக நடத்தியது. இந்த எறிகணை ஒடிஸா கடற்கரையில் உள்ள APJ அப்துல்கலாம் தீவிலிருந்து சோதிக்கப்பட்டது. AD–1 என்ற இடைமறித்துத் தாக்கும் ஏவுகணை வளிமண்டலத்தின் 100 கிமீ உயரத்துக்குக் கீழும், அதனைத் தாண்டியும் என இருவிதமாக பாயும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தொலைதூரத்தில் உள்ள எறிகணைகள் மற்றும் விமானங்களை இடைமறித்துத் தாக்கும்.

6. ஹிமாச்சல பிரதேச மாநிலத்தில் செயல்படுத்தப்படும் HIMCAD திட்டத்துடன் தொடர்புடைய துறை எது?

அ. ஊட்டச்சத்து

ஆ. நீர்ப்பாசனம் ☑

இ. திறன் மேம்பாடு

ஈ. வேலைவாய்ப்பு



✓ ஹிமாச்சல பிரதேச மாநில அரசானது, 'HIMCAD' என்ற புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது; இது உருவாக்கப்பட்ட நீர்ப்பாசனத் திறனுக்கும் பயன்படுத்தப்பட வேண்டிய நீர்ப்பாசனத் திறனுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கிறது. இது சிறந்த நீர்சேமிப்பு, பயிர் பல்வகைப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைந்த உழவு ஆகியவற்றிற்காக விவசாயிகளின் வயல்களில் ஒரு முற்றான இணைப்பை வழங்கும். இத்திட்டத்தின்கீழ், 15,242 ஹெக்டேர் பரப்பளவு கட்டளைப் பகுதி மேம்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

7. 'அலுவல் மொழிகளுக்கான நாடாளுமன்றக் குழு'வின் தலைவர் யார்?

அ. இராஜ்நாத் சிங்

ஆ. அமித் ஷா ☑

இ. நிதின் கட்கரி

ஈ. பியூஷ் கோயல்




✓ நடுவண் உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையிலான அலுவல் மொழிகளுக்கான நாடாளுமன்றக் குழுவின் அறிக்கை அண்மையில் குடியரசுத்தலைவர் திரௌபதி முர்முவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. பொது அலுவலகங்கள், IIT மற்றும் IIM போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் நீதிமன்றங்களில் ஹிந்தி உள்ளிட்ட இந்தியாவின் அட்டவணைப்படுத்தப்பட்ட மொழிகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு அந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது. ஹிந்தி பேசாத மாநிலங்களில் ஹிந்தியைத் திணிக்கும் நடுவணரசின் ஒரு முயற்சியாக தென் மாநிலங்கள் இதனைக் குற்றஞ்சாட்டி வருகின்றன.

8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'Sendai Framework'உடன் தொடர்புடைய துறை எது?

அ. நெகிழி ஒழிப்பு

ஆ. பேரிடர் அபாயக் குறைப்பு ☑



இ. மின்னணுக் கழிவுகளைக் கையாளுதல்

ஈ. பயங்கரவாத எதிர்ப்பு

✓ பேரிடர் அபாயக் குறைப்புக்கான பன்னாட்டு நாள் ஒவ்வோர் ஆண்டும் அக்.13 அன்று அனுசரிக்கப்படுகிறது. பல்வேறு பேரிடர்களின்போது உயிர்கள், வாழ்வாதாரங்கள் மற்றும் உட்கட்டமைப்பு இழப்புகளைத் தடுப்பதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அங்கீகரிப்பதற்காகவுமாக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. "Early Warning for All" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான சர்வதேச நாளுக்கானக் கருப்பொருளாகும். இது செண்டாய் கட்டமைப்பின் இலக்கு G ஆகும். பேரிடர் அபாயத்தைக் குறைப்பத –ற்கான 'செண்டாய் கட்டமைப்பு 2015–2030' என்பது பேரிடர் அபாயத்திலிருந்து வளர்ச்சி ஆதாயங்களைப் பாதுகாப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளை உள்ளடக்கியது.

9. 'Ambedkar: A Life' என்ற வாழ்க்கை வரலாற்று நூலை எழுதியவர் யார்?

அ. சசி தரூர் ☑



ஆ. அமிதவ குமார்

இ. அபை K

ஈ. சஞ்சய பாரு

✓ "Ambedkar: A Life" என்பது சசி தரூரால் எழுதப்பட்ட பீம் ராவ் ராம்ஜி அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்று நூலாகும். அம்பேத்கரின் வாழ்க்கைப்பயணம், ஒடுக்கப்பட்டோரை இழிவுபடுத்திய சமூகத்தில் அவர் கடக்கவேண்டியிருந்த தடைகள், தீண்டாமையை சட்டவிரோதமாக்குவதற்கான அவரது போராட்டம் ஆகியவற்றின் நுண்ணறிவுகளை இந்த நூல் கூறுகிறது. அப்படிச்செய்வதன்மூலம், "அவர் இன்னும் பிறவாத லட்சக்கணக்கானோரின் வாழ்க்கையை மாற்றினார்; ஒரு பண்டைய நாகரிகத்தை நவீன சகாப்தமாக தனது அறிவுத்திறன் மற்றும் எழுத்தாற்றலால் மாற்றினார்" என்று எழுதுகிறார் சசி தரூர்.

10. அண்மையில் 36ஆவது தேசிய விளையாட்டு – 2022 போட்டிகளில் 8 பதக்கங்களை வென்ற சஜன் பிரகாஷ் சார்ந்த விளையாட்டு எது?

அ. துப்பாக்கி சுடுதல்

ஆ. மல்யுத்தம்

இ. நீச்சல் ☑



ஈ. டென்னிஸ்

✓ கேரளாவைச் சேர்ந்த இந்திய நீச்சல் வீரர் சஜன் பிரகாஷ், 36ஆவது தேசிய விளையாட்டுப்போட்டியில் 5 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம் உட்பட 8 பதக்கங்களை வென்றார். இராஜ்கோட்டில் உள்ள சர்தார் படேல் அக்வாடிக் வளாகத்தில், குஜராத் மாநில முதல்வர் பூபேந்திர பட்டேலிடமிருந்து, 'சிறந்த தடகள வீரர்' விருதையும் அவர் பெற்றார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. செஸ்: பிரக்ஞானந்தா, நந்திதா சாம்பியன்

ஆசிய செஸ் சாம்பியன்ஷிப்பில் இந்திர்களும், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுமான பிரக்ஞானந்தா ஓபன் பிரிவிலும், நந்திதா மகளிர் பிரிவிலும் வாகை சூடினர். போட்டியின் ஒன்பது சுற்றுகள் முடிவில், ஓபன் பிரிவில் பிரக்ஞானந்தா முதலிடமும் (7 புள்ளிகள்), ஹர்ஷா பாரதகோடி 2ஆம் இடமும் (6.5), அதிபன் 3ஆம் இடமும் (6.5) பிடித்தனர். மகளிர் பிரிவில் நந்திதா (7.5), பிரியங்கா நுடாகி (6.5), திவ்யா தேஷ்முக் (6.5) ஆகியோர் முறையே முதல் 3 இடங்களையும் எட்டினர்.

1. உயர்கல்வி நிறுவனங்களின் மதிப்பீடு மற்றும் அங்கீகாரத்தை வலுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் யார்?

அ. K இராதாகிருஷ்ணன் ☑

ஆ. கஸ்தூரி இரங்கன்

இ. அமிதாப் காந்த்

ஈ. V K பால்



✓ உயர்கல்வி நிறுவனங்களின் மதிப்பீடு மற்றும் அங்கீகாரத்தை வலுப்படுத்துவதற்காக ஓர் உயர்மட்ட குழுவை நடுவணரசு அமைத்துள்ளது. ஐஐடி கான்பூரின் நிர்வாகக் குழுவின் தலைவர் K இராதாகிருஷ்ணன் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஐஐடி கவுன்சில் நிலைக்குழுவின் தலைவராகவும் அவர் உள்ளார்.

2. 'காலின்ஸ் அகராதியால் 2022ஆம் ஆண்டின் சிறந்த சொல்' எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் எது?

அ. Lockdown

ஆ. Permacrisis ☑

இ. Pandemic

ஈ. Non-Fungible Token

✓ 'உறுதியற்ற தன்மை மற்றும் பாதுகாப்பின்மையின் நீடித்த காலத்தை' விவரிக்கும் 'Permacrisis' என்ற சொல், 'காலின்ஸ் அகராதியால் 2022ஆம் ஆண்டின் சிறந்த சொல்' என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சொல், பருவநிலை மாற்றம், ஐரோப்பாவில் போர், வாழ்க்கைச் செலவின நெருக்கடி மற்றும் அரசியல் குழப்பம் ஆகியவற்றால் ஏற்படும் சவால்களுடன் தொடர்புடையது. இது முதன்முதலில் 1970களில் கல்விச்சூழல்களில் பயன்படுத்தப்பட்டது. 2020ஆம் ஆண்டில், காலின்ஸ், "லாக்டௌன்" என்பதை அதன் ஆண்டின் சொல்லாகத் தேர்ந்தெடுத்தது மற்றும் கடந்த ஆண்டு (2021) அது "NFT– Non–Fungible Token" என்ற சொல்லைத் தேர்வுசெய்தது.

3. 'Beidou' என்ற செயற்கைக்கோள் வழிசெலுத்தல் அமைப்பை அறிமுகப்படுத்திய நாடு எது?

அ. ஜப்பான்

ஆ. சீனா ☑

இ. இரஷ்யா

ஈ. இஸ்ரேல்

✓ சீனா தனது உள்நாட்டில் உருவாக்கப்பட்ட 'பெய்டோ' செயற்கைக்கோள் வழிசெலுத்தல் அமைப்பின் உலகளாவிய வரம்பை மேலும் விரிவுபடுத்துவதற்கான திட்டங்களை வெளியிட்டுள்ளது. அமெரிக்காவின் குளோபல் பொசிஷனிங் சிஸ்டத்திற்கு (GPS) மாற்றாக சீனாவின் அமைப்பாக இது அறிவிக்கப்பட்டுள்ளது. 'பெய்டோ' கடந்த 2013ஆம் ஆண்டில் தாய்லாந்தில் அதன் வலையமைப்பிற்காக தொடர்ந்து செயல்படும் மூன்று குறிப்பு நிலையங்களுள் (Continuously Operating Reference Stations – CORS) ஒன்றை முதலாவதாக அமைத்தது.

4. 2022 நவம்பர் நிலவரப்படி, உலகின் மிகநீளமான பயணிகள் இரயிலை அறிமுகம் செய்துள்ள நாடு எது?

அ. ஜப்பான்

ஆ. சீனா

இ. சுவிச்சர்லாந்து ☑

ஈ. சுவீடன்



✓ 100 பெட்டிகள், 4550 இருக்கைகள், 1910 மீட்டர் நீளங்கொண்ட உலகின் மிகநீளமான பயணிகள் இரயிலை சுவிச்சர்லாந்து அறிமுகப்படுத்தியுள்ளது. சுவிச்சர்லாந்தின் முதல் இரயில்வேயின் 175ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், சுவிஸ் போக்குவரத்து நிறுவனமான ரேடியன் இரயில்வே, மிகநீளமான பயணிகள் இரயிலுக்கான உலக சாதனையைப் படைத்துள்ளது. சுவிச்சர்லாந்தின் ஆல்ப்ஸ் மலைப்பகுதி வழியாகச் செல்லும் இந்த இரயில் 25 புதிய 'கேப்ரிகார்ன்' மின்சார இரயில்கள் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

5. 2022 நவம்பர் நிலவரப்படி, பூமியிலிருந்து இதுவரை ஏவப்பட்ட மிக ஆற்றல்வாய்ந்த ஏவுகணை எது?

அ. மினிட்மேன் ஹெவி

ஆ. ஃபால்கன் ஹெவி ☑

இ. லாங் மார்ச் 5 B

ஈ. PSLV 52



✓ ஸ்பேஸ்எக்ஸ் தனது ஃபால்கன் ஹெவி ஏவுகணையை ஏவியது. அந்த ஏவுகணை பல்வேறு அமெரிக்க இராணுவ செயற்கைக்கோள்களை அதற்குரிய சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தியது. பூமியிலிருந்து இதுவரை ஏவப்பட்ட மிக ஆற்றல்வாய்ந்த ஏவுகணை இதுவாகும். ஸ்பேஸ்எக்ஸால் நடப்பாண்டில் (2022) ஏவப்படும் 50ஆவது ஏவுகலம் இதுவாகும். ஸ்பேஸ்எக்ஸின் 49ஆவது ஏவுகலம் ஃபால்கன் 9 ஆகும். கணக்கிட்டுப்பார்த்தால் 6.10 நாட்களுக்கு ஒருமுறை அந்த நிறுவனம் ஒரு ஏவுகலத்தை ஏவுகிறது.

6. இந்தியாவால் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட முதல் அணுசக்தி நீர்மூழ்கிக்கப்பல், கீழ்காணும் எந்த வகையினைச் சார்ந்த கப்பலாகும்?

அ. சிசுமார்

ஆ. அரிஹந்த் ☑

இ. சிந்துகோஷ்

ஈ. கல்வாரி



✓ இந்தியாவின் அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக்கப்பலான ஐஎன்எஸ் அரிஹந்த், 2022ஆம் ஆண்டு அக்.14ஆம் தேதி வங்கக் கடலிலிருந்து, 'மிக அதிக துல்லியத்துடன்' வெற்றிகரமாக ஓர் எறிகணையை ஏவியது. அரிஹந்த் – வகுப்பு நீர்மூழ்கிக்கப்பல்கள் அணுசக்தியால் இயங்குவதோடு எறிகணைகளை ஏவுவதற்கான அதிநவீன தொழில் நுட்பக்கப்பல் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கப்பல்களாகும். இந்தியாவினால் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட முதல் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் இவை.

7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, SCO–RATSஇன் தலைமையகம் எங்குள்ளது?

அ. ஷாங்காய்

ஆ. பெய்ஜிங்

இ. தாஷ்கண்ட் ☑

ஈ. அஸ்தானா



✓ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு கட்டமைப்பின் (RATS) செயற்குழு என்பது உஸ்பெகிஸ்தானின் தலைநகரமான தாஷ்கண்டில் உள்ள, 'SCO–RATS'இன் நிரந்தர அமைப்பாகும். ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பிராந்திய பயங்கரவாத எதிர்ப்புக் கட்டமைப்பின் கவுன்சிலின் கூட்டம் 2022 அக்.14 அன்று புது தில்லியில் நடைபெற்றது. சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள உறுப்புநாடுகளால் அப்போது முடிவு செய்யப்பட்டது.

8. அப்துல் இலத்தீஃப் ரஷீத் என்பார் சமீபத்தில் எந்த நாட்டின் / பிரதேசத்தின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?

அ. பாலஸ்தீனம்

ஆ. ஈராக் ☑

இ. எகிப்து

ஈ. ஏமன்



✓ ஈராக்கிய சட்டமியற்றுநர்கள் அப்துல் இலத்தீப் ரஷீத்தை ஈராக்கின் புதிய அதிபராகத் தேர்ந்தெடுத்துள்ளனர். இது ஈராக் நாட்டிற்கான புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான ஒரு முக்கியமான படியாகும். இரண்டாவது சுற்று வாக்கெடுப்பில் ரஷீத் 162 வாக்குகளைப் பெற்றார், 99 வாக்குகளைப் பெற்ற பர்ஹாம் சாலியை அவர் தோற்கடித்தார். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ரஷீத், ஏற்கெனவே கடந்த 2003இல் நாட்டின் ஐந்தாவது அதிபராக பதவி வகித்துள்ளார்.

9. ஜோசப் ரெசின்ஸ்கி என்பார் பின்வரும் எதனுடன் தொடர்புடையவர்?

அ. எய்ட்ஸ் ஒழிப்பு

ஆ. குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு

இ. வறுமையொழிப்பு ☑

ஈ. ஆட்கடத்தல் ஒழிப்பு



✓ ஜோசப் ரெசின்ஸ்கி என்பார் ஒரு பிரெஞ்சு அருட்தந்தையும் மனிதாபிமான ஆர்வலருமாவார். கடந்த 1987ஆம் ஆண்டில், ஜோசப் ரெசின்ஸ்கி வறுமையொழிப்புக்கான சர்வதேச நாளை (அக்டோபர்.17) தொடங்கினார்; பின்னர் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையால் அந்த நாள் அங்கீகரிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. "Dignity for all in practice" என்பது இந்த ஆண்டு (2022) வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும்.

10. பொது விவகாரங்கள் குறியீடு–2022இன்படி, இந்தியாவில் சிறப்பாக நிர்வகிக்கப்படும் சிறிய மாநிலம் எது?

அ. கோவா

ஆ. சிக்கிம் ☑

இ. மேகாலயா

ஈ. மணிப்பூர்



✓ பொது விவகாரங்கள் குறியீடு–2022இல் பெரிய மாநிலங்களின் பிரிவில் ஹரியானா முதலிடத்தில் உள்ளது. சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதிக்கருப்பொருள்களில் ஹரியானா மாநிலம் முன்னணியில் உள்ளது. இது 0.6948 மதிப்பெண்களுடன் முக்கிய மாநிலங்களில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. தமிழ்நாடு, கேரளா, சத்தீஸ்கர், பஞ்சாப் மற்றும் கர்நாடகாபோன்ற பல மாநிலங்கள் அதைத் தொடர்ந்த இடங்களில் உள்ளன.

✓ மறுபுறம், சிக்கிம் இந்தியாவிலேயே சிறந்த நிர்வாகம் கொண்ட சிறிய மாநிலமாக தனது நிலையைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. பெங்களூருவைச் சேர்ந்த இலாப நோக்கற்ற சிந்தனைக் குழுவான பொது விவகாரங்கள் மையம் இந்தக் குறியீட்டை வெளியிட்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இராஜாராம் மோகன் இராயின் வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்ட நாட்டிய நாடகம்

'நவீன இந்தியாவின் விடிவெள்ளி' என்று அழைக்கப்படும் இராஜாராம் மோகன் ராயின் வாழ்க்கையை மையமாகக் கொண்ட நாட்டிய நாடகம், கடமைப்பாதை மற்றும் இந்திய நுழைவு வாயிலில் நடைபெறவுள்ளது. இராஜாராம் மோகன் ராய் நூலக அறக்கட்டளையால் நடத்தப்படும், 'யுகபுருஷர் இராஜாராம் மோகன் இராய்' என்ற பெயரிலான

இந்நிகழ்வு, 'பெண்களுக்கு மரியாதை' என்ற கருப்பொருளில் அமைந்திருக்கும். விடுதலையின் அமுதப்பெருவிழா நிகழ்வின் ஒருபகுதியாக, ராஜா ராம் மோகன் ராயின் 250ஆவது பிறந்தநாளை முன்னிட்டு கடந்த மே மாதம், மத்திய கலாச்சார அமைச்சகம் ஓராண்டு கொண்டாட்டத்தைத் தொடங்கியது.

---

2. இந்திய சர்வதேச திரைப்பட விழா இம்மாதம் 20 முதல் 28 வரை கோவாவில் நடைபெறுகிறது

1952இல் நிறுவப்பட்ட இந்திய சர்வதேச திரைப்பட விழா (IFFI) ஆசியாவின் மிகமுக்கியமான திரைப்பட விழாக்களில் ஒன்றாகும். சுற்றுலா மாநிலமான கோவாவில் ஆண்டுதோறும் நடத்தப்படும், இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த திரைப்படங்கள், வெளியிடப்படும். உலக திரையரங்குகளுக்கு ஒரு பொதுவான தளத்தை வழங்குவதன் மூலம், திரைப்படக்கலையின் சிறப்பை முன்வைக்க அவர்களுக்கு உதவுவதன்மூலம் இவ்விழா இந்நோக்கங்களைத் தொடர்கிறது; பல்வேறு நாடுகளின் திரைப்பட கலாச்சாரங்களை அவர்களின் சமூக மற்றும் கலாச்சார நெறிமுறைகளின் பின்னணியில் புரிந்துகொள்வதற்கும் பாராட்டுவதற்கும் பங்களிக்கிறது; அதன்மூலம் உலக மக்களிடையே நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்துகிறது.

கடந்த 2004ஆம் ஆண்டு கோவாவில் முதன்முறையாக நடைபெற்ற இந்தத் திரைப்பட விழாவின் நிரந்தர இடமாக கோவாவை 2014இல் அறிவிக்கப்பட்டது.

---

3. இந்தியாவின் முதல் வாக்காளர் ஷியாம் சரண் நெகி மறைவு

சுதந்திர இந்தியாவின் முதல் வாக்காளரான ஷியாம் சரண் நெகி காலமானார். அவருக்கு வயது 106. நாடு சுதந்திரம் அடைந்த பின், முதல்முறையாக பொதுத்தேர்தல் நடத்த தீர்மானிக்கப்பட்டது. அப்போது கடுமையான குளிர்காலம், பனிப்பொழிவு ஆகியவற்றை கருத்தில்கொண்டு, ஹிமாசல பிரதேச மாநிலம் கின்னௌர் பகுதியில் கடந்த 1951ஆம் ஆண்டு அக்.25ஆம் தேதி முன்கூட்டியே வாக்குப்பதிவு நடைபெற்றது. நாட்டின் இதர பகுதிகளில் 1952ஆம் ஆண்டு ஜனவரி–பிப்ரவரி மாதங்களில் வாக்குப்பதிவு நடந்தது.

இந்தத் தேர்தலின்போது கின்னௌரில் உள்ள சினி கிராமத்தில் (தற்போது 'கல்பா' என்றழைக்கப்படுகிறது) ஷியாம் சரண் நெகி முதல் நபராக வாக்களித்தார். இதன்மூலம் சுதந்திர இந்தியாவில் வாக்களித்த முதல் நபர் என்ற பெருமையை அவர் பெற்றார். இதுவரை அவர் 34 முறை வாக்களித்துள்ளார்.

---

4. 27ஆவது ஐநா பருவநிலை மாற்ற மாநாடு: எகிப்தில் இன்று தொடக்கம்

எகிப்தில் 27ஆவது ஐநா பருவநிலை மாற்ற மாநாடு தொடங்கவுள்ளது. எகிப்தில் உள்ள ஷர்ம்–அல்–ஷேக் நகரில் நவ.6–8 வரை 27ஆவது ஐநா பருவநிலை மாற்ற மாநாடு நடைபெறவுள்ளது. ஆண்டுதோறும் நடைபெறும் இந்த மாநாட்டில் 198 நாடுகள் பங்கேற்கவுள்ளன. இதில் பருவநிலை மாற்றத்தை எவ்வாறு அனைவரும் இணைந்து எதிர்கொள்வது என்பது குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு டென்மார்க் தலைநகரம் கோபன்ஹேகனில் பருவநிலை மாற்ற மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள வளரும் நாடுகளுக்கு உதவும் நோக்கில், 2020ஆம் ஆண்டுக்குள் வருடந்தோறும் 100 பில்லியன் டாலர்களை கூட்டாக திரட்ட வளர்ந்த நாடுகள் உறுதியேற்றன. ஆனால் அதனை அந்த நாடுகள் செய்யவில்லை. அந்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறு மாநாட்டில் இதர வளரும் நாடுகளுடன் இணைந்து வளர்ந்த நாடுகளுக்கு இந்தியா அழுத்தம் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

1. 2022 – தழுவல் இடைவெளி அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ. WEF

ஆ. UNEP ☑

இ. UNFCCC

ஈ. NITI ஆயோக்

✓ ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டமானது (UNEP) 'Adaptation Gap Report 2022: Too Little, Too Slow – Climate Adaptation Failure Puts World at Risk' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. பருவநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கேற்ப உலகம் தனது முனைவுகளை விரைவுப்படுத்தவேண்டும் என்று அறிக்கை கண்டறிந்துள்ளது. திட்டமிடல், நிதியளித்தல் மற்றும் தழுவல் செயல்களைச் செயல்படுத்துதல் ஆகியவற்றிலுள்ள முன்னேற்றத்தையும் இந்த அறிக்கை பட்டியலிடுகிறது.

2. 'ஸ்வச் சர்வேக்ஷன் கிராமப்புறம் – 2023 கருவித்தொகுப்பை' அறிமுகப்படுத்திய நடுவண் அமைச்சகம் எது?

அ. ஜல்சக்தி அமைச்சகம் ☑

ஆ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்

✓ நடுவண் ஜல்சக்தி அமைச்சகத்தின் குடிநீர் மற்றும் சுகாதாரத்துறை 7ஆவது இந்திய நீர் வாரத்தின் இரண்டாவது நாளில், 'கிராமப்புற WASH கூட்டாண்மை – முன்னோக்கிச் செல்லும்வழி' குறித்த தொழினுட்ப அமர்வை நடத்தியது. 'WASH' என்பது நீர், தூய்மை மற்றும் நலவாழ்வு (WASH) என்பதைக் குறிக்கிறது. நடுவண் ஜல்சக்தி அமைச்சர் ஸ்வச் சர்வேக்ஷன் கிராமீன் (SSG) 2023–க்கான கருவித்தொகுப்பையும், 'Twinpit to Retrofit' அபியான் என்ற இணையதளத்தையும் தொடங்கி வைத்தார்.

3. 2022 – 'உலகப் பயணச் சந்தையை' நடத்தும் நகரம் எது?

அ. லண்டன் ☑

ஆ. பாரிஸ்

இ. நியூயார்க்

ஈ. லொசன்னே

✓ லண்டனில் நவம்பர் 07 முதல் 09 வரை நடைபெறும் உலகப் பயணச்சந்தை பொருட்காட்சி 2022இல் நடுவண் சுற்றுலா அமைச்சகம் பங்கேற்கிறது. இது மிகப்பெரிய சர்வதேச பயணக் கண்காட்சிகளில் ஒன்றாகும். இந்த ஆண்டு கண்காட்சியின் கருப்பொருள், "பயணத்தின் எதிர்காலம் இப்போது தொடங்குகிறது" என்பதாகும். கடந்த 2019ஆம் ஆண்டில், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பயணம் மற்றும் சுற்றுலாவின் பங்களிப்பு மொத்தப் பொருளாதாரத்தில் 5.19 சதவீதமாகும். கடந்த 2019ஆம் ஆண்டில், இந்திய சுற்றுலாத்துறை 79.86 மில்லியன் வேலைவாய்ப்புகளைப் (நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு) பெற்றுள்ளது.

4. 'உலக ஆழிப்பேரலை விழிப்புணர்வு நாளைக்' கடைப்பிடிக்க முதலில் பரிந்துரைத்த நாடு எது?

அ. ஜப்பான் ☑

ஆ. சீனா

இ. சுவிச்சர்லாந்து

ஈ. சுவீடன்

✓ இயற்கைப் பேரிடர் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவம்பர்.5ஆம் தேதி அன்று உலக ஆழிப்பேரலை (சுனாமி) விழிப்புணர்வு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. உலக ஆழிப்பேரலை விழிப்புணர்வு நாளானது முதலில் ஜப்பானால் பரிந்துரைக்கப்பட்டது. கடந்த 2015 டிசம்பரில், ஐநா பொதுச்சபை நவம்பர்.5ஆம் தேதியை உலக ஆழிப்பேரலை விழிப்புணர்வு நாளாக அறிவித்தது.

✓ கடந்த 2004ஆம் ஆண்டில் இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட ஆழிப்பேரலைக்கு மூன்று வாரங்களுக்குப் பிறகு, உலகநாடுகள் ஜப்பானின் கோபியில் ஒன்றுகூடி, 10 ஆண்டுகால ஹியோகோ செயல்திட்டத்தை ஏற்றுக்கொண்டன. கடந்த 100 ஆண்டுகளில், சுமார் 58 ஆழிப்பேரலைகள் 260,000 உயிர்களைப் போக்கியுள்ளன.

5. சமீபத்தில் குரோஷியாவின் ஒசிஜெக்கில் நடைபெற்ற சர்வதேச துப்பாக்கி சுடுதல் விளையாட்டு கூட்டமைப்பின் (ISSF) உலக சாம்பியன்ஷிப் ஷாட்கன் போட்டியில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?

அ. முதலாவது

ஆ. நான்காவது

இ. மூன்றாவது

ஈ. ஐந்தாவது ☑



✓ சமீபத்தில், குரோஷியாவின் ஒசிஜெக்கில் நடந்த சர்வதேச துப்பாக்கி சுடுதல் விளையாட்டு கூட்டமைப்பின் (ISSF) உலக சாம்பியன்ஷிப் ஷாட்கன் போட்டியில் இந்தியா ஒரு தங்கப்பதக்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் மற்றும் இரண்டு வெண்கலப்பதக்கங்களுடன் ஐந்தாவது இடத்தைப் பிடித்து போட்டியை நிறைவு செய்தது.

6. வடகிழக்குப் பிராந்தியத்தின் விரைவான மற்றும் ஆற்றல்வாய்ந்த மீத்திறன் கணினியான பரம்–இஷானுக்கு மாற்றாக அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மீத்திறன் கணினி எது?

அ. பரம மேகா

ஆ. பரம காமரூபா ☑

இ. பரம தேகா

ஈ. பரம்பொருள்



✓ அண்மையில், இந்தியக்குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு இந்தியாவின் அண்மைய மீத்திறன் கணினியான பரம–காமரூபாவை அறிமுகப்படுத்தினார். இது அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள வரலாற்று ரீதியாக புகழ்பெற்ற அரசான காமரூபாவின் பெயரைத்தாங்கிய உயர் செயல்திறன்கொண்ட மீத்திறன் கணினியாகும். இந்த மீத்திறன் கணினி வடகிழக்குப் பிராந்தியத்தின் விரைவான மற்றும் ஆற்றல்வாய்ந்த மீத்திறன் கணினியாக உள்ள பரம்–இஷானுக்கு மாற்றாக உள்ளது. கடந்த 2016ஆம் ஆண்டு கௌஹாத்தி ஐஐடியில் பரம்–இஷான் அறிமுகப்படுத்தப்பட்டது.

✓ தேசிய மீத்திறன் கணினி திட்டத்தின்கீழ் IIT கௌகாத்தியில் பரம்–காமரூபா நிறுவப்பட்டது; இது மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கூட்டு முயற்சியாகும். நாடு முழுவதும் இதுபோன்ற 15 மீத்திறன் கணினிகள் பயன்பாட்டில் உள்ளன.

7. வியட்நாமில் நடைபெற்ற ஆறாவது கிழக்காசிய உச்சிமாநாட்டின் கல்வியமைச்சர்கள் கூட்டத்தில் வழங்கப்பட்ட முக்கிய முனைவுகள் யாவை?

அ. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை, 2022

ஆ. அறிவு மற்றும் வேலைவாய்ப்புச் சட்டக்கொள்கை, 2022

இ. தேசிய கல்விக் கொள்கை, 2020 ☑

ஈ. மேலே உள்ள அனைத்தும்



✓ வியட்நாமின் ஹனோய் நகரத்தில் நடந்த 6ஆவது கிழக்காசிய உச்சிமாநாட்டின் கல்வியமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியா பங்கேற்றது. கல்வியமைச்சகத்தின் இணைச்செயலாளர் (சர்வதேச ஒத்துழைப்பு) நீதா பிரசாத் இந்தக் கூட்டத்தில் உரையாற்றினார். தேசிய கல்விக் கொள்கை, 2020இன் முக்கிய முனைவுகள் மற்றும் கல்வி மற்றும் ஆராய்ச்சித்துறையில் இந்தியா மற்றும் கிழக்காசிய உச்சிமாநாடு நாடுகளின் முயற்சிகள் பற்றியும் அவர் தெரிவித்தார்.

8. சரக்குப் போக்குவரவு குறியீடு – 2022இல், 'சாதனையாளர்கள்' பிரிவில் வைக்கப்பட்டுள்ள மாநிலங்கள் எவை?

அ. கேரளா

ஆ. குஜராத் ☑

இ. கர்நாடகா

ஈ. ஹரியானா



✓ நடுவண் வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகமானது நான்காவது LEADS (மாநிலங்களிடையே சரக்குப் போக்குவரவை எளிதாக்குதல்)–2022 அறிக்கையை வெளியிட்டுள்ளது. ஆந்திர பிரதேசம், அஸ்ஸாம் மற்றும் குஜராத் ஆகியவை சரக்குப் போக்குவரவு குறியீடு – 2022இல், 'சாதனையாளர்கள்' பிரிவில் வைக்கப்பட்டுள்ளன.

9. 3ஆவது உலக குச்சிப்புடி நாட்டியோத்சவமானது கீழ்க்காணும் யாரின் பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் நடத்தப்படுகிறது?

அ. பிர்ஜு மகராஜ்

ஆ. மைதிலி சந்தேல்கர்

இ. கஜனேந்திர மகாபதி

ஈ. வேம்படி சின்ன சத்தியம் ☑



✓ மூன்றாவது உலக குச்சிப்புடி நாட்டியோத்சவமானது விஜயவாடாவில் அக்டோபர்.14 அன்று தொடங்கியது. புகழ்பெற்ற குச்சிப்புடி நடனக்கலைஞர் வேம்படி சின்ன சத்யத்தின் 93ஆவது பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் மூன்று நாள் நடக்கும் விதமாக இந்த நடன விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

10. ஆந்திர பிரதேசத்தில் Dr சோபா நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்றவர் யார்?

அ. மேனகா பாணிக்ரஹி

ஆ. வெங்கடேஷ் கிரி

இ. மஹதூர் ரெட்டி

ஈ. பத்மஜா ரெட்டி ☑



✓ 3ஆவது உலக குச்சிப்புடி நாட்டியத் திருவிழாவின்போது, டாக்டர் வேம்படி சின்ன சத்தியம் வாழ்நாள் சாதனையாளர் விருது பால கொண்டலா இராவுக்கும், குமரி லங்கா அன்னபூமா தேவிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வனஜா உதய்க்கும் வழங்கப்படும். பத்மஜா ரெட்டிக்கு டாக்டர் சோபா நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருதும், வேம்படி வெங்கட் சேவா புரஸ்கார் ஸ்ரீகாந்த் இரகுபத்ருனிக்கும் வழங்கப்படும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 2021ஆம் ஆண்டுக்கான தேசிய புளோரன்ஸ் நைட்டிங் கேல் (கைவிளக்கேந்திய காரிகை) விருதுகளை இந்தியக் குடியரசுத்தலைவர் வழங்கினார்

செவிலியர்கள் மற்றும் செவிலிப்பணிகளில் ஈடுபடுவோர் சமூகத்திற்கு ஆற்றிய சிறந்த சேவைகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் நடுவண் சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சகம் கடந்த 1973ஆம் ஆண்டு தேசிய புளோரன்ஸ் நைட்டிங் கேல் விருதுகளை ஏற்படுத்தியது.

---

2. அதிகரிக்கும் காச நோய் பரவல்... பாதிப்பு விகிதம் 13% உயர்வு

தமிழ்நாட்டில் நிகழாண்டு 77,000 பேர் காசநோயால் புதிதாக பாதிக்கப்பட்டுள்ளனர். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 13 சதவீதம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. காசநோயை முழுமையாக ஒழிக்கும் நோக்கில் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. அதுமட்டுமன்றி, 2025-க்குள் அந்நோயை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்ற இலக்குடன் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அதன் பயனாக காசநோய் பாதிப்பு தொடர்பான விழிப்புணர்வு மேம்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை காசநோயைக் குணப்படுத்தும் விகிதம் கணிசமாக உயர்ந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த நோயின் தாக்கத்தால் பாதிக்கப்படும் நோயாளிகளில் 84% பேரை முதல் சிகிச்சையிலேயே குணப்படுத்துவதாகவும், தொடர் சிகிச்சைகள்மூலம் மீதமுள்ளவர்களையும் பூரண குணமாக்குவதாகவும் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. இந்நிலையில், நிகழாண்டில் தனியார், அரசு மருத்துவமனைகளில் காசநோய் பாதிப்புடன் அனுமதிக்கப்பட்டிருந்தோரின் தரவுகளை ஆய்வுசெய்தபோது நாடு முழுவதும் 10.28 இலட்சம் பேருக்கு அந்நோய் தாக்கம் இருந்தது தெரியவந்தது. கடந்த சில ஆண்டுகளாகவே உத்தர பிரதேசம், மகாராஷ்டிரம், ராஜஸ்தான், குஜராத் உள்ளிட்ட வடமாநிலங்களில்தான் காசநோய் பாதிப்பு அதிகமாக இருந்து வருகிறது. அதன் நீட்சியாகவே நிகழாண்டின் புள்ளி விவரங்களும் அமைந்துள்ளன. குறிப்பாக உத்தர பிரதேசத்தில் மட்டும் 4.27 லட்சத்துக்கும் மேற்பட்டோர் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் 77,019 பேருக்கு அந்நோயின் பாதிப்பு இருந்தது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் அந்த எண்ணிக்கை 13% குறைவாக இருந்தது. அதாவது, அந்தக் காலகட்டத்தில் தமிழகத்தில் 69,171 பேர் காசநோயால் பாதிக்கப்பட்டிருந்தனர். காசநோய்க்கும், கரோனா தொற்றுக்கும் ஒரே மாதிரியான அறிகுறிகள் இருப்பதால், பலர் முன்கூட்டியே பரிசோதனை செய்துகொண்டதுகூட அந்நோய் பாதிப்பு அதிகமாக கண்டறியப்பட்டதற்கு காரணமாக இருக்கலாம் என மருத்துவ நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

---

3. இந்தியாவுக்கு அதிக கச்சா எண்ணெய் ஏற்றுமதி: ரஷியா முதலிடம்

கடந்த அக்டோபர் மாதத்தில் இந்தியாவுக்கு அதிக கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்த நாடுகள் பட்டியலில் ரஷியா முதலிடம் பிடித்துள்ளது. பல ஆண்டுகாலமாக இந்தப் பட்டியலில் முன்னணியில் இருந்த சவூதி அரேபியா, இராக் ஆகிய நாடுகள் பின்தங்கியுள்ளன.

கடந்த 2022 மார்ச் மாத நிலவரப்படி இந்தியாவின் மொத்த கச்சா எண்ணெய் இறக்குமதியில் ரஷியாவின் பங்கு 0.2 சதவீதம் மட்டுமே இருந்து வந்தது. இதுவே அக்டோபரில் ஒரு நாளைக்கு 9,35,556 பேரல் இறக்குமதி செய்யும் அளவுக்கு உயர்ந்துவிட்டது. அக்டோபர் மாதத்தில் இந்தியாவின் ஒட்டுமொத்த கச்சா எண்ணெய் இறக்குமதியில் 22 சதவீதம் ரஷியாவில் இருந்து வந்துள்ளது. இதற்கு அடுத்து இராக்கில் இருந்து 20.5 சதவீதம், சவூதி அரேபியாவில் இருந்து 16 சதவீதம் இறக்குமதியாகியுள்ளது.

---

4. சண்டீகர் விமான நிலையத்துக்கு பகத் சிங் பெயர்: நடுவண் அரசு அறிவிப்பு வெளியீடு

சண்டீகர் சர்வதேச விமான நிலையத்தை, 'ஷாஹித் பகத் சிங் சர்வதேச விமான நிலையம்' எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக விமான போக்குவரத்துத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இப்பெயர்மாற்றம் உடனடியாக நடைமுறைக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

1. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 103ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது யாது?

அ. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையத்திற்கு அரசியலமைப்பு அந்தஸ்து

ஆ. தேசிய மகளிர் ஆணையத்திற்கு அரசியலமைப்பு அந்தஸ்து



இ. பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு (EWS) 10 சதவீத ஒதுக்கீடு ☑

ஈ. சரக்கு மற்றும் சேவை வரி

✓ 103ஆவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டம், 2019இன்மூலம் சேர்க்கை மற்றும் அரசுப்பணிகளில் EWS இடஒதுக்கீட்–டிற்கான விதியை நடுவணரசு அறிமுகப்படுத்தியது. இத்திருத்தத்திற்கு எதிராக தொடரப்பட்ட மனுக்கள் மீதான தீர்ப்பை உச்சநீதிமன்றம் அறிவித்தது. தலைமை நீதிபதி உதை உமேஷ் லலித் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு, 3:2 என்ற பிரிவின் தீர்ப்பில் EWSக்கான 10 சதவீத ஒதுக்கீட்டை உறுதிசெய்தது. தலைமை நீதிபதி திருத்தத்தை இரத்துசெய்தாலும், பெரும்பான்மை அமர்வு அச்சட்டத்தை உறுதி செய்தது.

2. 'ஃபோர்ப்ஸின்' உலகின் சிறந்த பணி வழங்குவோர் தரவரிசை – 2022இல் முதல் நூறு இடங்களுக்குள் உள்ள ஒரே இந்திய நிறுவனம் எது?

அ. TATA கன்சல்டன்சி சர்வீசஸ்

ஆ. ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் ☑

இ. ஆதித்யா பிர்லா குழுமம்

ஈ. HDFC வங்கி

✓ 'ஃபோர்ப்ஸ்' நிறுவனத்தின் உலகின் சிறந்த பணி வழங்குவோர் தரவரிசை – 2022இன்படி, ரிலையன்ஸ் தொழிற் துறைகள் இந்தியாவின் சிறந்த பணி வழங்குவோராகவும் உலகின் 20ஆவது சிறந்த பணி வழங்குவோராகவும் உள்ளது. வருவாய், லாபம் மற்றும் சந்தை மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இது நாட்டின் மிகப்பெரிய நிறுவனம் ஆகும். இந்தியாவிலிருந்து முதல் 100 இடங்களுக்குள் உள்ள ஒரே நிறுவனம் ரிலையன்ஸ் ஆகும். உலகளாவிய தரவரிசையில் தென்கொரிய நிறுவனமான சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் முதலிடத்திலும், அமெரிக்க நிறுவனங்களான மைக்ரோசாப்ட், ஐபிஎம், ஆல்பாபெட் மற்றும் ஆப்பிள் ஆகியவை அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.

3. UNFCCC–க்கான உறுப்புநாடுகளின் 27ஆவது மாநாட்டை (COP) நடத்துகிற நாடு எது?

அ. ஐக்கிய அரபு அமீரகம்

United Nations Framework Convention on Climate Change

ஆ. எகிப்து ☑

இ. ஆஸ்திரேலியா

ஈ. பிரேசில்

✓ காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பிற்கான உறுப்புநாடுகளின் 27ஆவது மாநாடு (COP), 2022 நவம்பரில் எகிப்தின் ஷர்ம் எல்–ஷேக்கில் நடைபெறுகிறது. பல்லாண்டுகால விவாதத்திற்குப் பிறகு, 'இழப்பு மற்றும் சேதம் குறித்த பிரச்சினை' முதன்முறையாக காலநிலை மாநாட்டின் முறையான பிரதான விவாதத்தில் சேர்க்கப்பட்டது. பருவநிலை பேரிடர்களால் பாதிக்கப்படும் ஏழை நாடுகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கான சர்வதேச பொறிமுறையை உருவாக்குவது குறித்து விவாதிக்க இது வழிவகுக்கும்.

4. யாரின் பிறந்தநாளில், 'ஜன்ஜாதிய கௌரவ் திவாஸ்' அனுசரிக்கப்படுகிறது?



அ. B R அம்பேத்கர் **ஆ. பிர்சா முண்டா ☑**

இ. சர்தார் வல்லபாய் படேல் ஈ. ஐயன் காளி

✓ நடுவண் கல்வி மற்றும் திறன்மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகத்தின் தலைமையில், நாடு முழுவதும் உள்ள பள்ளிகள், திறன்மேம்பாடு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் 'பழங்குடியினர் கௌரவ தின' (ஜன்ஜாதிய

கௌரவ் திவாஸ்) விழாவைச் சிறப்பாகக் கொண்டாடவுள்ளது. கடந்த ஆண்டு, அரசு நவ.15ஐ பழங்குடியினர் கௌரவ நாள் என்று அறிவித்தது. நாடு முழுவதும் உள்ள பழங்குடி சமூகத்தினரால் பகவான் என்று போற்றப்படும் பிர்சா முண்டாவின் பிறந்தநாள் நவ.15 ஆகும்.

✓ பிர்சா முண்டா ஒரு சுதந்திரப் போராட்ட வீரர், சமூக சீர்திருத்தவாதி மற்றும் நாட்டின் மதிப்பிற்குரிய பழங்குடியினத் தலைவர் ஆவார். அவர் பிரிட்டிஷ் காலனித்துவ அரசின் சுரண்டல் முறைக்கு எதிராக துணிச்சலாகப் போராடியதால், வாழ்நாள் புகழ்பெற்ற நபராக ஆனார். அவர் பெரும்பாலும், 'பகவான்' என்றே குறிப்பிடப்பட்டார்.

5. 2022இல் உலகளாவிய காலநிலை அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?

அ. UNEP

ஆ. WMO ☑

இ. FAO

ஈ. UNFCCC

✓ உலக வானிலை அமைப்பானது '2022இல் உலகளாவிய காலநிலையின் தற்காலிக நிலையை' வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, பைங்குடில் வாயுக்களின் செறிவு மற்றும் திரட்டப்பட்ட வெப்பம் ஆகியவற்றால் கடந்த எட்டு ஆண்டுகள் மிகுந்த வெப்பம் மிகுந்த ஆண்டுகளாகப் பதிவாகியுள்ளன. தீவிர வெப்ப அலைகள், வறட்சி மற்றும் பேரழிவுதரும் வெள்ளம் ஆகியவை இந்த ஆண்டு லட்சக் கணக்கானோரை பாதித்துள்ளது மற்றும் அது கோடி மதிப்புடைய பொருட் சேதத்திற்கும் காரணமாக அமைந்துள்ளதாக இந்த அறிக்கை சிறப்பித்துக் கூறியுள்ளது.

6. 2023 – AFC ஆசிய கோப்பையை நடத்துகிற நாடு எது?

அ. உக்ரைன்

ஆ. சிரியா

இ. ஈரான்

ஈ. கத்தார் ☑

AFC ASIAN CUP™

✓ 2023 – AFC ஆசிய கோப்பையானது அப்போட்டியின் 18ஆவது பதிப்பாகும். இது ஆசிய கால்பந்து கூட்டமைப்பால் நான்காண்டுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்ற ஆசியாவின் சர்வதேச ஆண்கள் கால்பந்து சாம்பியன்ஷிப் ஆகும். இது கத்தாரில் ஜூன் 16 முதல் ஜூலை 16, 2023 வரை நடைபெறும். 2019ஆம் ஆண்டிற்குப்பிறகு இந்தப் போட்டி, 24 தேசிய அணிகள் பங்கேற்கும் வண்ணம் மாற்றியமைக்கப்பட்டது. தற்போது இந்தப் போட்டியை நடத்தும் கத்தார் நடப்பு சாம்பியனாக உள்ளது.

7. அண்மையில் நடைபெற்ற முதல் தேசிய நிலக்கரி மாநாடு மற்றும் கண்காட்சி – 2022 நடைபெற்ற நகரம் எது?

அ. ஜெய்ப்பூர்

ஆ. புது தில்லி ☑

இ. ஜெய்சால்மர்

ஈ. உதய்பூர்

Coal India

✓ நிலக்கரி சுரங்க ஏலம் மற்றும் முன்கூட்டிய உற்பத்தியில் தனியார் துறையுடன் பொதுத்துறை நிறுவனங்கள் போட்டியிட நடுவண் நிலக்கரி, சுரங்கங்கள் மற்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி வலியுறுத்தியுள்ளார். புது தில்லியில் நடந்த தேசிய நிலக்கரி மாநாடு மற்றும் கண்காட்சி 2022இல் உரையாற்றிய அமைச்சர், முன்னெப்போதும் இல்லாத வகையில், சர்வதேச ரீதியில் விலை உயர்ந்துபோதும், உள்நாட்டு நிலக்கரி விலையை இந்திய நிலக்கரி நிறுவனம் உயர்த்தவில்லை என்றார். மேலும், அண்மைக் காலத்தில் நிலக்கரி உற்பத்தியை கணிசமாக அதிகரித்ததால், அனல்மின் நிலையங்கள் எதிர்கொண்ட நிலக்கரி பற்றாக்குறைக்கு தீர்வு காணப்பட்டது என்றும் அவர் கூறினார்.

✓ "இந்திய நிலக்கரித்துறை–தற்சார்பு இந்தியாவை நோக்கிய நீடிக்கவல்ல சுரங்கப்பணி" என்ற மையப்பொருளுடன் முதன்முறையாக இந்தத் தேசிய நிலக்கரி மாநாடு மற்றும் கண்காட்சி 2022–க்கு நிலக்கரி அமைச்சகத்தின் ஆதரவுடன், இந்திய தேசிய உலக சுரங்கங்கள் பேரமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

8. நெல் வைக்கோல் விரைவாக சிதைவதற்காக சமீபத்தில் உருவாக்கப்பட்ட பூஞ்சை இனங்களின் நுண்ணுயிர் கூட்டமைப்புக்கு கொடுக்கப்பட்ட பெயர் என்ன?

அ. பூசா டீகம்போசர் ☑



ஆ. பூசா டீகம்

இ. பூசா கிளின்ஸ்ட்ரா

ஈ. பூசா DPS

✓ இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகமானது, நெல் வைக்கோலை விரைவாக சிதைப்பதற்காக பூசா வகைகளின் நுண்ணுயிர் கூட்டமைப்பான பூசா டிகம்போசரை உருவாக்கியுள்ளது. இந்தக் கூட்டமைப்பைப் பயன்படுத்துவதால் வயலில் நெல் வைக்கோல் சிதைவு செயல்முறை துரிதப்படுத்தப்படுகிறது. 2021ஆம் ஆண்டில், பஞ்சாப், ஹரியானா, உத்தர பிரதேசம் மற்றும் தில்லியின் NCT ஆகியன சுமார் 5.7 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் டீகம்போசரைப் பயன்படுத்தின. செயற்கைக்கோள் படமாக்கல் மற்றும் கண்காணிப்புமூலம் கண்டறியப்பட்டபோது, டீகம்போசர் பயன்படுத்தப்பட்ட 92% பரப்பளவு களத்திலிருந்த வைக்கோல் எரிக்கப்படாமலிருந்தது.

9. "Unite for Universal Hand Hygiene" என்பது கீழ்க்காணும் எந்தச் சர்வதேச நாளுக்கானக் கருப்பொருளாகும்?

அ. உலகளாவிய கை கழுவுதல் நாள் ☑

ஆ. உலகளாவிய சுகாதார நாள்

இ. உலகளாவிய COVID வெளிப்பட்ட நாள்

ஈ. உலகளாவிய மாதவிடாய் சுகாதார நாள்



✓ உலகம் முழுவதும் அக்.15 அன்று உலகளாவிய கை கழுவும் நாளாகக் குறிக்கப்படுகிறது. நோய்களைத் தடுப்பதற்கு பயனுள்ள மற்றும் மலிவான வழியாக சோப்புகொண்டு கைகழுவுவதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வையும் புரிதலையும் அதிகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. "Unite for Universal Hand Hygiene" என்பது இந்த ஆண்டு (2022) வரும் உலகளாவிய கைகழுவும் நாளுக்கானக் கருப்பொருளாகும். உலகளாவிய கைகழுவும் கூட்டாண்மைமூலம் இந்த நாள் நிறுவப்பட்டது.

10. 'வேளாண் ஸ்டார்ட்அப் மாநாட்டை' நடத்தும் மாநிலம்/யூடி எது?

அ. கர்நாடகா

ஆ. புது தில்லி ☑

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. உத்தர பிரதேசம்



✓ புது தில்லியில் நடைபெற்ற வேளாண் ஸ்டார்ட்அப் மாநாட்டில் நடுவண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் பல்வேறு முனைவுகளை அறிவித்தார். வணிகமயமாக்கல் மற்றும் புதுமைகளை மக்கள்மயப்படுத்துவதற்காக வேளாண் துறையில் பணியாற்றும் துளிர் நிறுவல்களுக்கென ₹500 கோடி மதிப்பிலான முடுக்கி திட்டம் உருவாக்கப்படும் என அவர் அப்போது அறிவித்தார். வேளாண் துளிர் நிறுவல்களுக்கு ஆதரவளிப்பதற்காக வேளாண் அமைச்சகத்தின் கீழ் ஒரு வலையமைப்பு நிறுவப்படும் என்றும், ஒட்டுமொத்த திட்டமிடலுக்காக வேளாண் அமைச்சர் தலைமையில் ஒரு வழிகாட்டுதல் குழு அமைக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 10% இடஒதுக்கீடு செல்லும்

பொருளாதாரத்தில் நலிவடைந்த பொதுப்பிரிவினருக்கு (EWS) கல்வி, அரசு வேலைவாய்ப்புகளில் வழங்கப்படும் 10% இடஒதுக்கீடு செல்லுபடியாகும் என உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்தது. அமர்வில் இடம்பெற்றிருந்த ஐந்து நீதிபதிகளில் மூன்று பேர் 10% இடஒதுக்கீடு செல்லும் என்றும், மற்ற இருவர் இடஒதுக்கீட்டுக்கு எதிராகவும் தீர்ப்பளித்தனர். பொருளாதாரத்தில் நலிவடைந்த பொதுப்பிரிவினருக்கு அரசுக் கல்வி நிறுவனங்களிலும், அரசு வேலைவாய்ப்புகளிலும் 10% இடஒதுக்கீடு வழங்கும் நோக்கில் 103ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை மத்திய அரசு 2019–ஆம் ஆண்டில் இயற்றியது. அதன் காரணமாக ஒட்டுமொத்த இடஒதுக்கீடு 50 சதவீதத்தைக் கடந்தது.

இது இந்திரா சகானி வழக்கில் (மண்டல் வழக்கு) உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணையை மீறும் வகையில் உள்ளதால், நடுவணரசின் நடவடிக்கைக்கு எதிராகப் பல்வேறு தரப்பினர் சார்பில் மாநில உயர்நீதிமன்றங்களிலும், உச்சநீதிமன்றத்திலும் மொத்தம் 40 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

நடுவணரசின் கோரிக்கையை ஏற்று அந்த மனுக்கள் அனைத்தும் உச்சநீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டன. சமூக–கல்வி ரீதியில் பின்தங்கியுள்ளோருக்கு மட்டுமே இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், பொருளாதாரச் சூழலை அடிப்படையாகக் கொண்டு 10 சதவீத இடஒதுக்கீடு வழங்குவதற்கு மனுக்களில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த மனுக்களை தலைமை நீதிபதி யு யு லலித் தலைமையிலான 5 நீதிபதிகளைக் கொண்ட அரசியல் சாசன அமர்வு செப்.13ஆம் தேதி முதல் விசாரித்தது. விசாரணை நிறைவடைந்த நிலையில், தீர்ப்பு செப்டம்பர்.27–ஆம் தேதி ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இடஒதுக்கீடு செல்லும்: வழக்கின் தீர்ப்பை நீதிபதிகள் வழங்கினர். அரசியல் சாசன அமர்வில் இடம்பெற்றிருந்த நீதிபதிகள் தினேஷ் மகேஸ்வரி, பெலா எம் திரிவேதி, ஜெ பி பர்திவாலா ஆகியோர் EWS பிரிவினருக்கான 10% இடஒதுக்கீடு செல்லும் எனத் தீரப்பளித்தனர்.

அதேவேளையில், தலைமை நீதிபதி யு யு லலித், நீதிபதி எஸ் ரவீந்திர பட் ஆகியோர் 10 சதவீத இடஒதுக்கீடானது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு எதிராக உள்ளது எனத் தீர்ப்பளித்தனர். மொத்தமுள்ள 5 நீதிபதிகளில் 3 பேர் இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்ததால், இடபிள்யுஎஸ் பிரிவினருக்கான இடஒதுக்கீடு உச்சநீதிமன்றத்தின் ஆதரவைப் பெற்றுள்ளது.

---

2. பொதுத்துறை வங்கிகளின் நிகர லாபம் ₹40,991 கோடி: நடுவண் நிதியமைச்சர்

இந்த நிதியாண்டின் முதல் அரையாண்டில் பொதுத்துறை வங்கிகளின் நிகர லாபம் ₹40,991 கோடியாக அதிகரித்து உள்ளது என்று நடுவண் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். இந்த நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் அனைத்து பொதுத்துறை வங்கிகளின் நிகர லாபம் 50% உயர்ந்து ₹25,685 கோடியாக உள்ளது. இந்த நிதியாண்டின் முதல் அரையாண்டில், அந்த வங்கிகளின் நிகர லாபம் 31.6% உயர்ந்து ₹40,991 கோடியை எட்டியுள்ளது. கடந்த நிதியாண்டின் இரண்டாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில், இந்த நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் பாரத வங்கியின் லாபம் 74% உயர்ந்து ₹13,265 கோடியாக உள்ளது.

கனரா வங்கியின் லாபம் 89% உயர்ந்து ₹2,525 கோடியாகவும், யூகோ வங்கியின் லாபம் 145% உயர்ந்து ரூ.504 கோடியாகவும் உள்ளது. பரோடா வங்கியின் லாபம் 58.7% உயர்ந்து ₹3,312.42 கோடியை எட்டியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

---

3. ஜி–20 மாநாட்டின் இந்திய தலைமைக்கான இலச்சினை, கருப்பொருள் மற்றும் இணையதளம் வெளியிடப்பட்டது

ஜி–20 மாநாட்டின் இந்திய தலைமைக்கான இலச்சினை, கருப்பொருள் மற்றும் இணையதளத்தை இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார். இலச்சினை மற்றும் கருப்பொருளின் விளக்கம் இந்திய தேசியக்கொடியில் இடம் பெற்றுள்ள நிறங்களான ஆரஞ்சு, வெள்ளை, பச்சை மற்றும் நீல நிறங்களிலிருந்து ஜி–20 இலச்சினை வரையப்பட்டுள்ளது. இந்தியாவின் தேசிய மலரான தாமரையுடன் கூடிய புவிச்சின்னம் சவால்களுக்கு இடையேயான வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. இயற்கையுடன் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கான இந்தியாவின் புவி சார்ந்த அணுகுமுறையை பூமிச் சின்னம் பிரதிபலிக்கிறது. ஜி–20 இலச்சினைக்கு கீழே எழுதப்பட்டுள்ள "பாரத்" என்ற சொல் தேவநாகிரி முறையில் இடம்பெற்றுள்ளது.

இந்தியாவின் ஜி–20 தலைமைத்துவத்திற்கான கருப்பொருள் – வசுதைவக் குடும்பகம் அல்லது ஒரு பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம் – என்பது மகா உபநிஷத்தின் பழமையான சமற்கிருத உரையிலிருந்து எடுக்கப்பட்டது. ஜி–20 இணையதளம் இந்தியாவின் ஜி–20 தலைமைத்துவத்திற்கான இணையதளமான www.g20.in பிரதமரால் தொடங்கிவைக்கப்பட்டது. டிசம்பர் 1, 2022 அன்று ஜி–20 தலைமைத்துவதற்திற்கான இணையதளம் www.g20.org என்று மாறியுள்ளது. இதில் ஜி–20 குறித்த தகவல்கள், சரக்குப் போக்குவரத்து ஏற்பாடுகள் பற்றிய தகவல்களும் இடம் பெறும். ஜி–20 செயலி இணையதளத்துடன் 'ஜி–20 இந்தியா' என்ற திறன்பேசி செயலியும் வெளியிடப்பட்டது.

---

1. 'இந்தியாவின் தாய்மொழி' குறித்த ஆய்வை நடத்திய நடுவண் அமைச்சகம் எது?

அ. கல்வி அமைச்சகம்

ஆ. உள்துறை அமைச்சகம் ☑

இ. கலாச்சார அமைச்சகம்

ஈ. வெளியுறவு அமைச்சகம்

✓ நடுவண் உள்துறை அமைச்சகமானது 576 மொழிகளின் புல காணொளியியலுடன் இந்திய தாய்மொழி ஆய்வை நிறைவுசெய்துள்ளது. 576 மொழிகளின் ஆய்வான MHA தாய்மொழி குறித்த ஆய்வானது தேசிய தகவலியல் மையத்தில், ஒவ்வொரு தாய்மொழியின் அசல் சுவையையும் பாதுகாக்கும் நோக்கோடு ஓர் இணைய ஆவணக் கோப்பகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 2011 மொழிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்புத் தரவுகளின் பகுப்பாய்வின்படி, இந்தியாவில் 19,500 மொழிகள் அல்லது கிளைமொழிகள் தாய் மொழிகளாகப் பேசப்பட்டு வருகின்றன.

2. 2022இல் இந்தியாவின் தலைமையில் இருக்கும் G20 அமைப்பின் கருப்பொருள் என்ன?

அ. ஜன் பகிதாரி

ஆ. வசுதைவ குடும்பகம் ☑

இ. வாழ்க்கை (சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை)

ஈ. பாரத மாதா

✓ ஜி–20 மாநாட்டின் இந்திய தலைமைக்கான இலச்சினை, கருப்பொருள் மற்றும் இணையதளத்தை இந்தியப்பிரதமர் நரேந்திர மோதி வெளியிட்டார். இந்திய தேசியக்கொடியில் இடம்பெற்றுள்ள நிறங்களிலிருந்து ஜி–20 இலச்சினை வரையப்பட்டுள்ளது. இயற்கையுடன் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கான இந்தியாவின் புவிசார் அணுகுமுறையை பூமிச்சின்னம் பிரதிபலிக்கிறது. G20 இலச்சினைக்குக் கீழே எழுதப்பட்டுள்ள "பாரத்" என்ற சொல் தேவநாகிரி முறையில் இடம்பெற்றுள்ளது. இந்தியாவின் G20 தலைமைத்துவத்திற்கான கருப்பொருள் – வசுதைவக் குடும்பகம் அல்லது ஒரு பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம் – என்பது மகா உபநிஷத்தின் பழமையான சமற்கிருத உரையில் இருந்து எடுக்கப்பட்டது.

3. 'தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகளானது' கீழ்க்காணும் எத்துறையில் செய்த சிறந்த சேவைகளுக்கான அங்கீகாரமாக வழங்கப்படுகின்றன?

அ. பொருளாதாரம்

ஆ. கலை மற்றும் கலாச்சாரம்

இ. செவிலிப்பணி ☑

ஈ. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்



✓ கடந்த 2021ஆம் ஆண்டுக்கான தேசிய புளோரன்ஸ் நைட்டிங் கேல் (கைவிளக்கேந்திய காரிகை) விருதுகளை செவிலியர்களுக்கு குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு வழங்கினார். செவிலியர்கள் மற்றும் செவிலிப்பணிகளில் ஈடுபடுவோர் சமூகத்திற்கு ஆற்றிய சிறந்த சேவைகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் நடுவண் சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சகம் கடந்த 1973ஆம் ஆண்டு தேசிய புளோரன்ஸ் நைட்டிங் கேல் விருதுகளை ஏற்படுத்தியது.

4. இந்தியா, அண்மையில் எந்த நாட்டுடன் இணைந்து, 'இளம் ஆராய்ச்சியாளர்களின் வாரம் – 2022' நிகழ்ச்சியை நடத்தியது?

அ. அமெரிக்கா

ஆ. ஜெர்மனி ☑

இ. பிரான்ஸ்

ஈ. இங்கிலாந்து



✓ இளம் ஆராய்ச்சியாளர்கள் – 2022இன் இந்தியா–ஜெர்மனி வாரம் தொடங்கப்பட்டது. இந்த இரு நாடுகளைச் சேர்ந்த இளம் ஆராய்ச்சியாளர்களை ஒருங்கிணைத்து அவர்களின் ஆராய்ச்சி ஆர்வத்தை பகிர்வதும், நீண்டகால ஆராய்ச்சி பங்களிப்பை கட்டமைப்பதும் இதன் நோக்கமாகும். இதனை அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியமும் இந்தியா மற்றும் ஜெர்மன் ஆராய்ச்சி அறக்கட்டளையும் இணைந்து ஏற்பாடுசெய்தன. இந்தியா மற்றும் ஜெர்மனியைச் சேர்ந்த 30 நம்பிக்கைக்குரிய இளம் ஆராய்ச்சியாளர்கள் இரசாயன அறிவியலில் சமகால விஷயங்களைப்பற்றி விவாதிப்பார்கள். இந்த மாநாட்டின் முதன்மை குறிக்கோள், ஆரம்ப மற்றும் இடைக்கால ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளிடையே ஒத்துழைப்பை ஊக்குவிப்பதாகும்.

5. 'தேசிய உயிரி ஆற்றல் திட்டத்தை' அறிவித்துள்ள நடுவண் அமைச்சகம் எது?

அ. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ☑

ஆ. எரிசக்தி அமைச்சகம்

இ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஈ. MSME அமைச்சகம்



✓ நடுவண் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், தேசிய உயிரி எரிசக்தித் திட்டத்தின் அறிவிக்கையை வெளியிட்டது. நிதியாண்டு 2021–22 முதல் 2025–26 வரையிலான காலகட்டத்திற்கு இத்திட்டத்தை அமைச்சகம் தொடர்ந்துள்ளது. இத்திட்டத்தை இரண்டு கட்டங்களில் அமல்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ₹858 கோடியில் முதற்கட்ட பணிகளை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது. கழிவிலிருந்து எரிசக்தித் திட்டம், உயிர்மம் திட்டம் மற்றும் உயிரி எரிவாயு திட்டம் ஆகிய துணைத்திட்டங்கள் தேசிய உயிரி எரிசக்தித் திட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

6. 2022– உலக உணவுப் பாதுகாப்பு நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Safer Food, Better Health ☑

ஆ. Leave No one Behind

இ. Sustainable Food Options

ஈ. Food and Co-existence



✓ ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.7 அன்று உலக உணவுப் பாதுகாப்பு நாளாக உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. உணவினால் ஏற்படும் இடர்களைத் தடுத்தற்கும், கண்டறிதற்கும், நிர்வகிப்பதற்கும் விழிப்புணர்வை ஊக்குவிப்பதே இந்த நாளின் நோக்கமாகும். உணவுப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2018ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அவையால் இந்த நாள் அறிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு, உலக உணவு பாதுகாப்பு தினத்தின் கருப்பொருள், "பாதுகாப்பான உணவு, சிறந்த நலம்" என்பதாகும். உலக நலவாழ்வு அமைப்பின் அறிக்கையின்படி, உலகில் ஆண்டுதோறும் 600 மில்லியனுக்கும் அதிகமான நோய் பாதிப்புகள் உணவுப்பொருட்களால் பரவுகின்றன.

7. 2022 – உலக உணவு நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Safer Food, Better Health

ஆ. Leave No one Behind ☑

இ. Sustainable Food Options

ஈ. Food and Co-existence



✓ சத்தான உணவுகளை முறையாகப் பெறுவதன் அவசியத்தை எடுத்துரைப்பதற்காக ஆண்டுதோறும் அக்.16 அன்று உலக உணவு நாள் அனுசரிக்கப்படுகிறது. உணவு மற்றும் உழவு அமைப்பின் (FAO) தலைமையில் இந்த நாள் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு, உலக உணவு நாளுக்கானக் கருப்பொருள், "Leave No one Behind" என்பதாகும்.

8. 2023இல் 14ஆவது உலக நறுமணப் பொருட்கள் மாநாட்டை நடத்தும் மாநிலம் எது?

அ. புது தில்லி

ஆ. மகாராஷ்டிரா ☑

இ. கர்நாடகா

ஈ. கேரளா



✓ 14ஆவது உலக நறுமணப் பொருட்கள் மாநாடானது 2023 பிப்ரவரியில் மகாராஷ்டிர மாநிலத்தின் நவி மும்பையில் நடைபெறவுள்ளது. இந்திய நறுமணப் பொருட்கள் வாரியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட உலக நறுமணப் பொருட்கள் மாநாடு, இந்தியாவின் G20 தலைவர் பதவியேற்பை ஒட்டி நடத்தப்படும். உலக நறுமணப் பொருட்கள் மாநாட்டின் தற்போதைய பதிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கருப்பொருள், "Vision 2030: SPICES (Sustainability– Productivity – Innovation – Collaboration– Excellence and Safety)" என்பதாகும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த நிகழ்வு நறுமணப் பொருட்கள் துறைக்கான மிகப்பெரிய பிரத்யேக வணிகத்தளமாக உள்ளது.

9. CII மற்றும் IOCL ஆகியவை கீழ்க்காணும் எந்த மாநிலத்தில், 'வாயு அம்ரித்' என்ற பயிர் உயாவு மேலாண்மை முனைவைத் தொடங்குவதாக அறிவித்துள்ளன?

அ. தமிழ்நாடு

ஆ. உத்தர பிரதேசம்

இ. பஞ்சாப் ☑

ஈ. மத்திய பிரதேசம்



✓ இந்திய தொழிற்துறை கூட்டமைப்பானது இந்திய எண்ணெய் நிறுவனத்துடன் இணைந்து பஞ்சாபின் சங்ரூரில் 'வாயு அம்ரித்' என்னும் பயிர் உயாவு மேலாண்மை முனைவான தொடங்கப்பட்டது. CII ஏற்கனவே பஞ்சாப் மற்றும் ஹரியானாவில் வளிமாசைக் குறைப்பதற்காக பயிர்த்தூர்களை எரிப்பதைக் குறைப்பதற்காக பயிர் உயாவு (crop residue) மேலாண்மை முனைவை நடத்தி வருகிறது.

10. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின், 'மிகவும் பிரபலமான GI' விருதை வென்ற உணவுப்பொருள் எது?

அ. பழனி பஞ்சாமிர்தம்

ஆ. ஹைதராபாத் ஹலீம் ☑

இ. மேற்கு வங்க இரஸகுல்லா

ஈ. இரத்லாமி சேவ்



✓ நாடு முழுவதும் 15–க்கும் மேற்பட்ட உணவுப்பொருட்களுடன் நடந்த போட்டியில், 'மிகவும் பிரபலமான GI' விருதை புவிசார் குறியீட்டுடன் (GI) கூடிய புகழ்பெற்ற ஹைதராபாத் ஹலீம் பெற்றுள்ளது. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தால் வழங்கப்படும் இந்த விருது பொதுமக்களின் கருத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது. ஹைதராபாத் ஹலீம் என்பது இரமலான் மாதத்தில் செய்யப்படும் ஒரு பாரம்பரிய உணவாகும். இதற்கு கடந்த 2010ஆம் ஆண்டில் GI தகுதி கிடைத்தது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. புதிய சரணாலயமாக உருவெடுத்தது காவிரி தெற்கு வனவுயிரின சரணாலயம்: தமிழ்நாடு அரசு அறிவிப்பு

தமிழ்நாட்டின் புதிய சரணாலயமாக, காவிரி தெற்கு வனவுயிரின சரணாலயம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பை தமிழ்நாடு அரசு வெளியிட்டது.

இதுகுறித்து அரசின் செய்திக்குறிப்பு: காவிரி தெற்கு வனவுயிரின சரணாலயமானது, தமிழ்நாட்டின் காவிரி வடக்கு வனவுயிரின சரணாலயம் மற்றும் கர்நாடக மாநிலத்தின் காவிரி வனவுயிரின சரணாலயம் ஆகியவற்றை இணைக்கும் பெரிய பகுதியாக அமைந்துள்ளது. இந்தப் பகுதி சூழலியல் பாதுகாப்பு மற்றும் தாவர இனங்கள், விலங்குகளின் வாழ்விடப்பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில் முக்கியப்பகுதியாக உள்ளது. இப்பகுதியானது, தென்னிந்தியாவில் யானைகள் வாழ்விடங்களில் முக்கியமானதாகவும், காவிரி ஆற்றுப்படுகையில் வனவுயிரினங்களுக்கு முக்கிய வாழ்வாதாரமாகவும் அமைகிறது.

காவிரி தெற்கு வன உயிரின சரணாலயமானது, நீலகிரி உயிர்கோளக்காப்பகப்பகுதி வரை, தொடர்ச்சியான பாதுகாக்கப்பட்ட வனவுயிரின வாழ்விடத்தை ஏற்படுத்துகிறது. இந்தப் பகுதிகளில் புலிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது ஏற்கெனவே கணக்கெடுப்புகளின்மூலம் தெரியவந்துள்ளது. இப்போது சரணாலயமாக அறிவிக்கப்பட்டுள்ளதால், புலிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

2. 50ஆவது உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக சந்திரசூட் பதவியேற்பு

உச்சநீதிமன்றத்தின் 50ஆவது தலைமை நீதிபதியாக டி ஒய் சந்திரசூட் பதவியேற்றார். உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த யு யு லலித்தின் பதவிக்காலம் சமீபத்தில் நிறைவடைந்தது. இதையடுத்து உச்சநீதிமன்றத்தின் 50ஆவது தலைமை நீதிபதியாக டி ஒய் சந்திரசூட்டுக்கு குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்.

நீண்ட கால தலைமை நீதிபதியின் மகன்

கடந்த 1978ஆம் ஆண்டு பிப்.22-ஆம் தேதிமுதல் 1985-ஆம் ஆண்டு ஜூலை 11-ஆம் தேதி வரை, நாட்டில் நீண்ட காலம் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக பதவி வகித்தவர் ஒய் வி சந்திரசூட். அவரின் மகன் டி ஒய் சந்திரசூட்.

தீர்ப்பளித்த முக்கிய வழக்குகள்

கடந்த 2019 நவ.9-ஆம் தேதி உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் சச்சரவுக்குரிய நிலத்தில் இராமர் கோயில் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்து உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பை அளித்த ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வில் சந்திரசூட் இடம்பெற்றிருந்தார்.

சபரிமலை கோவிலுக்கு அனைத்து வயது பெண்களும் செல்லலாம் என்று உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பை அமர்வில் இடம்பெற்றிருந்த சந்திரசூட் உள்பட 4 நீதிபதிகள் வழங்கினர். முன்னாள் நீதிபதி ஹிந்து மல்ஹோத்ரா மாறுபட்ட தீர்ப்பை வழங்கினார்.

இராணுவத்தில் பெண் அதிகாரிகளுக்கு நிரந்தர ஆணையம் அமைக்கவேண்டும் என சந்திரசூட் தலைமையிலான அமர்வு தீர்ப்பளித்தது. அரசமைப்புச் சட்டப்படி ஆதார் எண் செல்லுபடியாகும் என்று உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வில் இடம்பெற்றிருந்த பெரும்பான்மை நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். எனினும் அந்த அமர்வில் இடம்பெற்ற சந்திரசூட், அரசமைப்புச் சட்டம் மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது ஆதார் என்று தீர்ப்பளித்தார்.

சட்டப்பிரிவு 377-ஐ இரத்துசெய்து, தன் பாலின சேர்க்கை குற்றமல்ல என்று உச்சநீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்தது. அந்த அமர்வில் இருந்த நீதிபதிகளில் சந்திரசூட்டும் ஒருவர்.

சட்டப்பிரிவு 497-ஐ இரத்துசெய்து, திருமணம் தாண்டிய முறையற்ற உறவு குற்றமல்ல என்று ஒருமனதாகத் தீர்ப்பளித்த 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வில் சந்திரசூட் இடம்பெற்றிருந்தார். உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக 2024 நவ.10ஆம் தேதி வரை சந்திரசூட் பதவி வகிப்பார்.

3. விண்ணில் செலுத்த தயார்நிலையில் முதல் தனியார் இராக்கெட்!

நாட்டின் முதல் தனியார் இராக்கெட்டான 'விக்ரம்–எஸ்' விண்ணில் செலுத்துவதற்கான தயார்நிலையில் உள்ளது. ஸ்கைரூட் ஏர்ஸ்பேஸ் என்ற தனியார் நிறுவனம் இந்த இராக்கெட்டை வடிவமைத்துள்ளது. நாட்டில் தனியார் நிறுவனம் சார்பில் வடிவமைக்கப்பட்டுள்ள முதல் ராக்கெட் இதுவாகும்.

---

4. எண்ம ரூபாய்: செலாவணி சந்தையின் பலம்!

கிரிப்டோகரன்சி என்பது...

மற்ற செலாவணிகள், சம்பந்தப்பட்ட நாட்டின் மத்திய வங்கியின் கட்டுப்பாட்டில் உள்ள நிலையில், கிரிப்டோ கரன்சிகள் தனிநபர்கள் அல்லது நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. அதை மையமாக வைத்தே கிரிப்டோ கரன்சிகள் அதிக அளவில் விளம்பரப்படுத்தப்பட்டன. அதிக லாபம் கிடைக்கும் என நம்பி பலரும் கிரிப்டோகரன்சிகள் மீது முதலீடுகளை மேற்கொண்டனர்.

கிரிப்டோகரன்சியின் சவால்கள்

'பிளாக்செயின்' தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் கிரிப்டோகரன்சிகளில் தரவுப் பாதுகாப்பு அதிகமாக இருக்கும். அதே வேளையில், அவை தனியாரால் நிர்வகிக்கப்படுவதால் அரசின் முடிவுகளுக்கு மாறாக பொருளாதாரத்தில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

கிரிப்டோகரன்சிகளை பயங்கரவாதக் குழுக்களும் அரசுக்கு எதிராக செயல்படும் குழுக்களும் தவறான நடவடிக்கை –களுக்காகப் பயன்படுத்தக் கூடிய அபாயம் உள்ளது. கிரிப்டோகரன்சிகளை ஒழுங்குபடுத்துவது அரசுகளுக்கு மிகப் பெரிய சவாலாக இருக்கும்.

எண்ம செலாவணி

கிரிப்டோகரன்சிகள் மீதான முதலீடுகள் அதிகரித்ததையடுத்து, அவற்றை ஒழுங்குபடுத்த வேண்டும் என்ற கோரிக்கை பல்வேறு தரப்பில் இருந்தும் அரசுக்கு எழுந்தது. அதையடுத்து, நடப்பு 2022–23ஆம் நிதியாண்டில் எண்ம செலாவணியை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிடும் என மத்திய அரசு பட்ஜெட் தாக்கலின்போது அறிவித்தது.

எண்ம ரூபாய்

பட்ஜெட்டில் அறிவித்தபடியே எண்ம ரூபாயை ஆர்பிஐ அறிமுகப்படுத்தியுள்ளது. மொத்த விலை அடிப்படையிலான எண்ம ரூபாயானது சோதனை அடிப்படையில் நவ.1–ஆம் தேதி முதல் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. நாம் அன்றாடம் பயன்படுத்தும் ரூபாயைப் போன்றதே எண்ம ரூபாயும். ஒரே ஒரு வித்தியாசம் அது எண்ம வடிவில் இருக்கும். அவ்வளவே.

கிரிப்டோகரன்சியும் எண்ம ரூபாயும்

கிரிப்டோகரன்சியையும் எண்ம ரூபாயையும் தொடர்புபடுத்த முடியாது. கிரிப்டோகரன்சியை தனியாரே நிர்வகித்து வரும் நிலையில், எண்ம ரூபாய் ஆர்பிஐ–இன் அங்கீகாரத்தைப் பெற்றது. கிரிப்டோகரன்சிகளால் நாட்டின் நிதி நிலைமையில் சீரற்ற தன்மை நிலவ வாய்ப்புள்ளது. ஆனால், எண்ம ரூபாயானது நாட்டின் நிதிநிலைத்தன்மையை மேலும் வலுப்படுத்தவே செய்யும்.

கிரிப்டோகரன்சிகளை தேசப்பாதுகாப்புக்கு எதிராகப் பயன்படுத்த வாய்ப்புகள் அதிகம். ஆனால், எண்ம ரூபாயின் பரிவர்த்தனையை RBI தொடர்ந்து கண்காணிக்கும் என்பதால், தேசப்பாதுகாப்பு சார்ந்த சவால்கள் அதில் இல்லை.

எண்ம ரூபாயின் பயன்

நாட்டில் தற்போது நடைமுறையிலிருக்கும் செலாவணிகளுக்குக் கூடுதல் வலுசேர்க்கும் வகையில் எண்ம ரூபாய் செயல்படும். தற்போதைய செலாவணிகளுக்கு மாற்றாக எண்ம ரூபாய் இருக்காது. செலாவணி சந்தையையும் எண்ம ரூபாய் வலுப்படுத்தும்.

ரூபாய் நோட்டுகளை அச்சிடுவதற்கான காகிதமும், மையும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. மக்களிடையே எண்ம ரூபாயின் பயன்பாடு அதிகரித்தால், ரூபாய் நோட்டு அச்சிடுவதற்கான தேவை குறைவதோடு அதற்கான செலவும் பெருமளவில் குறையும். அதைக் கருத்தில்கொண்டு எண்ம ரூபாயின் பயன்பாட்டை RBI ஊக்குவித்து வருகிறது.

எண்ம ரூபாயின் வகைகள்

1. சில்லறை விலை அடிப்படையிலான எண்ம ரூபாயை அனைவராலும் பயன்படுத்த முடியும்.
2. மொத்த விலை அடிப்படையிலான எண்ம ரூபாயை அனுமதி பெற்ற நிதி நிறுவனங்களால் மட்டுமே பயன்படுத்த முடியும்.

மொத்த விலை எண்ம ரூபாயின் பயன்பாடு

முதற் கட்டமாக அரசின் நிதிப்பத்திரங்களை மொத்தமாகக் கொள்முதல் செய்யும் நடவடிக்கைகளில் எண்ம ரூபாயின் பயன்பாட்டுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அரசு நிதிப்பத்திரங்களை மொத்தமாகக் கொள்முதல் செய்யும் வங்கிகள் சோதனை அடிப்படையில் எண்ம ரூபாயைப் பயன்படுத்தலாம்.

அனுமதிக்கப்பட்டுள்ள வங்கிகள்

பாரத வங்கி, பரோடா வங்கி, யூனியன் வங்கி, HDFC, ICICI, கோட்டக் மகிந்திரா, YES வங்கி, IDFC, HSBC ஆகிய 9 வங்கிகளுக்கு சோதனை அடிப்படையிலான எண்ம ரூபாயின் பயன்பாட்டில் பங்கேற்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

சில்லறை விலை எண்ம ரூபாயின் பயன்பாடு

சில்லறை வாடிக்கையாளர்களுக்கான எண்ம ரூபாயின் சோதனை பயன்பாடு நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளில் ஒரு மாதத்துக்குள் தொடங்கப்படவுள்ளது. இந்தச் சோதனைகளின் அடிப்படையில் எண்ம ரூபாயின் பயன்பாடு மேம்படுத்தப்பட்டு, முழு நேரப் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படவுள்ளது.

ரூபாய்–எண்ம ரூபாய் பரிவர்த்தனை

நாம் தற்போது பயன்படுத்தும் ரூபாய் நோட்டுகளைக்கொண்டு எண்ம ரூபாயைப் பரிமாறிக்கொள்ள முடியும். எண்ம ரூபாயானது ஆர்பிஐ–இன் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதால், ரூபாயை வழக்கமாகப் பயன்படுத்துவதைப் போலவே எண்ம ரூபாயையும் பயன்படுத்த முடியும்.

1. 'அனைத்து சவால்களுக்கும் போக்குவரத்து நிலை–2 மற்றும் குடிமக்கள் கருத்தாய்வு–2022'ஐ அறிமுகப்படுத்திய நடுவண் அமைச்சகம் எது?

அ. கல்வி அமைச்சகம்

ஆ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑

இ. கலாச்சார அமைச்சகம்

ஈ. வெளியுறவு அமைச்சகம்



✓ நடுவண் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, 'அனைத்து சவால்களுக்கும் போக்குவரத்து நிலை–2 மற்றும் குடிமக்கள் கருத்தாய்வு – 2022'ஐ மெய்நிகராக தொடங்கினார். 'அனைத்து சவால் –களுக்கும் போக்குவரத்து நிலை–2' ஆனது பொதுப்போக்குவரத்தை மேம்படுத்துவதற்கான டிஜிட்டல் தீர்வுகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நாற்பத்தாறு நகரங்களிலுள்ள போக்குவரத்து பிரச்சனைகளுக்குத் தீர்வுகளை உருவாக்குவதற்காக நிலை–2 துளிர் நிறுவல்களுக்காக இது தொடங்கப்பட்டுள்ளது.

✓ குடிமக்கள் கருத்தாய்வானது 264 நகரங்களுக்காக வாழ்வதற்கெளிய நகரங்கள் குறியீடு–2022இன்கீழ் தங்கள் நகரத்தைப் பற்றிய குடிமக்களின் கருத்துக்களைப் பதிவு செய்வதற்காக தொடங்கப்பட்டுள்ளது.

2. 'பிரதமர் கதி சக்தி பன்மாதிரி நீர்வழிகள் உச்சிமாநாடு' நடத்தப்படுகிற நகரம் எது?

அ. புனே

ஆ. கொல்கத்தா

இ. வாரணாசி ☑

ஈ. அகமதாபாத்

PM GatiShakti National Master Plan for Multi-Modal Connectivity

✓ மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரவு மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின்கீழ் இந்திய நீர்வழிப் போக்குவரவு ஆணையம், நவ.11 – 12 ஆகிய தேதிகளில், 'பிரதமர் விரைவு சக்தி பல்வேறு போக்குவரத்து நீர்வழி உச்சிமாநாட்டை' வாரணாசியில் ஏற்பாடு செய்துள்ளது. நீர்வழிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பான நடவடி –க்கைகள் பற்றிய பிரதமர் கதி சக்தி தேசிய பெருந்திட்டம்மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துவது இந்த மாநாட்டின் முதன்மை நோக்கமாகும்.

3. 'அடல் புதிய இந்தியா சவால்' என்பது கீழ்க்காணும் எந்த நிறுவனத்தின் முனைவாகும்?

அ. இந்திய ரிசர்வ் வங்கி

ஆ. NITI ஆயோக் ☑

இ. DRDO

ஈ. ISRO

सत्यमेव जयते NITI Aayog

✓ பெண்களை மையப்படுத்திய சாவல்களை எதிர்கொள்வதற்கான நடவடிக்கையை அடல் புத்தாக்கத் திட்டத்தை NITI ஆயோக் தொடங்கி வைத்தது. அடல் புதிய இந்தியாவின் சவால்கள் என்ற நடவடிக்கையின் இரண்டாம்கட்ட நிகழ்வாக அடல் புத்தாக்கத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. சமூகத்தை உருவாக்கும் சிற்பியாக பெண்கள் திகழ்கின்றனர் என்பதை கருத்தில்கொண்டு, அடல் புதிய இந்தியாவின் சவால்கள் என்ற நடவடிக்கைமூலம் சமூக அமைப்பில் பல்வேறு நிலையிலுள்ள பெண்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படும். குறிப்பாக, பெண்கள் நலவாழ்வு, பாதுகாப்பு, ஊரகப் பகுதியில் உள்ள பெண்களின் வாழ்க்கையை எளிதாக்குதல், தொழில்சார்ந்த கூட்டு நடவடிக்கைகள் போன்றவற்றில் புதுமைகளை புகுத்தி, தீர்வு காண்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

4. COP-27இன்போது, 'அனைவருக்குமான முன்கூட்டிய எச்சரிக்கைகளின் நிர்வாக செயல்திட்டத்தை' அறிமுகம் செய்த நிறுவனம் எது?

அ. IMF

ஆ. WEF

இ. WMO ☑

ஈ. UNEP

✓ உலக வானிலை அமைப்பானது (WMO) காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பின் உறுப்பு நாடுகளின் 27ஆவது மாநாட்டில் (COP27) நிகழ்ந்த ஒரு வட்டமேசைக் கூட்டத்தின்போது, 'அனைவருக்குமான முன்கூட்டிய எச்சரிக்கைகளின் நிர்வாக செயல்திட்டத்தை' வெளியிட்டது. WMOஇன் கூற்றுப்படி, 2027ஆம் ஆண்டுக்குள் அனைவருக்குமான முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகளை வழங்குவதற்கான தொடக்கநிலை முதலீடு கிட்டத்தட்ட $3.1 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருக்கும்.


5. அண்மைய தரவுகளின்படி, பரஸ்பர நிதியங்களின் ஊடுருவல் கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் அதிகபட்சமாக உள்ளது?

அ. மகாராஷ்டிரா ☑

ஆ. கேரளா

இ. தெலுங்கானா

ஈ. குஜராத்



✓ 2022 நவம்பர் மாத நிலவரப்படி, மகாராஷ்டிரா, புது தில்லி மற்றும் கோவா ஆகியவை இந்தியாவில் அதிக பரஸ்பர நிதிய நிறுவனங்களைக் கொண்டுள்ளன. அதிக வருவாய் நிலைகள், சிறந்த கல்வியறிவு விகிதங்கள் மற்றும் பெரு நிறுவனங்கள் மற்றும் அதிக நிகர மதிப்புள்ள தனிநபர்களின் இருப்பின் காரணமாக இவ்வாறு அதிகமாக உள்ளது. கேரளா, தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் இதன் சதவீதம் 5- 6 சதவீதமாக உள்ளது.

6. சுதேச தர்ஷன் திட்டத்துடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?

அ. வெளியுறவு அமைச்சகம்

ஆ. சுற்றுலா அமைச்சகம் ☑

இ. கலாச்சார அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

✓ மையப்பொருள் அடிப்படையிலான சுற்றுலாக்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக 2014-15இல் மத்திய சுற்றுலா அமைச்சகத்தால் சுதேச தர்ஷன் திட்டம் தொடங்கப்பட்டது. சுற்றுலாத் தலங்களை நிலையான அணுகுமுறையுடன் பொறுப்புடன் மேம்படுத்துவதற்காக அரசாங்கம் சமீபத்தில் இந்தத்திட்டத்தை சுதேச தர்ஷன் 2.0 என மறுசீரமைத்தது. தலா இரண்டு அல்லது மூவிடங்களைக்கொண்ட பதினைந்து மாநிலங்கள் இனம் காணப்பட்டுள்ளன. சுற்றுலா உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக சுற்றுலா அமைச்சகம் இத்திட்டத்திற்கு நிதியுதவியும் வழங்கும்.

7. 24 ஆண்டுகளில் இந்திய தேசிய காங்கிரசு கட்சியின் முதல் காந்தியல்லாத தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

அ. மல்லிகார்ஜுன கார்கே ☑ ஆ. சசி தரூர்

இ. ப சிதம்பரம் ஈ. அசோக் கெலாட்



✓ 24 ஆண்டுகளில் இந்திய தேசிய காங்கிரசு கட்சியின் முதல் காந்தியல்லாத தலைவராக மல்லிகார்ஜுன கார்கே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். காங்கிரசு கட்சித்தலைவருக்கான தேர்தலில் மல்லிகார்ஜுன கார்கே 9,385 வாக்குகளில் 7,897 வாக்குகள் பெற்று மற்றொரு வேட்பாளரான சசி தரூரை வீழ்த்தினார்.

8. 2022 அக்டோபர் நிலவரப்படி, புதிய வருவாய் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ. பங்கஜ் சௌத்ரி

ஆ. சஞ்சை மல்கோத்ரா ☑

இ. அஜை சேத்

ஈ. துகின் காந்தா பாண்டே



✓ நிதிச்சேவைகள் துறையின் செயலர் சஞ்சை மல்கோத்ரா புதிய வருவாய் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். நடுவணரசால் மேற்கொள்ளப்பட்ட உயர்மட்ட அதிகாரத்துவ மறுசீரமைப்பின் ஒருபகுதியாக சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் செயலராக இருந்த அரமனே கிரிதர் புதிய பாதுகாப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

9. 'கானமயில்' என்பது கீழ்க்காணும் எந்த இந்திய மாநிலம்/யூனியன் பிரதேசத்தின் மாநிலப் பறவையாகும்?

அ. பஞ்சாப்

ஆ. அந்தமான் & நிக்கோபார் தீவுகள்

இ. இராஜஸ்தான் ☑

ஈ. ஹரியானா



✓ இராஜஸ்தான் மாநிலத்தின் மாநிலப்பறவையான 'கானமயில்' இந்தியாவின் மிகவும் அருகிவிட்ட பறவையினமாக கருதப்படுகிறது. கானமயிலானது வனவுயிரிகள் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் பாதுகாக்கப்படுகிறது. ராஜஸ்தானில் சுமார் 150 கானமயில்கள் உள்ளன; அது உலகில் உள்ள கானமயில்களின் எண்ணிக்கையில் 95% ஆகும். சமீபத்தில், பாகிஸ்தானில் சில பறவைகள் காணப்பட்டன. இதன் காரணமாக அப்பறவைகள் புலம்பெயர்வதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ஐயப்படுகின்றனர். 'வனவுயிரிகளில் புலம்பெயர்ந்த உயிரினங்களைப் பாதுகாப்பதற்கான தீர்மானம்' படி, பாதுகாக்கப்பட்ட உயிரினங்களுக்கான உலகப் பட்டியலில் அது சேர்க்கப்பட்டது.

10. இராசாளிகளைப் பாதுகாப்பதற்காக குழுவொன்றை அமைத்துள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. இராஜஸ்தான்

இ. கேரளா

ஈ. கர்நாடகா



✓ இராசாளிகளைத் திறம்பட பாதுகாப்பதற்காக ஒரு நிறுவன கட்டமைப்பை அமைக்க தமிழ்நாடு அரசு மாநில அளவிலான ஒரு குழுவை அமைத்துள்ளது. 21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாட்டில் இராசாளிகள் கிட்டத்தட்ட அழிந்தேவிட்டன. கடந்த 1993 மற்றும் 2003–க்கு இடையில் இந்தியாவிலிருந்த இராசாளிகளின் எண்ணிக்கையில் 96% சரிந்தது. தேசிய அளவில் இராசாளி இனங்களைப் பாதுகாக்க நடுவண் அரசு இரண்டு செயல் திட்டங்களை அறிமுகப்படுத்தியது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. உமையாள்புரம் சிவராமன், இளையராஜாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம்: பிரதமர் மோதி வழங்குகிறார்

திண்டுக்கல் காந்திகிராம கிராமியப்பல்கலைக்கழக்கத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில், மிருதங்க வித்வான் உமையாள்புரம் சிவராமன், திரைப்பட இசையமைப்பாளர் இளையராஜா ஆகியோருக்கு கௌரவ டாக்டர் பட்டத்தை பிரதமர் நரேந்திர மோதி வழங்குகிறார்.

இசையமைப்பாளர் 'இசைஞானி' இளையராஜா (79): தேனி மாவட்டத்தை பூர்விகமாகக்கொண்ட இவர், 'அன்னக் கிளி' திரைப்படத்தின்மூலம் திரையுலகத்துக்கு அறிமுகமானவர். நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, மேற்கத்திய இசையில் முறையான பயிற்சியும், புலமையும் பெற்றவர். இவர் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி ஆகிய மொழிகளில் 1,000–க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு இசையமைத்தவர். 'பத்மபூஷண்', 'பத்ம விபூஷண்' ஆகிய இந்தியாவின் உயரிய விருதுகளைப் பெற்றுள்ளார். கலைத்துறையில் இவரது சேவைகளை கௌரவிக்கும் வகையில், கடந்த ஜூலை மாதம் மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

உமையாள்புரம் சிவராமன் (85): தஞ்சாவூர் மாவட்டத்தைச்சேர்ந்த இவர், தனது பத்தாம் வயதில் மிருதங்க வாசிப்பில் ஈடுபடத் தொடங்கினார். வாசிப்பில் புதிய உத்திகள், புதுமைகளை ஏற்படுத்திய இவர், முதன்முதலாக இழைக் கண்ணாடியால் தயாரிக்கப்பட்ட மிருதங்கத்தை அறிமுகப்படுத்தினார். பதனிட்ட தோல், பதனிடாத தோல் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மிருதங்கங்களை தனித்தனியே ஆராய்ச்சி செய்தவர் என்ற சிறப்புக்கு உரியவர். மிருதங்க வாசிப்பு தொடர்பாக பல்வேறு ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளார்.

1. உட்கட்டமைப்பு நெகிழ்திறன்மிக்க முடுக்கி நிதியத்தை அறிவித்த நிறுவனம் எது?

அ. WEF

ஆ. CDRI ☑

இ. ISA

ஈ. BIMSTEC

✓ பேரிடர் தாங்கும் உட்கட்டமைப்புக்கான கூட்டணி (CDRI) ஆனது CDRI பல்கூட்டாண்மை அறக்கட்டளை நிதியமான Infrastructure Resilience Accelerator Fund (IRAF)ஐ அறிவித்தது. இது எகிப்தின் ஷர்ம் எல் ஷேக்கில் உள்ள இந்திய அரங்கில், COP-27இல் அறிவிக்கப்பட்டது. IRAF-க்கு ஐந்து ஆண்டுகாலத்திற்கு சுமார் 50 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பில் நிதிப்பொறுப்புகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன.

2. உலக உற்பத்தியில் 41 சதவீதத்துடன் கம்பு உற்பத்தியில் முன்னணியில் உள்ள நாடு எது?

அ. சீனா

ஆ. இந்தியா ☑

இ. வங்காளதேசம்

ஈ. இந்தோனேசியா



✓ உலக அளவில் தினை உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ளது; உலக உற்பத்தியில் 41 சதவீத பங்கை இந்தியா கொண்டுள்ளது. தினை ஏற்றுமதியை ஊக்குவிக்க வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்கள் மற்றும் உலகளாவிய சில்லறை விற்பனை பல்பொருள் அங்காடிகளை ஈடுபடுத்த இந்திய அரசாங்கம் ஓர் உத்தியை வகுத்துள்ளது. லூலூ குழுமம் மற்றும் வால்மார்ட் போன்ற முதன்மை சர்வதேச சில்லறை விற்பனை பல்பொருள் அங்காடிகள், தினைகளை வர்த்தகம் செய்வதற்கும் விளம்பரப்படுத்துவதற்குமாக இணைக்கப்படும்.

3. QS ஆசிய பல்கலைக்கழக தரவரிசையில் இந்திய அளவில் முதலிடத்தில் உள்ள நிறுவனம் எது?

அ. ஐஐடி தில்லி

ஆ. ஐஐடி மெட்ராஸ்

இ. ஐஐடி பாம்பே ☑

ஈ. IISc பெங்களூரு

✓ Quacquarelli Symonds (QS) ஆசிய பல்கலைக்கழக தரவரிசையின் 2023 பதிப்பில் மொத்தம் 118 இந்தியப் பல்கலைக் கழகங்கள் இடம்பெற்றுள்ளன. ஐஐடி பாம்பே இந்த ஆண்டு 40ஆவது இடத்தில் உள்ளது. இது இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கும் நிறுவனமாகும். ஐஐடி-பாம்பேக்கு அடுத்தபடியாக ஐஐடி தில்லி (46), இந்திய அறிவியல் நிறுவனம், பெங்களூரு (IISc) (52) மற்றும் ஐஐடி மெட்ராஸ் (59) ஆகியவை உள்ளன. முதல் 10 இடங்களுள், ஐந்து பல்கலைக்கழகங்கள் சீனாவைச் சேர்ந்தவையாகும்.

4. 2023 IBA பெண்கள் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டிகளை நடத்தவுள்ள ஆசிய நாடு எது?

அ. இலங்கை

ஆ. பாகிஸ்தான்

இ. இந்தியா ☑

ஈ. நேபாளம்



✓ 2023 IBA பெண்கள் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பை நடத்தும் நாடாக இந்தியா அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச குத்துச்சண்டை சங்கம் (IBA) மற்றும் இந்திய குத்துச்சண்டை கூட்டமைப்பு (BFI) இடையே இந்த நிகழ்வு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது. இது இந்தியாவில் நடத்தப்படும் மூன்றாவது மகளிர் உலக சாம்பியன்ஷிப் மற்றும் கடந்த ஆறு ஆண்டுகளில் நடத்தப்படும் இரண்டாவது போட்டியாகும்.

5. மத்திய கிழக்குப் பசுமை முனைவைத் தொடங்கியுள்ள நாடு எது?

அ. ஓமன்

ஆ. ஐக்கிய அரபு அமீரகம்

இ. சௌதி அரேபியா ☑

ஈ. பஹ்ரைன்

✓ சௌதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான், அடுத்த பத்தாண்டுகளில், 'மத்திய கிழக்குப்பசுமை முயற்சிக்கு' $2.5 பில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்குவதாகவும், அதன் தலைமையகத்தை நடத்துவதாகவும் கூறினார். பிராந்திய கரியமில வாயு உமிழ்வைக் குறைக்கும் முயற்சிகளின் ஒருபகுதியாக, மத்திய கிழக்குப்பசுமை முயற்சி–2021இல் பட்டத்து இளவரசரால் இது தொடங்கப்பட்டது. பிராந்திய கைட்ரோகார்பன் உற்பத்தியிலிருந்து 60%க்கும் அதிகமான கரியமில வாயு உமிழ்வைக் குறைப்பதை இந்த முயற்சி தனது நோக்கமாகக்கொண்டுள்ளது.

6. பிரதமர் கிராம சதக் யோஜனா (PMGSY)–III ஆனது கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் தொடங்கப்பட்டது?

அ. குஜராத்

ஆ. ஹிமாச்சல பிரதேசம் ☑

இ. சிக்கிம்

ஈ. கேரளா

✓ பிரதமர் கிராம சதக் யோஜனா (PMGSY)–III'ஐ ஹிமாச்சல பிரதேசத்தின் சம்பாவில் பிரதமர் நரேந்திர மோதி தொடங்கி வைத்தார். இது மாநிலத்தில் சுமார் 3125 கிலோமீட்டர் சாலைகளை மேம்படுத்தப்படும். மாநிலத்தின் 15 எல்லைகள் மற்றும் தொலைதூரத் தொகுதிகளில் உள்ள 440 கிலோமீட்டர் சாலைகளை மேம்படுத்துவதற்காக இக்கட்டத்தின் கீழ் ₹420 கோடிக்கும் மேல் நடுவணரசால் ஒதுக்கப்பட்டுள்ளது.

7. 'பிரதமர் ஆவாஸ் யோஜனா–நகர்ப்புற (PMAY–U) விருதுகள் – 2021இல்' முதலிடம் பிடித்த மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. மத்திய பிரதேசம்

இ. உத்தர பிரதேசம் ☑

ஈ. ஆந்திர பிரதேசம்

✓ 'பிரதமர் ஆவாஸ் யோஜனா–நகர்ப்புற (PMAY–U) விருதுகள் – 2021இல் உத்தர பிரதேச மாநிலம் முதலிடத்தைப் பிடித்தது. அதைத்தொடர்ந்து மத்திய பிரதேச மாநிலமும் தமிழ்நாடும் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன. குஜராத் மாநிலம் ஐந்து சிறப்புப்பிரிவு விருதுகளைப்பெற்றது. ஜம்மு–காஷ்மீரானது தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி மற்றும் டாமன் மற்றும் டையூவுடன் இணைந்து, 'சிறந்த செயல்திறன்கொண்ட யூனியன் பிரதேசம்' எனத் தேர்ந்தெடுக்கப்பட்டது. 1.23 கோடி வீடுகள் இத்திட்டத்தின்கீழ் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டன. இதில் 64 இலட்சம் ஏற்கெனவே கட்டிமுடிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

8. Launch Vehicle Mark 3 (LVM3) திட்டத்துடன் தொடர்புடைய நாடு எது?



அ. அமெரிக்கா **ஆ. இந்தியா ☑**

இ. சீனா ஈ. இஸ்ரேல்

✓ இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் ஏவுகல வாகனம் மார்க் 3 (LVM3) திட்டமானது ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து 36 OneWeb Gen–1 செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவும். LVM3 என்பது விண்வெளித் துறையின் கீழுள்ள நடுவண் பொதுத்துறை நிறுவனமான நியூ ஸ்பேஸ் இந்தியா லிட்இன் (NISL) பிரத்யேக வணிக ரீதியான செயற்கைக்கோள் ஏவுதல் திட்டமாகும். NSILமூலம் வணிக ரீதியாக LVM3 ஏவப்படுவது இதுவே முதன்முறையாகும்.

9. 'Using Technology to Improve a Billion Livelihoods' என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?

அ. ஆசிய வளர்ச்சி வங்கி

ஆ. உலக பொருளாதார மன்றம் ☑

இ. பன்னாட்டு செலாவணி நிதியம்

ஈ. உலக வங்கி

✓ அதானி குழுமத்துடன் இணைந்து, இந்தியாவின் நான்காவது தொழிற்புரட்சிக்கான உலக பொருளாதார மன்றத்தின் மையத்தால் தயாரிக்கப்பட்ட, 'தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒரு பில்லியன் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்' என்ற புதிய அறிக்கை குஜராத் மாநிலத்தின் காந்திநகரத்தில் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையின்படி, இந்திய வேளாண்மையின் தொழில்நுட்பம் தலைமையிலான மாற்றத்தின் மையத்தில் டிரோன்களை வைப்பதன்மூலம் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) 1–1.5 சதவீதம் வரை உயர்த்த முடியும். இது இந்தியாவில் வரும் ஆண்டுகளில் குறைந்தது ஐந்து இலட்சம் பணிவாய்ப்புகளை உருவாக்கும்.

10. இந்தியாவில் நிஹோன்சுவிற்கான புவிசார் குறியீடை (GI) நாடியுள்ள நாடு எது?

அ. சீனா

ஆ. ஜப்பான் ☑

இ. சிங்கப்பூர்

ஈ. இந்தோனேசியா



✓ புது தில்லியில் உள்ள ஜப்பான் தூதரகம், மதுரசமான நிஹோன்ஷுவுக்கு புவிசார் குறியீடு (GI) கோரி விண்ணப்பம் தாக்கல்செய்துள்ளது. ஜப்பானைச் சார்ந்த ஒரு தயாரிப்புக்கு புவிசார் அடையாளப் பதிவேட்டில் குறியீடு வேண்டி விண்ணப்பம் தாக்கல்செய்யப்படுவது இதுவே முதல்முறையாகும். நிகோன்ஷு என்பது ஜப்பானில் அரிசியைப் புளிக்கவைத்துத் தயாரிக்கப்படும் ஒரு சிறப்பு இரசமாகக் கருதப்படுகிறது. அரிசி, கோஜி–கின் (ஒருவகைப் பூஞ்சை வித்து) மற்றும் நீர் ஆகிய மூன்று முக்கிய மூலப்பொருட்கள் இதன் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்றன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மைசூரு – புரட்சித்தலைவர் டாக்டர் எம்ஜிஆர் சென்னை சென்ட்ரல் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் & காசி பாரத் கௌரவ் இரயில்களை பிரதமர் கொடியசைத்து தொடக்கி வைத்தார்

மைசூரு மற்றும் புரட்சித்தலைவர் டாக்டர் எம்ஜிஆர் சென்னை சென்ட்ரல் இடையேயான வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் இரயிலை KSR பெங்களூரு இரயில் நிலையத்தில் பிரதமர் நரேந்திர மோதி கொடியசைத்து தொடங்கி வைத்தார். இது நாட்டில் தொடங்கப்பட்ட ஐந்தாவது வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் என்பதுடன் தென்னிந்தியாவின் முதல் வந்தே பாரத் இரயிலாகும்.

'இந்தியாவில் தயாரிப்போம்' வெற்றிக்கு ஒரு சிறந்த உதாரணமாக, இந்திய ரயில்வே இந்தியாவின் முதல் உள்நாட்டு அதிவேக இரயில் – வந்தே பாரத் எக்ஸ்பிரஸை அறிமுகப்படுத்தியது; அது கான்பூர்–அலகாபாத்–வாரணாசி வழித் தடத்தில் பிப்ரவரி 15, 2019 அன்று புது தில்லியில் தொடக்கி வைக்கப்பட்டது. மேலும், வந்தே பாரத் எக்ஸ்பிரஸ்

இரயில்கள் புது தில்லி–மாதா வைஷ்ணோ தேவி கத்ரா, காந்திநகர்–அகமதாபாத்–மும்பை சென்ட்ரல், மற்றும் ஆம்ப் ஆண்டௌரா–புது தில்லி வழித்தடங்களில் தொடங்கப்பட்டுள்ளன.

---

2. ஆதார் அட்டையை 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிப்பது கட்டாயம்: புதிய ஆணை

ஆதார் அட்டைக்கான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கி, அதனை நடுவணரசு வெளியிட்டுள்ளது. அதன்படி, ஆதார் அட்டை வைத்திருப்போர், அதனை பதிவுசெய்த நாளிலிருந்து சரியாக பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை, அடையாள சான்றிதழ்களை அளித்து புதுப்பித்துக் கொள்ளவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஆதார் அட்டையில் மோசடிகள் செய்யப்படுவதைத் தடுக்கும் வகையில், ஆதார் அட்டை பெறும்போது அளித்த அடையாள சான்றிதழ்களை பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அளித்து புதுப்பித்துக் கொள்வதன்மூலம், ஆதார் அட்டையின் உண்மைத்தன்மை உறுதிசெய்யப்படும் என நடுவண் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டிருக்கும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆதார் அட்டை விவரங்களை உறுதி செய்யும் ஆவணங்களை பதிவேற்றம் செய்வதற்கான வசதியை யுஐடிஏஐ மேற்கொண்டுள்ளது. இந்த வசதி, மை ஆதார் இணையதளம், மை ஆதார் செயலி மூலமாக பயனாளர்களே செய்து கொள்ளலாம் என்றும், ஆதார் சேவை மையங்களில் நேரடியாகச் சென்றும் மேற்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுளள்து. இதன்படி, ஆதார் அட்டை வைத்திருப்போர், அவர்களது பெயரில் இருக்கும் பிழைகள், நிழற் படங்களைப் பதிவேற்றுதல், முகவரி மாற்றுதல் உள்ளிட்ட விவரங்களை செய்துகொள்ளலாம். இந்த நாள் வரை, 134 கோடி ஆதார் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

---

3. நவம்பர் 14 முதல் 16 வரை G20 மாநாடு: பிரதமர் மோதி பங்கேற்பு

இந்தோனேசியாவின் பாலியில் வரும் நவ.14 முதல் 16 வரை நடைபெறும் G20 மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோதி பங்கேற்கவுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உலகின் வளர்ச்சியடைந்த மற்றும் வளரும் நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட சர்வதேச அமைப்பான G20 அமைப்புக்கு, தற்போது இந்தோனேசியா தலைமை வகிக்கிறது. இதையொட்டி, G20 மாநாடு அந்நாட்டின் பாலியில் நடைபெறவிருக்கிறது. இம்மாநாட்டில், பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான், ஜெர்மனி பிரதமர் ஓலாப் ஷோல்ஸ் உள்ளிட்டோர் கலந்துகொள்கின்றனர்.

வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் அரிந்தம் பாக்சி கூறியதாவது:

பாலியில் நடைபெறும் மாநாட்டில், "ஒன்றாக மீண்டெழுவோம், பலத்துடன் மீண்டெழுவோம்" என்ற கருத்துருவை மையமாகக்கொண்டு உலகின் மிக முக்கியப் பிரச்னைகள் குறித்து உலகத் தலைவர்கள் விவாதிக்கவுள்ளனர். உணவு மற்றும் எரிபொருள் பாதுகாப்பு, நலம், எண்ம மாற்றம் (டிஜிட்டல் மாற்றம்) ஆகிய தலைப்புகளில் 3 அமர்வுகள் நடைபெறுகின்றன. மாநாட்டின் முடிவில் இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோ G20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை முறைப்படி பிரதமர் மோதியிடம் வழங்குவார்.

வரும் டிச.1 முதல் G20இன் தலைமைப்பொறுப்பை இந்தியா ஏற்கவுள்ளது. உலகின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 85 சதவீத பங்கைக் கொண்டுள்ள G20 அமைப்பு, உலக வர்த்தகத்தில் 75 சதவீதத்துக்கும் அதிகமான அளவில் பங்கு வகிக்கிறது. இந்த அமைப்பில் ஆர்ஜென்டீனா, ஆஸ்திரேலியா, பிரேஸில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், தென் கொரியா, மெக்ஸிகோ, ரஷியா, சௌதி அரேபியா, தென்னாப்பிரிக்கா, துருக்கி, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. உலக அளவில் 2/3 பங்கு மக்கள்தொகையை G20 நாடுகள் கொண்டுள்ளது குறிப்பிட்டத்தக்கது.

---

1. 'இந்திய உயிரியல் தரவு மையம்' தொடங்கப்பட்டுள்ள மாநிலம் எது?

அ. உத்தரகாண்ட்

ஆ. ஹரியானா ☑

இ. சிக்கிம்

ஈ. கேரளா

✓ நடுவண் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஜிதேந்திர சிங், ஹரியானா மாநிலம் பரிதாபாத்தில் வாழ்க்கை அறிவியல் தரவுகளுக்கான இந்தியாவின் முதல் தேசிய களஞ்சியமான, 'இந்திய உயிரியல் தரவு மையம்' (IBDC) திறந்து வைத்தார். IBDC ஆனது பரிதாபாத்தில் உள்ள உயிரித்தொழில்நுட்பத்தின் பிராந்திய மையத்திலும், புவனேசுவரத்தில் உள்ள தேசிய தகவலியல் மையத்தில் தரவு 'பேரிடர் மீட்பு'த்தளத்திலும் நிறுவப்பட்டது. இது சுமார் 4 பெட்டாபைட் தரவு சேமிப்புத்திறனும், 'பிரம்' உயர்செயல்திறன் கணித்தலியல் வசதியும் கொண்டுள்ளது.

2. ஆதார் விதிகளில் திருத்தத்தின்படி, ஆதார ஆவணங்களை எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிப்பது கட்டாயமாகும்?

அ. 5

ஆ. 10 ☑

இ. 20

ஈ. 25

✓ நடுவண் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் ஓர் அண்மைய அறிவிப்பின்படி, பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து பத்து ஆண்டுகள் நிறைவடைந்தவுடன் ஆதார் வைத்திருப்பவர்கள் குறைந்தபட்சம் ஒரு முறையாவது ஆதார ஆவணங்களைப் புதுப்பிப்பது கட்டாயமாகும். நடுவண் அடையாள தரவு களஞ்சியத்தில் (CIDR) ஆதார் தொடர்பான தகவல்களின் துல்லியத்தை உறுதிசெய்யும் விதமாக ஆதார் விதிமுறைகளை இந்திய அரசாங்கம் திருத்தியுள்ளது.

3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பிஹாரி புரஸ்காருடன் தொடர்புடைய துறை எது?

அ. நிர்வாகம்

ஆ. விளையாட்டு

இ. இலக்கியம் ☑

ஈ. கலாச்சாரம்



✓ பிஹாரி புரஸ்காரானது ஒவ்வோர் ஆண்டும் ஒரு இராஜஸ்தானி எழுத்தாளரின் ஹிந்தி அல்லது இராஜஸ்தானியில் கடந்த பத்து ஆண்டுகளில் வெளியிடப்பட்ட ஒரு சிறந்த படைப்புக்காக வழங்கப்படுகிறது. மூத்த எழுத்தாளர்கள் மது கங்காரியா மற்றும் Dr மாதவ் ஹடா ஆகியோருக்கு முறையே 31ஆவது மற்றும் 32ஆவது பிஹாரி புரஸ்கார் விருது வழங்கப்பட்டது. இது கடந்த 1991இல் கே கே பிர்லா அறக்கட்டளையால் நிறுவப்பட்ட மூன்று இலக்கிய விருதுகளில் ஒன்றாகும். இது பிரபல கவிஞர் பிஹாரியின் பெயரால் வழங்கப்படுகிறது.

4. அகில இந்திய வானொலிக்கு (AIR) எந்தத் தலைவர் வருகை தந்ததை நினைவுகூரும் வகையில் பொது சேவை ஒலிபரப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது?

அ. 'நேதாஜி' சுபாஷ் சந்திர போஸ்

ஆ. 'மகாத்மா' காந்தியடிகள் ☑

இ. 'அண்ணல்' அம்பேத்கர்

ஈ. ஜவஹர்லால் நேரு

✓ ஒவ்வோர் ஆண்டும் நவ.12 அன்று பொது சேவை ஒலிபரப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது. கடந்த 1947ஆம் ஆண்டு தில்லியிலுள்ள அகில இந்திய வானொலியின் அரங்கிற்கு 'மகாத்மா' காந்தியடிகள் வருகை தந்ததன் நினைவாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. பிரிவினைக்குப் பிறகு ஹரியானாவில் உள்ள குருஷேத்திரத்தில் தற்காலிகமாக குடியேறிய இடம்பெயர்ந்த மக்களுக்காக அப்போது 'மகாத்மா' காந்தியடிகள் தனது உரையை நிகழ்த்தினார்.

5. 2022 நவ.10ஆம் தேதியை, 'தினை நாள்' எனக் கடைப்பிடித்த மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. ஒடிஸா ☑

இ. கேரளா

ஈ. கர்நாடகா



✓ ஒடிஸா மாநில அரசானது இந்த ஆண்டு 2022 நவம்பர்.10ஆம் தேதியை, 'தினை நாள்' எனக் கடைப்பிடித்தது. தினையை அதிக ஊட்டச்சத்து மற்றும் சுற்றுச்சூழலுக்குகந்த உணவுப் பொருளாக ஊக்குவிப்பதே இந்த நாளின் நோக்கமாகும். ஒடிஸா அரசாங்கம் கடந்த 2017இல் ஒடிஸா மில்லட் மிஷனை (OMM) அறிமுகப்படுத்தியது. ஒடிஸா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் 2019–20இல் OMMஇன்கீழ் ₹100 கோடி நிதி ஆதரவை அறிவித்தார்.

6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற நல்லமலை வனப்பகுதி அமைந்துள்ள மாநிலம் எது?

அ. குஜராத்

ஆ. ஆந்திர பிரதேசம் ☑

இ. சிக்கிம்

ஈ. கேரளா



✓ தெலுங்கானா மற்றும் ஆந்திர பிரதேசத்தை இணைக்கும் கிருஷ்ணா ஆற்றின் குறுக்கே வடங்கள் தாங்கும் தொங்கு பாலத்தைக் கட்ட நடுவணரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஆந்திர பிரதேசத்தின் கிழக்குத்தொடர்ச்சி மலையில் உள்ள அழகிய நல்லமலை வனத்தொடரின் வழியாக இந்தப்பாலம் அமைக்கப்படும். மூன்று கிமீ நீளங்கொண்ட இந்தப்பாலம் ஹைதராபாத் மற்றும் திருப்பதி இடையேயான தூரத்தை 80 கிமீட்டராகக் குறைக்கும்.

7. இந்திய காவலர் நினைவு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. அக்டோபர்.21 ☑

ஆ. நவம்பர்.21

இ. டிசம்பர்.21

ஈ. ஜனவரி.21



✓ ஒவ்வோர் ஆண்டும் அக்.21ஆம் தேதி, 'காவலர் நினைவு நாள்' அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள், பணியின்போது உயிரிழந்த பத்து CRPF வீரர்களின் தியாகத்தை நினைவுகூரும் விதமாக அனுசரிக்கப்படுகிறது. 1959 அக்டோபர்.21 அன்று, லடாக்கிற்கு அருகிலுள்ள ஹாட் ஸ்பிரிங்ஸ் என்னும் பகுதியில் சீனப்படைகள் நடத்திய தாக்குதலில் பத்து இந்திய காவலர்கள் கொல்லப்பட்டனர்.

8. FATFஇன் சாம்பல் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இந்தியாவின் அண்டை நாடு எது?

அ. இலங்கை **ஆ. பாகிஸ்தான் ☑**

இ. மியான்மர் ஈ. நேபாளம்

✓ நிதியியல் நடவடிக்கை பணிக்குழுவானது (FATF) அண்மையில் பாகிஸ்தானை தனது சாம்பல் பட்டியலில் இருந்து நீக்கும் முடிவை அறிவித்தது. பணச்சலவை மற்றும் நிதிசார் பயங்கரவாதத்தை (AML/CFT) எதிர்த்துப் போராடுவதில் பாகிஸ்தானின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை FATF வரவேற்று பாராட்டியுள்ளது.


9. சீனாவில் மும்முறை பதவி வகித்த முதல் அதிபர் யார்?

அ. மாவோ சேதுங்

ஆ. ஹு ஜிந்தாவோ

இ. ஜீ ஜின்பிங் ☑

ஈ. சின்சோ அபே



✓ சீன அதிபர் ஜீ ஜின்பிங், பொதுவுடைமைக் கட்சியின் தலைவராக இருந்து சீன அதிபராக மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்று வரலாற்று முக்கியத்துவம் பெற்றுள்ளார். மாவோ சேதுங்கிற்குப் பிறகு நாட்டின் மிகவும் செல்வாக்கு மிக்க ஆட்சியாளராக அவர் உருவாக்கியுள்ளார். சீன பொதுவுடைமைக்கட்சி புரட்சியாளரும் சீன மக்கள் குடியரசின் நிறுவனருமான மாவோ சேதுங் கடந்த 1949 முதல் 1959 வரை இருமுறை சீனத்தை ஆட்சிசெய்துள்ளார். முன்னாள் அதிபர் ஹு ஜின்டாவோவும் 2003 முதல் 2013 வரை இருமுறை ஆட்சிசெய்துள்ளார். கடந்த 2012 முதல் சீனத்தின் அதிபராக ஜீ ஜின்பிங் உள்ளார்.

10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற அமன் செராவத் என்பாருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ. மல்யுத்தம் ☑

ஆ. மட்டைப்பந்து

இ. ஹாக்கி

ஈ. பூப்பந்து



✓ ஸ்பெயினின் பொன்டெவேத்ராவில் நடைபெற்ற U–23 உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற முதல் இந்திய மல்யுத்த வீரர் என்ற சாதனையை பதின்வயதினர் அமன் செராவத் படைத்தார். U–23 உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் – 2022இல் இந்தியா ஒரு தங்கப்பதக்கமும், ஒரு வெள்ளிப்பதக்கமும் நான்கு வெண்கலமும் என ஆறு பதக்கங்களுடன் போட்டியை நிறைவு செய்தது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்திய–பிரெஞ்சு கூட்டு விமானப்பயிற்சி கருடா–VII ஜோத்பூர் விமானப்படைத்தளத்தில் நிறைவு

ஜோத்பூரில் உள்ள விமானப்படைத்தளத்தில் நடைபெற்று வந்த இந்திய விமானப்படை (IAF) மற்றும் பிரெஞ்சு வான் மற்றும் விண்வெளிப்படை (FASF) ஆகிவற்றின் 7ஆவது கூட்டு விமானப்பயிற்சி, 'கருடா–VII' நவம்பர்.12 அன்று நிறைவடைந்தது. பிரெஞ்சு வான் மற்றும் விண்வெளிப் படையின் ரபேல் போர் விமானம் மற்றும் ஏ–330 பல்திறன் டேங்கர் போக்குவரத்து அம்சங்களுடன் கூடிய விமானம் போன்றவைகள் இந்தக்கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றது,

இந்திய விமானப்படை சார்பாக சுகோய்–30, ரபேல், தேஜாஸ் மற்றும் ஜாகுவார் போர் விமானங்கள் கலந்து கொண்டன. ஜாகுவார் போர் விமானம், இராணுவ மி–17 இரக ஹெலிகாப்டர்கள் மற்றும் புதிதாக விமானப்படையில் சேர்க்கப்பட்டுள்ள, 'பிரசந்தா' போன்றவைகள் இந்திய வான்படையின் பங்களிப்புகளாகும். கருடா–VII பயிற்சியானது, இருநாட்டு விமானப்படைகளுக்கும் தொழிற்முறையிலான தொடர்பை ஏற்படுத்தவும், செயல்பாட்டுத்திறன் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்பையும் வழங்கியது. இந்தப் பயிற்சியின் விளைவாக இருநாட்டு வான்படை வீரர்களும் வான்வெளிப்போர் நடவடிக்கைகளின் நுட்பங்களை ஆராய்ந்து, அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். மேலும் இந்த பயிற்சியானது இரு நாட்டு விமானப்படை வீரர்களுக்கு இடையேயான கலாச்சார பரிமாற்றத்திற்கான சூழ்நிலையையும் ஏற்படுத்தியது.

2. உச்ச அளவில் சர்வதேச கரியமில வாயு வெளியேற்றம்

சர்வதேச அளவிலான கரியமில வாயு (CO_2) வெளியேற்றம் நடப்பு 2022ஆம் ஆண்டில் 4,060 டன் என்ற அளவைத் தொடும் என ஐநா ஆய்வறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது. இது கடந்த 2019ஆம் ஆண்டில் பதிவான 4,090 டன் என்ற உச்ச அளவைவிட சற்றே குறைவாகும்.

ஐநா 27ஆவது பருவநிலை மாநாடு எகிப்தில் நடைபெற்று வரும் நிலையில், 'சர்வதேச கார்பன் பட்ஜெட்' என்ற ஆய்வறிக்கையின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அந்த அறிக்கையில், 'நடப்பாண்டில் சர்வதேச கரியமில வாயு வெளியேற்றம் 4,060 டன்னாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதே அளவில் கரியமில வாயு வெளியேற்றம் தொடர்ந்தால், பூமியின் வெப்பநிலையானது தொழிற்புரட்சிக்கு முந்தைய அளவைவிட 1.5° டிகிரி செல்சியஸ் அளவை இன்னும் 9 ஆண்டுகளில் எட்டிவிட 50 சதவீத வாய்ப்புள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டில் சர்வதேச கரியமில வாயு வெளியேற்றத்தில் சீனா (31 சதவீதம்), அமெரிக்கா (14 சதவீதம்), ஐரோப்பிய யூனியன் (8 சதவீதம்) ஆகியவை முன்னிலையில் உள்ளன. இந்தியா 7 சதவீத கரியமில வாயுவை வெளியேற்றியது. நடப்பாண்டில் கரியமில வாயு வெளியேற்றம் சீனாவில் 0.9 சதவீதமும், ஐரோப்பிய யூனியனில் 0.8 சதவீதமும் குறையும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. ஆனால், அமெரிக்காவில் 1.5 சதவீதமும், இந்தியாவில் 6 சதவீதமும், சர்வதேச அளவில் 1.7 சதவீதமும் அதிகரிக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

COVID தொற்றுப் பரவலைத் தடுக்க கடுமையான பொதுமுடக்க கட்டுப்பாடுகளை சீனா விதித்து வருவதால், அங்கு CO_2 வெளியேற்றம் குறையும் எனத் தெரிகிறது. அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் கரோனா கட்டுப்பாடுகளை நீக்கியுள்ளதால், மக்களின் போக்குவரத்து அதிகரித்து கரியமில வாயு வெளியேற்றம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

நிலக்கரி, கச்சா எண்ணெய் பயன்பாடு இந்தியாவில் அதிக அளவில் உள்ளதால், கரியமில வாயு வெளியேற்றமும் அதிகரிக்கவுள்ளது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மீத்தேன் வெளியேற்றம்: பைங்குடில் வாயுவான மீத்தேன் வெளியேற்ற அளவைக் கண்டறிவதற்காகப் புதிய தளத்தை ஐநா சுற்றுச்சூழல் திட்ட முகமை அறிமுகப்படுத்தவுள்ளது. அதில், வளிமண்டலத்தில் வெளியேற்றப்படும் மீத்தேன் வாயுவை செயற்கைக்கோள் அளவீடுகள் வாயிலாகக் கணக்கிட வழிவகுக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, ஐரோப்பா, ஜெர்மனி, இத்தாலி ஆகியவற்றின் விண்வெளி ஆய்வு மையங்கள் சார்பில் செயல்படும் செயற்கைக் கோள்கள் வாயிலாக மீத்தேன் வெளியேற்றம் கணக்கிடப்படவுள்ளது. தனியார் விண்வெளி ஆய்வு மையங்களின் தரவும் இதற்காகப் பயன்படுத்தப்படும். அதன்மூலம் மீத்தேன் வாயு வெளியேற்றத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசும், தொழில் நிறுவனங்களும் மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. ICC தலைவராக மீண்டும் கிரேக் பார்க்லே: ஜெய் ஷாவுக்கு முக்கிய பொறுப்பு

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC) தலைவராக நியூஸிலாந்தின் கிரேக் பார்க்லே தொடர்ந்து 2ஆவது முறையாக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். கடந்த 2020 நவம்பர் முதல் அந்தப் பொறுப்பில் இருந்த பார்க்லே, தற்போது 2024 நவம்பர் வரை மீண்டும் அந்தப் பதவியில் இருப்பார். இதனிடையே, ICCஇன் மிக முக்கியமான பிரிவாக இருக்கும் நிதி மற்றும் வர்த்தக விவகாரங்கள் குழு தலைவராக, BCCI செயலர் ஜெய் ஷா தேர்வாகியுள்ளார். ICCஇன் நிதிரீதியிலான முடிவுகள் அனைத்தும் இக்குழுவால் மேற்கொள்ளப்பட்டு, வாரியத்தால் அங்கீகரிக்கப்படுகிறது. ICCஇன் கிரிக்கெட் கமிட்டி தலைவராக, BCCI முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி தொடர்கிறார்.

---

4. தனிநபர் வருமானம் 33.4% அதிகரிப்பு: நடுவணரசு

'தேசிய உணவுப்பாதுகாப்புச்சட்டமானது கடந்த 2013-ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது முதல் இந்திய மக்கள்தொகையின் தனிநபர் வருமானம் 33.4 சதவீதம் அளவுக்கு உயர்ந்துள்ளது' என்று உச்சநீதிமன்றத்தில் நடுவணரசு தெரிவித்தது.

---

1. 2022 – பொறியாளர்கள் மாநாடு நடத்தப்பட்ட மாநிலம் எது?

அ. சென்னை

ஆ. பெங்களூரு

இ. திருவனந்தபுரம் ☑

ஈ. ஹைதராபாத்

✓ இந்திய நேஷனல் அகாடமி ஆஃப் இன்ஜினியரிங்கின் பொறியாளர்கள் மாநாடு–2022 ஆனது (EC–2022) இந்திய விண்வெளி ஆய்வு மையத்துடன் (ISRO) இணைந்து திருவனந்தபுரத்தில் உள்ள திரவ உந்து அமைப்பு மையத்தில் நடத்தப்பட்டது. இந்திய விண்வெளி ஆய்வு மையமானது (ISRO) நாட்டின் விவசாயத் துறையை ஆதரிப்பதற்காக பிரத்யேக செயற்கைக்கோள்களை முன்மொழிந்துள்ளது. முன்மொழியப்பட்டுள்ள, 'பாரத் கிரிஷி செயற்கைக்கோள்' திட்டம் குறித்து ISRO வேளாண் துறையுடன் விவாதித்து வருகிறது.

2. 'HAWK வான் பாதுகாப்பு உபகரணங்கள்' என்பது கீழ்க்காணும் எந்த நாட்டின் முதன்மைக் கருவியாகும்?

அ. ரஷ்யா

ஆ. உக்ரைன்

இ. இஸ்ரேல்

ஈ. அமெரிக்கா ☑



✓ ரஷ்யாவின் ஆளில்லா விமானம் மற்றும் கப்பல் ஏவுகணைகளின் கடுமையான தாக்குதலை எதிர்கொள்ளும் உக்ரைனுக்கு அனுப்புவதற்காக அமெரிக்கா தனது பழைய HAWK வான் பாதுகாப்பு உபகரணங்களை மீட்டெடுக்க உள்ளது. 'Homing All the Way Killer' என்பதன் சுருக்கமான HAWK, 1959இல் வியட்நாம் போரின்போது அமெரிக்க இராணுவத்தில் சேவையில் சேர்ந்தது. HAWK இடைமறிக்கும் ஏவுகணைகள் ஸ்டிங்கர் ஏவுகணை அமைப்புக்கு மேம்படுத்தப்படும். போரின் ஆரம்பத்தில் தோளில் வைத்து ஏவப்பட்ட விமான எதிர்ப்பு ஸ்டிங்கர்களை அமெரிக்கா உக்ரைனுக்கு அனுப்பியுள்ளது.

3. 2022இல் UNSCஇன் பயங்கரவாத எதிர்ப்பு கூட்டத்தை நடத்தும் நாடு எது?

அ. அமெரிக்கா

ஆ. இந்தியா ☑

இ. சீனா

ஈ. ஜப்பான்

✓ UNSCஇன் பயங்கரவாத எதிர்ப்பு கூட்டம் அக்டோபர் மாதம் மும்பை மற்றும் தில்லியில் நடத்தப்படும். "பயங்கரவாத நோக்கங்களுக்காக புதிய மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதை எதிர்ப்பது" என்பது இந்தக் கூட்டத்தின் முதன்மை கருப்பொருளாக விளங்கியது. 1) இணையம், சமூக ஊடகங்கள் உள்ளிட்ட, 2) புதிய கொடுப்பனவு தொழில்நுட்பங்கள் மற்றும் நிதி திரட்டும் முறைகள், 3) டிரோன்கள் உட்பட ஆளில்லா வான்வழி அமைப்புகள் ஆகிய மூன்று தொழில்நுட்பங்களின் விரைவான வளர்ச்சி மற்றும் அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களில் இந்தக் கூட்டம் கவனம் செலுத்துகிறது.

4. LiFE திட்டத்தின்கீழ் இந்திய நடுவணரசால் எத்தனை வாழ்க்கைமுறை நடைமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன?

அ. 50 **ஆ. 75 ☑**

இ. 100 ஈ. 200

✓ LiFE (சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கைமுறை – Lifestyle for Environment) திட்டத்தின்கீழ் காலநிலைக்கேற்ற பழக்க வழக்கங்களாக எடுத்துக்கொள்ளக்கூடிய எழுபத்தைந்து வாழ்க்கைமுறை நடைமுறைகளின் பட்டியலை நடுவண அரசு வெளியிட்டது. 75 வாழ்க்கைமுறை நடைமுறைகளின் பட்டியல் ஆற்றல், நீர்சேமிப்பு, ஒருமுறை பயன்படுத்தும் நெகிழி, நிலையான உணவு முறைகள், கழிவுக்குறைப்பு, நலமிகு வாழ்க்கை முறை மற்றும் மின்னணு–கழிவு ஆகிய ஏழு வகைகளின் கீழ் உள்ளது. பிரதமர் நரேந்திர மோதி மற்றும் ஐநா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் ஆகியோர் இணைந்து LiFE என்ற திட்டத்தைத் தொடங்கினர்.

5. மனித மற்றும் விலங்குகளின் நலத்திற்கு ஆபத்தென அஞ்சி, இந்திய அரசாங்கத்தால் சமீபத்தில் தடைசெய்யப்பட்ட களைக்கொல்லி எது?

அ. கிளைபோசேட் ☑

ஆ. அட்ராசின்

இ. குளூஃபோசினேட்

ஈ. கார்போஃபுரான்



✓ மனிதர்கள் & விலங்குகளின் நலத்திற்கு ஆபத்தென அஞ்சி, பரவலாகப் பயன்படுத்தப்படும் களைக்கொல்லியான கிளைபோசேட்டின் பயன்பாட்டை இந்திய அரசு அதிகாரப்பூர்வமாக கட்டுப்படுத்தியுள்ளது. இந்த அறிவிப்புக்குப் பிறகு, பூச்சிக்கட்டுப்பாட்டு இயக்கிகள்மூலம் மட்டுமே 'கிளைபோசேட்' பயன்படுத்தப்படும் இந்தியாவில் தேயிலைத் தோட்டங்களில், 'கிளைபோசேட்' அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. கொறித்துண்ணிகள் போன்றவற்றை கொல்வதற்கான கொடிய வேதிகளையும் அது கொண்டுள்ளது.

6. "பயங்கரவாதத்திற்கு நிதி இல்லை" என்ற தலைப்பிலான மாநாட்டை நடத்தும் நாடு எது?

அ. ரஷ்யா

ஆ. இந்தியா ☑

இ. இலங்கை

ஈ. வங்காளதேசம்

✓ பன்னாட்டு காவலகம் மற்றும் ஐநா பயங்கரவாத எதிர்ப்புக் குழுவின் கூட்டத்திற்குப் பிறகு, "பயங்கரவாதத்திற்கு நிதி இல்லை" என்ற மாநாட்டை இந்தியா நடத்தவுள்ளது. இந்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள உள்துறை அமைச்சகம், "பயங்கரவாதத்திற்கு நிதி இல்லை" என்ற தலைப்பில் மூன்றாவது மாநாட்டை புது தில்லியில் நடத்துகிறது. பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்வதை எதிர்த்துப் போராடுவது தொடர்பான விவாதங்களை முன்னெடுத்துச் செல்வதே இந்த மாநாட்டின் நோக்கமாகும். கடந்த இரண்டு மாநாடுகளிலும் இதனையே நோக்கமாகக் கொண்டு மாநாடு நடத்தப்பட்டது.

7. இந்தியாவின் பன்மாதிரி சரக்குப் போக்குவரத்துப் பூங்கா உருவாக்கப்படவுள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. குஜராத்

இ. கர்நாடகா

ஈ. மகாராஷ்டிரா



✓ ரிலையன்ஸ் தொழிற்துறைகள் நிறுவனத்திற்கு (RIL), தமிழ்நாட்டில் சென்னைக்கு அருகில் உள்ள மப்பேட்டில் முதல் பன் மாதிரி சரக்குப் போக்குவரத்துப் பூங்காவை உருவாக்குவதற்கான பணி வழங்கப்பட்டுள்ளது. 'பிரதமர் கதிசக்தி தேசிய பெருந்திட்டத்தின்கீழ், நடுவண் சாலைப்போக்குவரத்து அமைச்சகம் 35 பன்மாதிரி சரக்குப் போக்குவரத்துப் பூங்காக்களை உருவாக்கி வருகிறது. சென்னையில் சுமார் 184.27 ஏக்கர் பரப்பளவில் இந்தப் புதிய பன்மாதிரி சரக்குப் போக்குவரத்துப் பூங்கா உருவாகி வருகிறது.

8. இந்தியாவின் முதல் தனியாரால் உருவாக்கப்பட்ட ஏவுகணையின் பெயர் என்ன?

அ. ஆகாஷ்

ஆ. விக்ரம் – S ☑

இ. விக்ராந்த் – S

ஈ. சூர்யா



✓ இந்தியாவின் முதல் தனியாரால் உருவாக்கப்பட்ட ஏவுகணையான, 'விக்ரம்–S' மூன்று தாங்குசுமைகளுடன் துணை சுற்றுவட்டப்பாதையில் செலுத்தப்படவுள்ளது. ஹைதராபாத்தைச் சார்ந்த விண்வெளி துளிர் நிறுவனமான 'ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்', இதன்மூலம் இந்தியாவில் ஏவுகணையை விண்ணில் செலுத்தும் முதல் தனியார் விண்வெளி நிறுவனமாக மாறும். 'பிரரம்ப்' எனப் பெயரிடப்பட்ட இந்தத் திட்டமானது இரண்டு இந்திய மற்றும் ஒரு வெளிநாட்டு தாங்குசுமைகளைச் சுமந்துசெல்லும். இது ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ISROஇன் ஏவுதளத்தில் இருந்து ஏவப்படவுள்ளது.

9. ONGC–இன் U–கள கரையோர மையத்தை கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் பிரதமர் திறந்து வைத்தார்?

அ. தமிழ்நாடு

ஆ. ஆந்திர பிரதேசம் ☑

இ. கர்நாடகா

ஈ. மேற்கு வங்கம்



✓ ஆந்திர பிரதேச மாநிலத்தின் B R அம்பேத்கர் கோனசீமா மாவட்டத்தில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழக நிறுவனத்தின் U–கள கரையோர மையத்தை பிரதமர் நரேந்திர மோதி திறந்து வைத்தார். வங்காள விரிகுடாவில் கிருஷ்ணா–கோதாவரி ஆற்றுப்படுகையில் இந்த 'U–field' அமைந்துள்ளது. இவ்வயலிலிருந்து இயற்கை எரிவாயு பயனர்களுக்கு அனுப்பப்படுவதற்கு முன்பாக, கடலுக்கடியில் குழாய்கள்மூலம் கரையோர மையத்திற்குக் கொண்டு வரப்படும்.


10. உலகின் மிகவுயரமான வாக்குச்சாவடியான தாஷிகாங் அமைந்துள்ள மாநிலம் எது?

அ. ஹிமாச்சல பிரதேசம் ☑

ஆ. அஸ்ஸாம்

இ. சிக்கிம்

ஈ. பீகார்



✓ ஹிமாச்சல பிரதேச மாநிலத்தில் உள்ள தாஷிகாங்கில் உள்ள உலகின் மிகவுயரமான வாக்குச் சாவடியில் சுமார் 98.08 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. அந்த வாக்குச்சாவடியின் மொத்த பதிவுசெய்யப்பட்ட 52 வாக்காளர்களில், 51 பேர் வாக்களித்தனர். தாஷிகாங் 15,256 அடி உயரத்தில் அமைந்துள்ள ஓர் இடமாகும். மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் எளிதாக வாக்களிக்கும் வகையில் இந்த வாக்குச்சாவடி அமைக்கப்பட்டிருந்தது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. T20 உலகக்கோப்பை: இங்கிலாந்து சாம்பியன்ஸ்!

T20 உலகக் கோப்பை இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தானை 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்திய இங்கிலாந்து கோப்பையை வென்றது. 2009ஆம் ஆண்டுக்குப் பிறகு இங்கிலாந்து அணி இரண்டாவது முறையாக T20 உலகக் கோப்பையைக் கைப்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆட்ட நாயகன், தொடர் நாயகன் என இரு விருதுகளை வென்றார் இங்கிலாந்து ஆல்ரவுண்டர் சாம் கரண். உலகக் கோப்பைப் போட்டியை வென்ற இங்கிலாந்து அணிக்கு ₹1.6 மில்லியன் டாலர் வழங்கப்பட்டுள்ளது. அதாவது இந்திய மதிப்பில் ₹12.98 கோடி. 2ஆமிடம் பிடித்த பாகிஸ்தான் அணிக்கு இந்தத் தொகையில் பாதி கிடைத்துள்ளது. அதாவது ₹6.49 கோடி. அரையிறுதியில் தோற்ற இந்தியா, நியூசிலாந்து அணிகள் தலா ₹3.24 கோடி பெற்றுள்ளன. T20 உலகக்கோப்பைப்போட்டியின் ஒட்டுமொத்த பரிசுத்தொகை ₹45.40 கோடியாகும்.

1. இந்தியா, அண்மையில் எந்த அமைப்பின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிதியத்துக்கு $5 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்குவதாக அறிவித்தது?

அ. சார்க்

ஆ. ஆசியான் ☑

இ. G20

ஈ. ஐஎஸ்ஏ

✓ ஆசியான்–இந்தியா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிதியத்துக்கு $5 மில்லியன் அமெரிக்க டாலர்களை கூடுதலாக வழங்கவுள்ளதாக இந்தியா அறிவித்தது. பொது சுகாதாரம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் திறன்மிகு விவசாயம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதை இந்தப் பங்களிப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆசியான்–இந்தியா அறிவியல் & தொழில்நுட்ப கூட்டாண்மையானது கடந்த 1996ஆம் ஆண்டில் ASEAN India S&T பணிக்குழு (AIWGST) நிறுவப்பட்டபோது அதனுடன் சேர்ந்து நிறுவப்பட்டது.

2. 'தேசிய ஹைட்ரஜன் மிஷன்' தொடங்கப்பட்ட ஆண்டு எது?

அ. 2002

ஆ. 2007

இ. 2010

ஈ. 2021 ☑



✓ இந்தியா அண்மையில் COP–27இல் காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டில் (UNFCCC) நீண்டகால குறைந்த கரியமில வாயு (CO_2) உமிழ்வு மேம்பாட்டு உத்தியை சமர்ப்பித்தது. கடந்த 2021ஆம் ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்ட, 'தேசிய ஹைட்ரஜன் திட்டம்', இந்தியாவை பசுமையான ஹைட்ரஜன் மையமாக மாற்றுவதை நோக்கமெனக் கொண்டுள்ளது. 2025ஆம் ஆண்டுக்குள் பெட்ரோலில் கலக்கப்படும் எத்தனாலின் சதவீதத்தை 20%ஆகவும், மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிக்கவும் இந்தியா விரும்புகிறது.

3. வன்முறையைப் போற்றும் ஆயுதங்கள் மற்றும் பாடல்களை பொதுவில் காட்சிப்படுத்துவதற்கு முற்றிலும் தடை விதித்து உத்தரவிட்டுள்ள மாநிலம் எது?

அ. கேரளா

ஆ. பஞ்சாப் ☑

இ. ஜார்கண்ட்

ஈ. மேற்கு வங்காளம்



✓ பஞ்சாபின் ஆம் ஆத்மி கட்சியின் தலைமையின் கீழுள்ள அரசாங்கம் வன்முறையைப் போற்றும் ஆயுதங்கள் மற்றும் பாடல்களை பொதுவில் காட்சிப்படுத்துவதற்கு முற்றிலும் தடைவிதித்து ஆணையிட்டுள்ளது. பொதுக்கூட்டங்கள், மத வழிபாட்டுத்தலங்கள், விழாக்கள் அல்லது பிற நிகழ்ச்சிகளில் ஆயுதங்களை எடுத்துச்செல்லவோ அல்லது காட்டவோ முழுமையான தடை விதிக்கப்படும் என்றும் அந்த ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. 2022 – டுவென்டி 20 உலகக்கோப்பை பட்டத்தை வென்ற அணி எது?

அ. இங்கிலாந்து ☑

ஆ. ஆஸ்திரேலியா

இ. இந்தியா

ஈ. பாகிஸ்தான்



✓ மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடந்த போட்டியில் பாகிஸ்தானை ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி இங்கிலாந்து இரண்டாம் முறையாக டுவென்டி 20 உலகக்கோப்பை சாம்பியன்சிப்பை வென்றது. பென் ஸ்டோக்ஸ் ஆட்டமிழக்காமல் அரைசதம் அடித்து இங்கிலாந்து சாம்பியன் பட்டம் வெல்வதற்கு உதவினார். போட்டியின் ஆட்ட நாயகனாகவும், போட்டியின் நாயகனாகவும் சாம் குர்ரன் தெரிவானார்.

5. 53ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவை நடத்தும் மாநிலம் எது?

அ. மேற்கு வங்கம்

ஆ. கோவா ☑

இ. கர்நாடகா

ஈ. ஒடிஸா



✓ 53ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவானது 2022 நவம்பரில் கோவா மாநிலத்தில் நடைபெறவுள்ளது. சத்யஜித்ரே வாழ்நாள் சாதனையாளர் விருது ஸ்பானிஷ் திரைப்பட இயக்குநர் கார்லோஸ் சௌராவுக்கு வழங்கப்பட உள்ளது. இந்நிகழ்வின், 'சிறப்புக் கவனம் பெறும் நாடாக' பிரான்ஸ் உள்ளது. நடுவண் ஒலிபரப்பு மற்றும் தகவல் தொடர்பு அமைச்சகத்தின் முனைவான, '75 கிரியேட்டிவ் மைண்ட்ஸ் ஆஃப் டுமாரோ'வின் இரண்டாவது பதிப்பும் இந்தத் திருவிழாவின்போது ஏற்பாடு செய்யப்படும்.

6. SIMBEX என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடைபெறும் கடல்சார் இருதரப்புப் பயிற்சியாகும்?

அ. இலங்கை

ஆ. ஸ்வீடன்

இ. சுவிட்சர்லாந்து

ஈ. சிங்கப்பூர் ☑



✓ விசாகப்பட்டினத்தில் நடந்த சிங்கப்பூர்–இந்திய கடல்சார் இருதரப்புப்பயிற்சியில் (SIMBEX) இந்தியா மற்றும் சிங்கப்பூர் கடற்படைகள் பங்கேற்றன. இந்திய கடற்படையானது SIMBEX–2022இன் 29ஆம் பதிப்பை இரண்டு கட்டங்களாக நடத்துகிறது. விசாகப்பட்டினத்தில் துறைமுகம் சார்ந்த பயிற்சிகளும் வங்காள விரிகுடாவில் கடல்சார் பயிற்சிகளும் நடைபெறும். SIMBEX பயிற்சிகள் கடந்த 1994ஆம் ஆண்டில் தொடங்கின. இந்தப் பயிற்சி தொடக்கத்தில், 'லயன் கிங்' என்று அழைக்கப்பட்டது.

7. ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் 100% குழாய்வழி குடிநீர் இணைப்புகளை வழங்கிய மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. குஜராத் ☑

இ. கர்நாடகா

ஈ. மகாராஷ்டிரா



✓ ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் 100% குழாய்வழி குடிநீர் இணைப்புகளை குஜராத் மாநில அரசு வழங்கியுள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டில் பிரதமர் நரேந்திர மோதியால் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், 2024ஆம் ஆண்டுக்குள் ஒவ்வொரு கிராமப்புற வீட்டிற்கும் குழாய்வழி இணைப்புகள்மூலம் ஒவ்வொரு நபருக்கும் 55 லிட்டர் தண்ணீர் கிடைக்க இலக்கு வைத்துள்ளது. ஹரியானா, கோவா, தெலுங்கானா, தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி, டாமன் மற்றும் டையூ, புதுச்சேரி, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் ஏற்கனவே 100% இலக்கை எட்டியுள்ளன.

8. இந்தியாவில், 'சௌர்ய திவாஸ்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. அக்டோபர்.27 ☑ ஆ. அக்டோபர்.28

இ. அக்டோபர்.29 ஈ. அக்டோபர்.30



✓ ஜம்மு–காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில், 'சௌர்ய திவாஸ்' அக்டோபர்.27 அன்று கொண்டாடப்படுகிறது. கடந்த 1947ஆம் ஆண்டு புட்காம் வானூர்தி நிலையத்தில் இந்திய இராணுவத்தின் விமானம் தரையிறங்கியதை நினைவுகூரும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. இந்திய இராணுவமும் அக்.27ஆம் தேதியன்று காலாட்படை நாளைக் கொண்டாடுகிறது. 1947 அக்.27 அன்று, ஜம்மு–காஷ்மீரிலிருந்து பாகிஸ்தானின் படைகளை வெளியேற்றுவதற்காக இந்திய வான்படை புட்காம் விமான நிலையத்தில் வைகது இந்திய இராணுவத்துடன் கைகோர்த்தது.

9. 'லக்ஷ்மீர் பந்தர் திட்டம்' என்பது கீழ்க்காணும் எந்த மாநில அரசின் முனைவாகும்?

அ. தமிழ்நாடு

ஆ. ஆந்திர பிரதேசம்

இ. கர்நாடகா

ஈ. மேற்கு வங்கம் ☑



✓ மேற்கு வங்க மாநில அரசின், 'லக்ஷ்மீர் பந்தர் திட்டம்', பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுப்பிரிவில் 'ஸ்கோச் விருதைப்' பெற்றுள்ளது. மேற்கு வங்க மாநில அரசானது 25–60 வயதுக்குட்பட்ட குடும்பத்தலைவிக்கு நிதியுதவி வழங்கும் இந்தத் திட்டத்தை 2021 ஆகஸ்டில் தொடங்கியது. இந்தத் திட்டத்தின்கீழ், பொதுப்பிரிவுப் பெண்களுக்கு மாதந்தோறும் ₹500உம், SC மற்றும் ST பிரிவினருக்கு மாதந்தோறும் சுமார் ₹1,000உம் வழங்கப்படுகிறது.

10. அண்மையில் எந்த நாட்டுடன் இணைந்து 2022 அக்டோபரில், 'புத்தாக்க நாளை' இந்தியா அனுசரித்தது?

அ. ஆஸ்திரேலியா

ஆ. ஸ்வீடன் ☑

இ. சுவிட்சர்லாந்து

ஈ. பிரான்ஸ்



✓ ஒன்பதாம் ஆண்டு இந்தியா–ஸ்வீடன் புத்தாக்க நாளானது வெற்றிகரமாக கொண்டாடப்பட்டது. ஸ்வீடன் மற்றும் இலத்துவியாவிற்கான இந்திய தூதரகம், சுவீடன்–இந்தியா வணிக கவுன்சில் மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியானது, 'இந்தியா ஸ்வீடனின் பசுமை மாற்றத்தை துரிதப்படுத்துதல்' என்ற கருப்பொருளில் நடைபெற்றது. இதில் உலகம் முழுவதிலுமிருந்து 1,000–க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் பங்கேற்றனர். இந்தியா ஸ்வீடன் புத்தாக்க நாள் – 2022 ஆனது இந்தியா அன்லிமிடெட் மூலம் நடத்தப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்திய–அமெரிக்க கூட்டு இராணுவப் பயிற்சியான, "யுத் அப்யாஸ் – 2022" உத்தராகண்டில் தொடங்கவுள்ளது.

இந்திய–அமெரிக்க 18ஆவது கூட்டு இராணுவப் பயிற்சியான, "யுத் அப்யாஸ் – 2022" உத்தராகண்டில் இம்மாதம் தொடங்கவுள்ளது. சிறந்த நடைமுறைகள், உத்திகள், தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை பரிமாறிக் கொள்ளும் நோக்கத்துடன் இருநாடுகளின் இராணுவங்களுக்கிடையே இத்தகைய பயிற்சி ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது. முந்தைய பயிற்சி 2021 அக்டோபரில் அமெரிக்காவின் அலாஸ்காவில் நடைபெற்றது.

இப்பயிற்சியின்போது, அமைதிக்காப்பு, அமைதியை நிலைநாட்டுதல் ஆகியவை தொடர்பான செயல்பாடுகளும் இடம் பெறும். இந்தக் கூட்டுப்பயிற்சியின்போது மனிதாபிமான உதவி, பேரிடர் நிவாரண நடவடிக்கைகள் ஆகியவற்றிலும் கவனம் செலுத்தப்படும். இயற்கைச்சீற்றத்தின்போது, நிவாரண நடவடிக்கைகளை விரைவாகவும், ஒருங்கிணைந்தும் செயல்படுத்துவதற்கான பயிற்சியை இருநாடுகளும் பெறவுள்ளன.

---

2. ஜி20 மாநாடு இன்று தொடக்கம்

பெரும் பொருளாதார மதிப்புகொண்ட நாடுகளை உள்ளடக்கிய ஜி20 கூட்டமைப்பின் மாநாடு இந்தோனேசியாவில் நவ.15 அன்று தொடங்குகிறது.

சர்வதேச அளவில் ஜி20 கூட்டமைப்பு முக்கியப் பங்கு வகித்து வருகிறது. உலகின் சுமார் 85 சதவீத பொருளாதார மதிப்பையும், சுமார் 75% வர்த்தகத்தையும், சுமார் 65 சதவீத மக்கள்தொகையையும் ஜி20 கூட்டமைப்பு நாடுகளே கொண்டுள்ளன. அந்நாடுகள் எடுக்கும் முக்கிய முடிவுகள், சர்வதேச அளவில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தும்.

உணவு, எரிசக்தி பாதுகாப்பு: சர்வதேச பொருளாதார விவகாரங்கள் உள்ளிட்டவை குறித்து ஜி20 மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது. முக்கியமாக, சர்வதேச அளவில் உணவுப் பாதுகாப்பையும் எரிசக்தி பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உக்ரைன் மீதான ரஷியாவின் போரால் சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் குறித்தும் இதன்போது விவாதிக்கப்படவுள்ளது.

ஜி20 தலைமை: பாலி மாநாடு முடிவடையும்போது, ஜி20 கூட்டமைப்பின் தலைமைப்பொறுப்பை இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோ இந்தியாவிடம் ஒப்படைக்கவுள்ளார். கூட்டமைப்பின் தலைமைப்பொறுப்பை டிசம்பர் 1–ஆம் தேதியிலிருந்து இந்தியா அதிகாரபூர்வமாக ஏற்கவுள்ளது. அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெறவுள்ள ஜி20 மாநாட்டுக்கு வருகைதருமாறு உறுப்புநாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கவுள்ளேன். 'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்ற கொள்கையின் அடிப்படையில் ஜி20 கூட்டமைப்பை இந்தியா தலைமையேற்று வழிநடத்தும்.

முக்கிய விவகாரங்கள்: இந்தியாவின் ஜி20 தலைமைப் பொறுப்பு அடுத்த ஆண்டு நவம்பர் வரை நீடிக்கவுள்ளது. அந்தக் காலகட்டத்தில், பொருளாதாரப் பிரச்னைகள், பருவநிலை மாற்றம், பன்னாட்டு அமைப்புகளில் ஒத்துழைப்பு, சர்வதேச அளவில் பயங்கரவாதச் செயல்கள் அதிகரித்து வருவது, வளர்ந்துவரும் நாடுகள் எதிர்கொள்ளும் கடன் பிரச்னைகள் உள்ளிட்டவற்றுக்குத் தீர்வுகாண இந்தியா முயற்சிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

3. சரத் கமலுக்கு தயான் சந்த் கேல் ரத்னா விருது பிரக்ஞானந்தாவுக்கு அர்ஜுனா

நடுவணரசு சார்பில் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான மேஜர் தயான் சந்த் கேல் ரத்னா விருதுக்கு மூத்த டேபிள் டென்னிஸ் வீரரும் தமிழகத்தைச் சேர்ந்தவருமான சரத் கமல் தேர்வாகி உள்ளார். தமிழக செஸ் வீரர் பிரக்ஞானந்தா உள்பட 25 பேருக்கு அர்ஜுனா விருதுகளும், 4 பேருக்கு துரோணச்சார்யா விருதுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

விளையாட்டில் சிறந்து விளங்கும் வீரர்களைக் கௌரவிக்கும் வகையில் ஆண்டுதோறும் கேல் ரத்னா, அர்ஜுனா, துரோணாச்சார்யா விருதுகள், வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

துரோணாச்சார்யா விருதுகள்: ஜீவன் ஜோத் சிங் தேஜா (வில்வித்தை), முகமது அலி (குத்துச்சண்டை), சுமா சித்தார்த் (துப்பாக்கி சுடுதல்), சுஜித் மான் (மல்யுத்தம்).

வாழ்நாள் சாதனையாளர்: தினேஷ் ஜவஹர் (கிரிக்கெட்), பிமால் பிரபுல்லா (கால்பந்து), ராஜ் சிங் (மல்யுத்தம்).

தயான்சந்த் வாழ்நாள் சாதனையாளர் விருது: அஸ்வினி அக்குன்ஜி (தடகளம்), தரம்வீர் சிங் (ஹாக்கி), சுரேஷ் (கபடி), நிர் பகதூர் குருங் (பாரா தடகளம்).

மௌலானா அபுல் கலாம் ஆஸாத் விருது: குருநானக் தேவ் பல்கலைக்கழகம், அமிர்தசரஸ்.

---

4. 20–இல் FIFA உலகக்கோப்பை கால்பந்து போட்டி தொடக்கம்

உலகின் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான பிஃபா உலகக் கோப்பை போட்டிகள் கத்தாரில் வரும் நவ.20–ஆம் தேதி தொடங்கி டிச.18 வரை கோலாகலமாக நடைபெறவுள்ளது.

தென்னமெரிக்க கண்டத்தில் உள்ள உருகுவேயில் முதல் உலகக்கோப்பை போட்டி 1930–இல் நடத்தப்பட்டது. 13 நாடுகளின் அணிகள் இதில் பங்கேற்றன.

முதல் சாம்பியன் உருகுவே, நடப்புச் சாம்பியன் பிரான்ஸ்:

4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் உலகக்கோப்பை கால்பந்து போட்டியின் ஒருபகுதியாக மாண்டெவிடோ நகரில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் 93,000 ரசிகர்கள் முன்னிலையில் ஆர்ஜென்டீனாவை 4–2 என வீழ்த்தி முதல் உலகச்சாம்பியன் ஆனது உருகுவே. 2018–இல் பிரான்ஸ் அணி கோப்பையை வென்றது.

தகுதிச்சுற்று ஆட்டங்கள்:

ஆப்பிரிக்கா, ஆசியா, வடக்கு, மத்திய, தென் அமெரிக்கா, கரீபியன், ஓசேனியா, ஐரோப்பா என 6 கண்டங்கள் அளவில் தகுதிச் சுற்று ஆட்டங்கள் நடத்தப்பட்டு, உலகக் கோப்பை போட்டிக்கு முன்பு 2 ஆண்டுகள் வரை தகுதிச் சுற்று நடைபெறும். போட்டியை நடத்தும் நாடு நேரடியாக தகுதி பெற்று விடும். ஆனால் 2006 முதல் நடப்பு சாம்பியன் அணியும் தகுதிச் சுற்றில் பங்கேற்குமாறு விதிகள் திருத்தப்பட்டன.

இத்தாலிய வடிவமைப்பாளர் சில்வியோ கஸனிகா வடிவமைத்த உலகக்கோப்பைதான் தற்போது பயன்பாட்டில் உள்ளது.

32 அணிகள் பங்கேற்பு:

8 குரூப்களாக 32 அணிகள் பிரிக்கப்பட்டு தலா 4 அணிகள் இடம் பெற்றுள்ளன.

எட்டு மைதானங்கள்:

கத்தாரில் மொத்தம் 8 மைதானங்களில் உலகக்கோப்பை ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

முதல் ஆட்டம்:

நவ.20: கத்தார்–ஈக்குவடார்.

---

1. உலக மக்கள்தொகை வாய்ப்புகள் – 2022இன்படி, 2022 நவம்பர் நிலவரப்படி உலக மக்கள்தொகை எவ்வளவு?

அ. 5 பில்லியன்

ஆ. 8 பில்லியன் ☑

இ. 10 பில்லியன்

ஈ. 12 பில்லியன்



✓ "உலக மக்கள்தொகை வாய்ப்புகள் – 2022" அறிக்கையின்படி, 2022 நவம்பர்.15 அன்று உலக மக்கள்தொகை 8 பில்லியனை எட்டும். கடந்த 1950ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக கடந்த 2020இல் உலக மக்கள்தொகை வளர்ச்சி 1 சதவீதத்திற்கும் குறைவாகச் சரிந்துள்ளது என்றும் 2030ஆம் ஆண்டில் 8.5 பில்லியனாகவும், 2050ஆம் ஆண்டில் 9.7 பில்லியனாகவும், 2080ஆம் ஆண்டில் 10.4 பில்லியனாகவும் அது உயரும் என்றும் ஐநா தெரிவித்து உள்ளது. தற்போது 1.412 பில்லியன் மக்கள்தொகைகொண்ட இந்தியா, அடுத்த ஆண்டு 1.426 பில்லியன் மக்கள் தொகையுடன் சீனாவை விஞ்சும்.

2. 2022 – G20 உச்சிமாநாட்டில் ஜஸ்ட் எனர்ஜி டிரான்சிஷன் பார்ட்னர்ஷிப்பில் கையெழுத்திட்ட நாடு எது?

அ. இந்தியா

ஆ. இந்தோனேசியா ☑

இ. சீனா

ஈ. ஜப்பான்



✓ பாலியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் G–20 உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக சர்வதேச கடன் வழங்குநர்கள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த நாடுகளுடன் இந்தோனேசியா ஜஸ்ட் எனர்ஜி டிரான்சிஷன் பார்ட்னர்ஷிப்பில் கையெழுத்திட்டது. $20 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான இந்த ஒப்பந்தம், இந்தோனேசியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை அதிகரிக்கவும், நிலக்கரியைச் சார்ந்திருப்பதைக் குறைக்கவும் நிதியுதவி அளிக்கும்.

3. 'குளோபல் வீல்ட்' என்ற காப்பீட்டு முனைவை அறிவித்துள்ள உலகளாவிய கூட்டமைப்பு எது?

அ. G–7 மற்றும் V20 ☑

ஆ. WEF

இ. UNEP

ஈ. G–20 மற்றும் V20



✓ எகிப்தில் நடந்த COP27 காலநிலை உச்சிமாநாட்டில் G7 மற்றும் 58 காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய நாடுகளின் V20 குழுவால், 'குளோபல் வீல்ட்' என்ற காப்பீட்டு முனைவு அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டது. கால நிலை பேரழிவுகள் ஏற்பட்டால் குறைந்த வருமானம் மற்றும் பாதிக்கப்படக்கூடிய நாடுகளுக்கு உதவ ஜெர்மனி $172 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கும். கனடா, அயர்லாந்து மற்றும் டென்மார்க்போன்ற நாடுகள் இதுவரை மேலும் €40 மில்லியன் யூரோக்களை இம்முனைவுக்கு அளிப்பதாக உறுதியளித்துள்ளன. அமெரிக்க அதிபரும் இந்த முனைவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்தார்.


4. காலநிலை மாற்ற செயல்திறன் குறியீட்டின்படி, காலநிலை தணிப்பில் முன்னணியில் உள்ள நாடு எது?

அ. நார்வே

ஆ. ஜெர்மனி

இ. டென்மார்க் ☑

ஈ. ஆஸ்திரேலியா



✓ காலநிலை மாற்ற செயல்திறன் குறியீட்டின்படி, காலநிலை தணிப்பில் தற்போதைய முன்னணியில் டென்மார்க் தொடர்ந்து உள்ளது. 'உயர்ந்த' தேசிய மற்றும் 'மிகவுயர்ந்த' மதிப்பிடப்பட்ட சர்வதேச காலநிலைக் கொள்கையைக் கொண்ட ஒரே நாடு டென்மார்க் ஆகும். டென்மார்க் நான்காவது இடத்தையும் ஸ்வீடன் அதனைத் தொடர்ந்த இடத்தையும் பெற்றுள்ளது. எந்த நாடும் முதல் 3 இடங்களைப் பெறவில்லை. இந்தியா எட்டாவது இடத்தில் உள்ளது.

5. 'பிரஸ்தான்' என்ற கட்டமைக்கப்பட்ட பயிற்சியை நடத்துகிற இந்திய ஆயுதப்படை எது?

அ. இந்திய இராணுவம்

ஆ. இந்திய கடற்படை ☑

இ. இந்திய வான்படை

ஈ. இந்திய கடலோர காவல்படை



✓ எண்ணெய் & இயற்கை எரிவாயு கழகத்தின் (ONGC) தளத்தில் மும்பைக்கு அப்பாலுள்ள கடல்சார் சொத்துக்களைப் பாதுகாப்பதில் நிறுவன செயல்திறனை மதிப்பிடுவதற்காக இந்திய கடற்படை, 'பிரஸ்தான்' என்ற கட்டமைக்கப்பட்ட பயிற்சியை நடத்தியது. 'பிரஸ்தான்' பயிற்சியானது ஆண்டுக்கு இரண்டு முறை மேற்கு கடற்படை தலைமையின் கீழ் நடைபெறுகிறது. இந்தியாவின் கடற்கரையோரங்களில் உள்ள எண்ணெய் உற்பத்தி தளங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு முதன்மையாக இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

6. இந்தியா–மொசாம்பிக்–தான்சானியா முத்தரப்பு பயிற்சியின் முதலாம் பதிப்பை நடத்தும் நாடு எது?

அ. இந்தியா

ஆ. மொசாம்பிக்

இ. தான்சானியா ☑

ஈ. மாலத்தீவுகள்



✓ இந்தியா–மொசாம்பிக்–தான்சானியா முத்தரப்பு பயிற்சியின் முதலாம் பதிப்பு சமீபத்தில் தான்சானியாவின் டார் எஸ் சலாமில் தொடங்கியது. இந்திய கடற்படையை வழிகாட்டப்பட்ட ஏவுகணை போர்க்கப்பல், INS தர்காஷ், ஒரு சேதக் உலங்கு வானூர்தி மற்றும் மார்கோஸ் (சிறப்புப்படைகள்) ஆகியவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இப்பயிற்சி மூன்று நோக்கங்களைக் கொண்டுள்ளது: பயிற்சி மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வதன்மூலம் பொதுவான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் திறன் மேம்பாடு; இயங்குதன்மையை மேம்படுத்துதல் மற்றும் கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்.

7. 'சரஸ் உணவுத்திருவிழா'வை நடத்துகிற நடுவண் அமைச்சகம் எது?

அ. ஊரக வளர்ச்சி அமைச்சகம் ☑

ஆ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

இ. கலாச்சார அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

ग्रामीण विकास मंत्रालय
भारत सरकार
MINISTRY OF RURAL DEVELOPMENT
GOVERNMENT OF INDIA

✓ நடுவண் ஊரக வளர்ச்சி அமைச்சகமானது 'சரஸ் உணவுத்திருவிழா'வை நடத்துகிறது. சமீபத்தில், ஊரக வளர்ச்சி அமைச்சர் புது தில்லியில், 'சரஸ் உணவுத்திருவிழா – 2022'ஐத் தொடங்கிவைத்தார். சுயஉதவி குழுக்கள் சார்ந்த பெண்களால் தயாரிக்கப்பட்ட சரஸ் தயாரிப்புகளை சிறந்த முறையில் சந்தைப்படுத்துவதற்காக www.esaras.in என்ற இணையதளத்தையும் அமைச்சர் தொடங்கிவைத்தார். நடுவண் ஊரக வளர்ச்சி அமைச்சகம் அனைத்து மாநில தலைநகரங்கள், முக்கிய நகரங்கள் மற்றும் பெருநகரங்கள், விமான நிலையங்கள் மற்றும் இரயில் நிலையங்களில் பெண்கள் சுய உதவிக்குழுக்களால் சரஸ் அரங்குகளை நிறுவவுள்ளது.

8. கீழ்க்காணும் எந்த மாநிலத்தில், 'புதிர்வழித் தோட்டம் மற்றும் மியாவாக்கி வனத்தை' பிரதமர் திறந்து வைத்தார்?



அ. குஜராத் ☑

ஆ. மகாராஷ்டிரா

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. கர்நாடகா

✓ இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி அண்மையில் குஜராத் மாநிலத்தின் ஏக்தா நகரத்தில் புதிர்வழித்தோட்டம் மற்றும் மியாவாக்கி வனத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார். ஜப்பான் நாட்டின் தாவரவிய வல்லுநரும், சுற்றுச்சூழல் நிபுணருமான டாக்டர் அகிரா மியாவாக்கி உருவாக்கிய நுட்பத்தின் பெயரால் இந்தக் காடு அழைக்கப்படுகிறது. இந்தப் புதிய நுட்பத்தின்படி, பல்வேறு இனங்களின் மரக்கன்றுகள் ஒன்றோடு ஒன்று நெருக்கமாக நடப்பட்டு, அதன் மூலம் அடர்ந்த நகர்ப்புற காடு உருவாக்கப்படுகிறது.

9. ரேட்டில் நீர் மின்னுற்பத்தித் திட்டம் கட்டப்படவுள்ள மாநிலம்/ யூனியன் பிரதேசம் எது?



அ. தமிழ்நாடு

ஆ. ஆந்திர பிரதேசம்

இ. கர்நாடகா

ஈ. ஜம்மு-காஷ்மீர் ☑

✓ ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் உள்ள கிஸ்த்வார் மாவட்டத்தில் செனாப் ஆற்றின்மீது கட்டப்பட்டு வரும் திட்டமே ரேட்டில் நீர் மின்னுற்பத்தித் திட்டம் ஆகும். அந்த நீர் மின்னுற்பத்தி நிலையத்தில் நிலச்சரிவு ஏற்பட்டதில், 4 பேர் மரணித்தனர் மற்றும் 15 பேர் காயமடைந்தனர். கடந்த 2021ஆம் ஆண்டில், 850 MW மின்னுற்பத்தித்திறன் கொண்ட ரேட்டில் நீர் மின்னுற்பத்தித் திட்டத்திற்கு ₹5281.94 கோடி முதலீடு ஒதுக்கி நடுவணமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

10. 2022இல், 'நான்காவது வங்காளதேச திரைப்பட விழாவை' நடத்தும் இந்திய நகரம் எது?



அ. கௌகாத்தி

ஆ. கொல்கத்தா ☑

இ. கோகிமா

ஈ. இம்பால்

✓ வங்காளதேச திரைப்பட விழாவின் நான்காம் பதிப்பு கொல்கத்தாவில் நடைபெற்று வருகிறது. 5 நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் வங்காளதேசத்தைச் சேர்ந்த 37 திரைப்படங்கள் மற்றும் ஆவணப்படங்கள் திரையிடப்படும். நான்காம் ஆண்டாக கொல்கத்தாவில் வங்காளதேச திரைப்பட விழா நடத்தப்படுகிறது. புத்தகக் கண்காட்சிகள் மற்றும் திரைப்பட விழாக்கள் போன்ற கலாச்சார நிகழ்வுகள் இந்தியா மற்றும் வங்காளதேசம் மற்றும் மேற்கு வங்காளம் மற்றும் வங்காளதேசம் இடையேயான பிணைப்பை மிகுந்து வலுப்படுத்துகின்றன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. உலக மக்கள்தொகை 800 கோடியை எட்டியது!

உலக மக்கள்தொகை எட்டு பில்லியனை (800 கோடி) இன்று எட்டியதாக ஐக்கிய நாடுகள் சபையின் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 ஆண்டுகளில் உலக மக்கள்தொகை 200 கோடியாக அதிகரித்துள்ளது. 1998இல் 600 கோடியாக இருந்த உலக மக்கள்தொகை கடந்த 2010இல் 700 கோடியாக அதிகரித்தது. அடுத்த 12 ஆண்டுகளில் அதாவது 2022இல் மக்கள்தொகை 100 கோடியாக அதிகரித்து, நவ.15, 2022இல் உலக மக்கள்தொகை 800 கோடியை எட்டியுள்ளது.

ஐநா சபையின் கூற்றுப்படி, 2030ஆம் ஆண்டில், உலக மக்கள்தொகை 850 கோடியை எட்டும். எனினும், 1950ஆம் ஆண்டிற்குப் பிறகு முதன்முறையாக 2020ஆம் ஆண்டில் மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் 1% குறைந்துள்ளது என்று ஐநா தெரிவித்துள்ளது. ஐநாஇன் மக்கள்தொகை அறிக்கையில், 2050இல் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், எகிப்து, காங்கோ, நைஜீரியா, தான்சானியா மற்றும் எத்தியோப்பியா இந்த 8 நாடுகளில் இருப்பார்கள் என்று தெரிவித்துள்ளது.

2022 மற்றும் 2050ஆம் ஆண்டுக்கு இடையில் மக்கள்தொகை குறையும் 61 நாடுகளை ஐநா கணித்துள்ளது. இந்த நாடுகளில் பெரும்பாலானவை ஐரோப்பாவைச்சேர்ந்தவையாக இருக்கும். தற்போது, 46 நாடுகளின் மக்கள்தொகை வேகமாக அதிகரித்து வருவதாக ஐநா கணித்துள்ளது.

ஜூலை.11, 2022 அன்று, உலக மக்கள்தொகை நாளன்று ஐநா வெளியிட்ட அறிக்கையில், 2023ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டில், இந்தியாவின் மக்கள்தொகை சீனாவின் மக்கள்தொகையைவிட அதிகமாக இருக்கும் என்று கூறியது. இதன்மூலம் உலகிலேயே அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக இந்தியா மாறும் என்றும் தெரிவித்தது.

தற்போது சீனாவின் மக்கள் தொகை 1.426 பில்லியனாகவும், இந்தியாவின் மக்கள்தொகை 1.412 பில்லியனாகவும் உள்ளது. 2023இல் இந்தியாவின் மக்கள்தொகை 1.429 பில்லியனாக உயரும் என நம்பப்படுகிறது. மேலும் 2050இல் இந்த எண்ணிக்கை 1.668 பில்லியனை எட்டும். இந்த நூற்றாண்டின் நடுவில் சீனாவின் மக்கள் தொகை 1.317 பில்லியனாக குறையும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

1. COP27இன் ஒருபகுதியாக எந்த நாட்டுடன் இணைந்து, 'LeadIT உச்சிமாநாட்டை' இந்தியா நடத்தியது?

அ. சுவீடன் ☑

ஆ. ஜப்பான்

இ. ஆஸ்திரேலியா

ஈ. டென்மார்க்

✓ இந்தியாவும் சுவீடனும் இணைந்து COP27இன் ஒருபகுதியாக, 'LeadIT உச்சிமாநாட்டை' நடத்தின. LeadIT (தொழிற் துறை மாற்றத்திற்கான தலைமை) முனைவு சுவீடன் மற்றும் இந்திய அரசாங்கங்களால் 2019 செப்டம்பரில் ஐநா காலநிலை நடவடிக்கை உச்சிமாநாட்டில் தொடங்கப்பட்டது. மேலும் இதன் உலகப் பொருளாதார மன்றம் (WEF) ஆதரிக்கிறது. இது தொழிற்துறையின் குறைந்த கரியமில வாயு உமிழவுக்கான மாற்றத்தில் கவனம் செலுத்துகிறது. இந்த உச்சிமாநாட்டைத் தொடர்ந்து COP27இல் இந்திய அரங்கில் 'LeadIT உச்சிமாநாட்டு அறிக்கை – 2022' வெளியீட்டு விழா நடைபெற்றது.

2. 'ஆர்டெமிஸ்' என்பது எந்த நாட்டின் திட்டமாகும்?

அ. இஸ்ரேல்

ஆ. ஐக்கிய அரபு அமீரகம்

இ. அமெரிக்கா ☑

ஈ. சீனா



✓ அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான NASA, பூமியின் துணைக்கோளான நிலவுக்கு, 'ஆர்டெமிஸ்' என்ற மிகவும் ஆற்றல்வாய்ந்த ஏவுகலத்தை அனுப்பியுள்ளது. 100 மீட்டர் உயரமுள்ள 'ஆர்ட்டெமிஸ்' ஏவுகலம், நிலவின் திசையில் விண்கலத்தை அனுப்பும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. அவ்விண்கலம், விண்வெளி ஏவுதல் அமைப்பு ஏவுகலம் மற்றும் ஓரியன் விண்கலம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

3. 2022இல் எந்தக் கருப்பொருளின் கீழ் இந்தியாவின் தலைமையில் G20 இருக்கவுள்ளது?

அ. ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம் ☑

ஆ. தரவு தனியுரிமை

இ. ஆத்மநிர்பார் G20

ஈ. சர்வதேச வர்த்தகம்



✓ 2022 டிசம்பர்.1 முதல் இந்தோனேஷியாவிடமிருந்து பொறுப்பை பெற்றுக்கொண்டு ஓராண்டு காலத்திற்கு G20இன் தலைமைப் பொறுப்பை இந்தியா வகிக்கும். "ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்" என்பது இந்தியாவின் தலைமையின் கீழ் இருக்கப்போகும் G20 அமைப்பின் கருப்பொருளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. "வளர்ச்சிக்கான தரவு" என்ற கொள்கை நமது ஒட்டுமொத்த கருப்பொருளின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கும் என்று இந்தியப் பிரதமர் அறிவித்துள்ளார்.

4. CITES உறுப்புநாடுகளின் 19ஆவது மாநாட்டை நடத்தும் நாடு எது?

அ. நார்வே

ஆ. ஜெர்மனி

இ. பனாமா ☑

ஈ. ஆஸ்திரேலியா

✓ CITES உறுப்பு நாடுகளின் 19ஆவது மாநாடு மத்திய அமெரிக்க நாடான பனாமாவில் நடைபெற்று வருகிறது. CITES என்பது சில வனவிலங்குகள் மற்றும் தாவர இனங்களின் நாடு கடந்த இயக்கத்தை ஒழுங்குபடுத்தும் ஒப்பந்தமாகும். அழிந்துவரும் உயிரினங்களில் சர்வதேச வர்த்தகம் தொடர்பான தீர்மானத்தின் (CITES) கீழ் நன்னீர் ஊர்வனமான ஆமையைப் (red–crowned roofed turtle) பாதுகாக்க இந்தியா முன்மொழிந்துள்ளது. இந்தியா மற்றும் வங்கதேசத்தை பூர்வீகமாகக் கொண்ட இந்த ஆமை இனம், அழிந்துவரும் அபாயத்தில் உள்ளது.

5. இந்தியாவில், 'உலக சிறுசேமிப்பு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. அக்டோபர்.30 ☑

ஆ. நவம்பர்.01

இ. நவம்பர்.10

ஈ. நவம்பர்.15



✓ உலக சிறுசேமிப்பு நாளின் 98ஆவது ஆண்டு கொண்டாட்டம் இந்தியாவில் அக்.30 அன்று கடைப்பிடிக்கப்பட்டது. 1924ஆம் ஆண்டு இத்தாலியின் மிலன் நகரில் நடைபெற்ற முதல் சர்வதேச சிக்கன மாநாட்டில் அக்.31ஆம் தேதியை உலக சிறுசேமிப்பு நாளாக அறிவித்தது. இந்த நாளைக் கொண்டாடுவதன் நோக்கம், சேமிப்பை நோக்கிய நமது பழக்கத்தை மாற்றுவதும், செல்வத்தின் முக்கியத்துவத்தை தொடர்ந்து நமக்கு நினைவூட்டுவதும் ஆகும். இந்த ஆண்டு கருப்பொருள், "Saving prepares you for the future" என்பதாகும்.

6. லூலா டா சில்வா என்பார் கீழ்க்காணும் எந்த நாட்டின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?

அ. ஆஸ்திரேலியா

ஆ. பிரேசில் ☑

இ. ஐக்கிய இராச்சியம்

ஈ. நியூசிலாந்து



✓ பிரேசிலுக்கான அதிபர் தேர்தலில், லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா 2 மில்லியன் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றதன்மூலம் தற்போதைய பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சனாரோவை வீழ்த்தினார். இடதுசாரி முன்னாள் தலைவரான லூலா அதிபராக வெற்றிபெற்ற போதிலும், தற்போதைய தீவிர வலதுசாரி போட்டியாளரான ஜெய்ர் போல்சனாரோ தனது தோல்வியை ஒப்புக்கொள்ளாமல் உள்ளார். பதவியில் இருக்கும் அதிபர் ஒருவர் மீண்டும் தேர்தலில் வெற்றிபெறத்தவறிய முதல் பிரேசில் அதிபர் தேர்தலாக இது அமைந்தது.

7. இந்தியாவில், 'Football4Schools' முனைவைச் செயல்படுத்த FIFA மற்றும் AIFF உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நடுவண் அமைச்சகம் எது?

அ. கல்வி அமைச்சகம் ☑

ஆ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

இ. கலாச்சார அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

सत्यमेव जयते
शिक्षा मंत्रालय
MINISTRY OF
EDUCATION

✓ இந்தியாவில், 'Football4Schools' என்ற திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நடுவண் கல்வி அமைச்சகம் சமீபத்தில் FIFA மற்றும் AIFF உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. 'Football4Schools' திட்டம், படிப்புடன் முதன்மை விளையாட்டுக்கள்மூலம் குழந்தைகளை ஊக்குவிக்கும் மற்றும் அவர்களின் முழுமையான வளர்ச்சியை உறுதிசெய்யும் ஒரு நேர்மறையான கருவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

8. உலகளாவிய காசநோய் அறிக்கை–2022இன்படி, 2021ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் காசநோய் (1 இலட்சம் மக்கள்தொகைக்கு) பாதிப்பு எண்ணிக்கை எவ்வளவு?

அ. 101

ஆ. 210 ☑

இ. 510

ஈ. 2100



✓ உலக நலவாழ்வு அமைப்பு (WHO) உலகளாவிய காசநோய் அறிக்கை–2022ஐ வெளியிட்டது. இது காசநோய்க்கான நோயைக்கண்டறிதல், சிகிச்சை & பாதிப்பு ஆகியவற்றில் COVID–19 தொற்றுநோயின் தாக்கத்தைக் குறிப்பிடுகிறது. 2021ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் காசநோய் பாதிப்பு 100,000 மக்கள்தொகைக்கு 210 ஆகும்; இது 2015இன் அடிப்படை ஆண்டோடு ஒப்பிடும்போது 18% சரிவாகும். இது உலக சராசரியான 11%ஐவிட 7 சதவீத புள்ளிகள் அதிகம். காசநோய் பாதிப்பு விகித அடிப்படையில் இந்தியா 36ஆவது இடத்தில் உள்ளது.

9. அண்மையில் பரிசோதனை செய்யப்பட்ட, 'பூசா நரேந்திர கலாநாமக்' என்பது எந்தப்பயிரினமாகும்?

அ. கோதுமை

ஆ. அரிசி ☑

இ. மாங்கனி

ஈ. பருத்தி



✓ இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனமானது இரண்டு புதிய குறுவைகளை உத்தர பிரதேச மாநிலத்தில் வைத்து வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது. அவை 'பூசா நரேந்திர கலாநாமக் 1638' மற்றும் 'பூசா நரேந்திர கலாநாமக் 1652' ஆகும். 'கலாநாமக்' என்பது கருப்பு உமியுடனும் மிகுந்த வாசனையுடனும் கூடிய ஒரு பாரம்பரிய நெல் வகை ஆகும். இது ஸ்ரவஸ்தி மக்களுக்கு புத்தரளித்த பரிசாகக் கருதப்படுகிறது. இது உத்தரபிரதேசத்தின் தெராய் பகுதியின் 11 மாவட்டங்களிலும் நேபாளத்திலும் விளைகிறது. 'கதிர் சாய்தலால்' பாதிப்புக்குள்ளாகும் இந்த நெல் வகையில் புதிய குள்ள இரகம் இரட்டிப்பு மகசூலைத் தரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

10. இராணிப்பூர் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இந்திய மாநிலம் எது?

அ. உத்தர பிரதேசம் ☑

ஆ. அஸ்ஸாம்

இ. பீகார்

ஈ. குஜராத்



✓ உத்தர பிரதேச மாநிலத்தின் இராணிப்பூர் புலிகள் காப்பகம் இந்தியாவின் 53ஆம் புலிகள் காப்பகமாக மாறியுள்ளது. இப்புலிகள் காப்பகம் 529.36 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது. இது துத்வா, பிலிபித் மற்றும் அமங்கர் ஆகிய மூன்று புலிகள் காப்பகங்களைத் தொடர்ந்து உத்தர பிரதேச மாநிலத்தின் நான்காவது புலிகள் காப்பகமாக உள்ளது. இராணிப்பூர் புலிகள் காப்பகம் வட வெப்பமண்டல உலர் இலையுதிர் காடுகளால் சூழப்பட்டுள்ளது மற்றும் புலி, சிறுத்தை, கரடி, புள்ளிமான், சாம்பார், சிங்காரமான் போன்ற பாலூட்டிகளின் தாயகமாக இது உள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கடலோர பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி சீ விஜில்–22 நிறைவு

கடலோர பாதுகாப்பு ஒத்திகை பயிற்சியான சீ விஜில்–22 நவ.15, 16 ஆகிய இரண்டு தேதிகளில் நாட்டின் கடலோரப் பகுதியில் நடத்தப்பட்டது. அமைதிக்காலம் முதல் போர்க்காலம் வரை கடலோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய கண்காணிப்பு நடவடிக்கைகளை மையமாக கொண்டு இந்த ஒத்திகை மேற்கொள்ளப்பட்டது.

கரையோரப் பகுதிகளின் பாதுகாப்பு நெறிமுறைகளில் கவனத்துடன் செயல்படுதல், விதிமீறல் நடவடிக்கைகளை கண்காணித்து தடுத்தல் போன்றவை குறித்தும் இந்த ஒத்திகையில் பயிற்சி தரப்பட்டது. 9 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 17 அரசு அமைப்புகள் இந்த கடலோர பாதுகாப்பு நடவடிக்கையில் பங்கேற்றன. தீவிரவாத தடுப்பு தொடர்பாகவும், அவசரகால சூழலில் துறைமுக மேலாண்மை குறித்தும் பயிற்சிகள் மேற்கொள்ளப்ப –ட்டன. பல்வேறு மாநிலங்களின் தேசிய மாணவர் படையை சேர்ந்த 800க்கும் மேற்பட்டோர் இந்தப் பாதுகாப்பு ஒத்திகையில் ஈடுபட்டனர்.

---

2. பூக்கடை காவல் நிலையத்துக்கு ஐஎஸ்ஓ தரச்சான்று

சென்னை பூக்கடை காவல் நிலையத்துக்கு 'ஐஎஸ்ஓ' தரச்சான்றிதழ் வழங்கப்பட்டது. சென்னை பூக்கடை காவல் நிலையம் 1876ஆம் ஆண்டு மதராஸ் பட்டணமாக இருந்தபோதே தொடங்கப்பட்ட மிகப்பழைமைவாய்ந்த காவல் நிலையம். பல்வேறு சிறப்பம்சங்கள் கொண்ட பூக்கடை காவல் நிலையத்துக்கு இந்திய தர கவுன்சில் – இந்திய அரசாங்கத்தால் பாதுகாப்பு மற்றும் சுகாதார சான்றிதழுக்கான பணியிட மதிப்பீட்டுக்காக சர்வதேச தர கட்டுப்பாட்டுச் சான்றிதழான ஐஎஸ்ஓ 9001: 2015 வழங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

---

3. நிலவுக்கு ஆய்வுக் கலம்: விண்ணில் செலுத்தியது NASA

நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்புவதற்கு முன்னோடியாக ஒரு விண்வெளிக்கலத்தை அமெரிக்க விண்வெளி ஆய்வுநிறுவனமான NASA வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. 'ஆர்டமிஸ்–1' என்ற இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்காக கடந்த ஆகஸ்டில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி இருமுறை ஒத்திவைக்கப்பட்டது. அப்பல்லோ விண்கலத் திட்டங்கள் நிறுத்தப்பட்ட ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு, முதன்முறையாக நிலவுக்கு மனிதர்களை அனுப்புவதற்கான இந்த ஆய்வு திட்டத்தை NASA உருவாக்கியுள்ளது. அதற்கு முன்னோட்டமாக, சோதனை முறையில் மூன்று மனித மாதிரிகளுடன் அந்த ஆய்வுக்கலத்தை ஏவ திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், ஏவுகல எரிபொருள் கசிவு மற்றும் எஞ்சின் கோளாறு காரணமாக அந்தத் திட்டம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

---

1. 'டிஜிட்டல் சக்தி பிரச்சாரம் 4.0' என்ற பிரச்சாரத்தைத் தொடங்கிய நிறுவனம் எது?

அ. NITI ஆயோக்

ஆ. பெண்களுக்கான தேசிய ஆணையம் ☑

இ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. உலக பொருளாதார மன்றம்

✓ பெண்களுக்கான தேசிய ஆணையமானது நான்காம் கட்ட டிஜிட்டல் சக்தி பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது. இது எந்தவொரு சட்டத்துக்குப்புறம்பான (அ) பொருத்தமற்ற இணையவழி நடவடிக்கைகளுக்கும் எதிராக பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இது இணையவெளியில் பெண்களை எண்ம முறையில் மேம்படுத்துதல் மற்றும் திறமையாக்குதல் ஆகியவற்றுக்கான ஓர் இந்தியத் திட்டமாகும். சைபர்பீஸ் அறக்கட்டளை மற்றும் மெட்டாவுடன் இணைந்து டிஜிட்டல் சக்தி பிரச்சாரம் கடந்த 2018ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூன்றாம் கட்டம் 2021 மார்ச்சில் தொடங்கியது.

2. தேசிய ஓய்வூதிய அமைப்பு அறக்கட்டளையின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ. சூரஜ் பான் ☑

ஆ. சுபாஷ் சந்திர கார்க்

இ. உர்ஜித் படேல்

ஈ. அரவிந்த் சுப்ரமணியன்

✓ ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது தேசிய ஓய்வூதிய அமைப்பு அறக்கட்டளையின் (NPS அறக்கட்டளை) தலைவராக சூரஜ் பானை நியமித்துள்ளது. தேசிய ஓய்வூதிய அமைப்பின் (NPS) கீழ் நிதிகளை நிர்வகிப்பதற்கு இவ்வறக்கட்டளை பொறுப்பாகும். கடந்த 1983இல் இந்தியப் பொருளாதாரச் சேவையில் சேர்ந்த சூரஜ் பான் சண்டிகரில் உள்ள தொழிலாளர் பணியகத்தின் தலைமை இயக்குநராகப் பணியாற்றி ஓய்வுபெற்றார்.

3. அதன் தொழில்நுட்ப உச்சிமாநாட்டின் வெள்ளி விழா பதிப்பை ஏற்பாடு செய்த மாநிலம் எது?

அ. ஒடிஸா

ஆ. கர்நாடகா ☑

இ. மகாராஷ்டிரா

ஈ. குஜராத்



✓ பெங்களூரு தொழில்நுட்ப உச்சிமாநாட்டின் (BTS–22) வெள்ளிவிழா பதிப்பை பிரதமர் நரேந்திர மோதி தொடங்கி வைத்தார். வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு கர்நாடக மாநில முதலமைச்சர் பசவராஜ பொம்மை நினைவு வில்லை ஒன்றை வெளியிட்டார். இதன் தொடக்க விழாவில் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம், ஆஸ்திரேலியா மற்றும் பின்லாந்து அமைச்சர்கள் கலந்துகொண்டனர். மாநில தகவல் தொழில்நுட்பத் துறையும், உயிரித்தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையும் இந்தியாவின் மென்பொருள் தொழில்நுட்ப பூங்காக்களுடன் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

4. NITI ஆயோக்கின் நான்காவது முழுநேர உறுப்பினராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ. இரகுராம் இராஜன்

ஆ. உர்ஜித் படேல்

இ. அரவிந்த் விர்மானி ☑

ஈ. அருந்ததி பட்டாச்சார்யா



✓ NITI ஆயோக்கின் முழுநேர உறுப்பினராக மூத்த பொருளாதார நிபுணர் டாக்டர் அரவிந்த் விர்மானியை அரசாங்கம் நியமித்துள்ளது. "பொருளாதார வளர்ச்சி மற்றும் நலனுக்கான அறக்கட்டளை" என்ற இலாப நோக்கற்ற பொதுக் கொள்கை அமைப்பின் நிறுவனர்–தலைவராக அவர் உள்ளார். 2007–09 வரை நிதி அமைச்சகத்தில் தலைமைப் பொருளாதார ஆலோசகராகவும் அவர் பணியாற்றியுள்ளார். தற்போது, NITI ஆயோக்கில் மூன்று உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள்: டாக்டர் V K சரஸ்வத், பேராசிரியர் இரமேஷ் சந்த் மற்றும் டாக்டர் V K பால்.

5. COVID கட்டுப்பாடுகள் நீட்டிக்கப்பட்ட காலத்தில், இந்தியாவுக்கு வந்த அதிகபட்ச வெளிநாட்டினர் கீழ்க்காணும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்?

அ. ஐக்கிய இராச்சியம்

ஆ. அமெரிக்கா ☑

இ. கனடா

ஈ. ஆஸ்திரேலியா



✓ உள்துறை அமைச்சகத்தின் அண்மைய தரவுகளின்படி, கடந்த ஆண்டு (2021) COVID கட்டுப்பாடுகள் மற்றும் விசா விதிமுறைகளின் நீட்டிக்கப்பட்ட காலத்தில் 15 இலட்சத்திற்கும் அதிகமான வெளிநாட்டினர் இந்தியாவிற்கு வருகை தந்துள்ளனர். இந்தக் காலகட்டத்தில் அதிகபட்சமாக இந்தியாவுக்கு வருகைதந்த வெளிநாட்டவர்கள் அமெரிக்கர்கள் (4.29 இலட்சம்) ஆவர. அதைத் தொடர்ந்து வங்கதேசத்தினர் (2.4 இலட்சம்) உள்ளனர். 2021ஆம் ஆண்டில் மொத்தம் பத்து நாடுகளைச் சார்ந்த வெளிநாட்டினர் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர். அது மொத்தம் 74.39 சதவீதம் ஆகும்.

6. வட இந்தியாவின் முதல் மிகையளவு தரவு மையமான, 'Yotta D1' திறக்கப்பட்டுள்ள மாநிலம் எது?

அ. குஜராத்

ஆ. பஞ்சாப்

இ. உத்தர பிரதேசம் ☑

ஈ. மத்திய பிரதேசம்



✓ உத்தர பிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் வட இந்தியாவின் முதல் மிகையளவு தரவு மையமான 'யோட்டா டி1'ஐ திறந்து வைத்தார். ₹5,000 கோடி செலவில் 3,00,000 சதுர அடி பரப்பளவில் இந்தத் தரவு மையம் கட்டப்பட்டுள்ளது. ₹39,000 கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் உபி மாநில அரசுக்கும் ஹிரானந்தானி குழுமத்துக்கும் இடையே திட்டங்களுக்குச் செலவிடும் நோக்கில் போடப்பட்டுள்ளன. இந்தத் தரவு மையப் பூங்காவில் மொத்தம் ஆறு தரவு மையங்கள் அமைந்திருக்கும்.

7. பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் நபர்களுக்கு, 'இராஜ்யோத்சவ விருது' வழங்கும் இந்திய மாநிலம் எது?

அ. கேரளா

ஆ. கர்நாடகா ☑

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. தெலுங்கானா



✓ கர்நாடக மாநிலம் இவ்வாண்டு 67ஆம் கன்னட இராஜ்யோத்சவாவை கொண்டாடும் நிலையில், 'இராஜ்யோத்சவ விருது' பெறுபவர்களின் பெயர்களை கர்நாடக மாநில அரசு அறிவித்துள்ளது. இவ்விருது பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க சேவையாற்றிய சிறந்த நபர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. ISROஇன் முன்னாள் தலைவர் K சிவன், கூட்டுறவுச் சங்கங்களை பிரபலப்படுத்திய சோலிகர மடம்மா, யக்ஷகானா கலைஞர் டாக்டர் M பிரபாகர் ஜோஷி உள்ளிட்ட 67 பேர் விருது இவ்வாண்டில் இவ்விருதுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

8. 2022 – உலக நகரங்கள் நாளுக்கானக் கொண்டாட்டங்களை நடத்தும் நகரம் எது?

அ. டோக்கியோ

ஆ. ஷாங்காய் ☑

இ. புது தில்லி

ஈ. மாஸ்கோ



✓ உலகளாவிய நகரமயமாக்கலை ஊக்குவிப்பதற்கு சர்வதேச ஒத்துழைப்பின் அவசியத்தை எடுத்துக்காட்டுவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.31 அன்று உலக நகரங்கள் நாள் கொண்டாடப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் வெவ்வேறு நகரம் இந்நாளின் நிகழ்வை நடத்துகிறது. சீனாவின் ஷாங்காய் இவ்வாண்டுக்கான (2022) நிகழ்வை நடத்துகிறது. "சிறந்த நகரம், சிறந்த வாழ்வு" என்பது உலக நகரங்கள் நாளுக்கான பொதுமையான கருப்பொருளாக அந்த நாள் உருவாக்கப்பட்ட நாளிலிருந்தே உள்ளது. இந்த ஆண்டுக்கான (2022) துணைக் கருப்பொருள், "Act Local to Go Global" என்பதாக உள்ளது.

9. வடகிழக்கிந்தியாவின் முதல், 'மீன் அருங்காட்சியகம்' அமைக்கப்படவுள்ள மாநிலம் எது?

அ. அஸ்ஸாம்

ஆ. சிக்கிம்

இ. அருணாச்சல பிரதேசம் ☑

ஈ. மேகாலயா



✓ வடகிழக்கிந்தியாவின் முதலாவது 'மீன் அருங்காட்சியகம்' அருணாச்சல பிரதேச மாநிலத்தில் அமைக்கப்படவுள்ளது. அருணாச்சல பிரதேச மாநிலத்தில் தற்போதுள்ள டாரின் மீன் பண்ணையானது ஒருங்கிணைந்த நீர்மப் பூங்காவாக மேம்படுத்தப்படும்; அந்தப் பூங்காவில் அருங்காட்சியகம் அமைக்கப்படும். பிரதம மந்திரி மத்ஸ்ய சம்பத் யோஜனாவின் (PMMSY) கீழ் ஒவ்வொரு மாநிலத்திற்கும் யூனியன் பிரதேசத்திற்கும் ஓர் ஒருங்கிணைந்த நீர்மப் பூங்கா அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

10. 'இந்தியாவின் எஃகு மனிதர்' என்று அழைக்கப்படுபவர் யார்?

அ. O P ஜிண்டால்

ஆ. சர்தார் வல்லபாய் படேல்

இ. ஜாம்ஷெட் J இராணி ☑

ஈ. இலக்ஷ்மி மிட்டல்



✓ 'இந்தியாவின் எஃகு மனிதர்' என்று அழைக்கப்படும் ஜாம்ஷெட் J இராணி, சமீபத்தில் ஜாம்ஷெட்பூரில் தனது 86ஆம் வயதில் காலமானார். டாடா எஃகு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக 1992இல் அவர் பணியேற்றார். 2001இல் அவர் ஓய்வுற்றார். 43 ஆண்டுகால பணியாற்றலுக்குப் பின் 2011 ஜூன் மாதம் டாடா எஃகு குழுமத்திலிருந்து இராணி ஓய்வுற்றார். தொழிற்துறையில் அவராற்றிய பங்களிப்பிற்காக 2007இல் 'பத்ம பூஷன்' விருது பெற்றார். டாக்டர் இராணி, கடந்த 2008ஆம் ஆண்டில் உலோகவியலில் தனது சேவைகளுக்காக இந்திய அரசாங்கத்தால், 'வாழ்நாள் சாதனையாளர்' விருதைப் பெற்றார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 18–11–2022: 'கப்பலோட்டிய தமிழன்' வ உ சிதம்பரனார் அவர்களின் 86ஆவது நினைவுநாள்.

---

2. ஓட்டுநர் இல்லா மெட்ரோ இரயில்கள்: ₹946 கோடி ஒப்பந்தம்

ஓட்டுநர் இல்லாத மெட்ரோ இரயில்களை உருவாக்க ₹946.92 கோடியில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் 2ஆவது கட்டத்தின்கீழ் ஓட்டுநர் இல்லாமல், இயக்கப்படும் மூன்று பெட்டிகள் கொண்ட இருப்பத்தாறு மெட்ரோ இரயில்களை உருவாக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அல்ஸ்டோம் டிரான்ஸ்போர்ட் இந்தியா நிறுவனத்துக்கு ₹946 கோடியே 92 லட்சம் மதிப்பில் பணி வழங்கப்பட்டுள்ளது.

---

3. தமிழக பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தலைவராக நீதிபதி பாரதிதாசன் நியமனம்!

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவராக ஓய்வு பெற்ற நீதிபதி பாரதிதாசனை நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

---

1. கீழ்க்காணும் எந்த நாட்டுடன் இணைந்து, 'இளம் வல்லுநர்கள் திட்டத்தை' இந்தியா அறிவிக்கவுள்ளது?

அ. ஜப்பான்

ஆ. தென் கொரியா

இ. இங்கிலாந்து ☑

ஈ. அமெரிக்கா



✓ இந்தியாவும் இங்கிலாந்தும் (UK) புதிய பரஸ்பர விசா ஏற்பாட்டை அறிவிக்கவுள்ளன. இதன்மூலம் 18 முதல் 30 வயதுக்குட்பட்ட 3,000 பட்டம்பெற்ற இந்திய நாட்டுக் குடிமக்கள் ஒவ்வோர் ஆண்டும் பிரிட்டனுக்கு வந்து இரண்டு ஆண்டுகள் வரை வாழவும் பணியாற்றவும் அனுமதிக்கப்படுவர். UK–இந்தியா இளம் தொழில் வல்லுநர்கள் திட்டம் ஆனது 2023ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பரஸ்பரம் அறிவிக்கப்படும். பாலியில் நடைபெறும் G20 உச்சிமாநாட்டின் இறுதியில் பிரதமர் நரேந்திர மோதி மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக் இடையேயான முதல் இருதரப்பு சந்திப்பின் போது இது தொடங்கப்படவுள்ளது. இத்தகைய திட்டத்தால் பயன்பெறும் முதல் நாடு இந்தியா ஆகும்.

2. 'திருமணத்திற்கான மரியாதை சட்டத்துடன்' தொடர்புடைய நாடு எது?

அ. ஜெர்மனி

ஆ. அமெரிக்கா ☑

இ. இங்கிலாந்து

ஈ. பிரான்ஸ்



✓ அமெரிக்க சட்டப்பேரவை, ஒரே பாலின மற்றும் கலப்பினங்களுக்கிடையேயான திருமணங்களுக்கு அமெரிக்க கூட்டரசு பாதுகாப்பை அளிக்கும், 'திருமணத்திற்கான மரியாதை சட்டத்தை' முன்வைத்தது. 'திருமணத்திற்கான மரியாதை சட்டம்' முந்தைய திருமணப் பாதுகாப்புச் சட்டத்தை இரத்து செய்கிறது. மேலும் பாலினம், இனம், இனக் குழு அல்லது தேசிய வம்சாவளியைப் பொருட்படுத்தாமல், செல்லுபடியாகும் திருமணங்களை அங்கீகரிப்பதன்மூலம் ஒரே பாலின மற்றும் கலப்பினங்களுக்கு இடையிலான திருமணத்தைக் காக்கின்றது.

3. டோனி போலோ வானூர்தி நிலையம் திறக்கப்பட்ட மாநிலம்/ யூனியன் பிரதேசம் எது?

அ. சிக்கிம்

ஆ. அருணாச்சல பிரதேசம் ☑

இ. மேற்கு வங்காளம்

ஈ. ஜார்கண்ட்



✓ அருணாச்சல பிரதேச மாநிலத்தில் முதல் கிரீன்ஃபீல்ட் வானூர்தி நிலையத்தை பிரதமர் நரேந்திர மோதி திறந்து வைத்தார். அது இட்டாநகரின் ஹோலாங்கியில் உள்ள டோனி போலோ வானூர்தி நிலையமாகும். அவ்வானூர்தி நிலையத்திற்கான அடிக்கல்லை கடந்த 2019 பிப்ரவரியில் பிரதமர் நாட்டினார். டோனி போலோ விமான நிலையம் அருணாச்சல பிரதேசத்தில் மூன்றாவது வானூர்தி நிலையமாக இருக்கும். இது வடகிழக்குப் பிராந்தியத்தில் உள்ள மொத்த வானூர்தி நிலையங்களின் எண்ணிக்கையை 16ஆக உயர்த்தும்.

4. C V ஆனந்த போஸ் என்பவர் கீழ்க்காணும் எந்த மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்?

அ. தமிழ்நாடு

ஆ. ஆந்திரப் பிரதேசம்

இ. கேரளம்

ஈ. மேற்கு வங்காளம் ☑



✓ மேற்கு வங்க மாநிலத்தின் புதிய ஆளுநராக டாக்டர் C V ஆனந்த போஸ் நியமிக்கப்பட்டார். குடியரசுத் தலைவர் மாளிகையின் அறிவிப்புமூலம் இந்த நியமனம் அறிவிக்கப்பட்டது. தேசிய ஜனநாயகக் கூட்டணியின் இந்தியத் துணைக்குடியரசுத்தலைவர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டதை அடுத்து ஏற்கெனவே மேற்கு வங்க மாநிலத்தின் ஆளுநராக பதவி வகித்த ஜக்தீப் தன்கர் பதவி விலகினார். அதன் பின்னர் அப்பொறுப்பை மணிப்பூர் மாநில ஆளுநர் இல கணேசன் கூடுதலாக கவனித்து வந்தார்.

5. 2022இல் வடகிழக்கு ஒலிம்பிக் போட்டிகளின் இரண்டாவது பதிப்பை நடத்திய மாநிலம் எது?

அ. அஸ்ஸாம்

ஆ. மேகாலயா ☑

இ. மணிப்பூர்

ஈ. சிக்கிம்

✓ வடகிழக்கு ஒலிம்பிக் போட்டிகளின் இரண்டாவது பதிப்பு மேகாலயாவின் ஷில்லாங்கில் நடத்தப்பட்டது. மணிப்பூர் மொத்தம் 240 பதக்கங்களுடன் ஒட்டுமொத்த அணி சாம்பியனாக உருவெடுத்தது. மொத்தம் 203 பதக்கங்களுடன் அஸ்ஸாம் இரண்டாவது இடத்தையும், அருணாச்சல பிரதேசம் மூன்றாவது இடத்தையும் பிடித்தது. ஒருவாரகாலம் நிகழ்ந்த இந்த நிகழ்வில், வடகிழக்கு மாநிலங்களைச் சார்ந்த சுமார் 3000 பங்கேற்பாளர்கள் 18 பிரிவுகளில் போட்டியிட்டனர். வடகிழக்கு ஒலிம்பிக் போட்டிகளின் அடுத்த பதிப்பை நாகாலாந்து மாநிலம் நடத்தவுள்ளது.

6. 'இன்வெஸ்ட் கர்நாடகா – 2022' உச்சிமாநாட்டின் கருப்பொருள் என்ன?

அ. Build for the World ☑

ஆ. Global Supply Chain

இ. Tradition and Technology

ஈ. Nature and Culture

✓ 'இன்வெஸ்ட் கர்நாடகா – 2022' உச்சிமாநாட்டின் தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோதி உரையாற்றினார். கர்நாடகாவின் உலகளாவிய முதலீட்டாளர்கள் சந்திப்பின் இந்த ஆண்டு பதிப்பு, 'உலகத்திற்காக உருவாக்குங்கள்' என்ற கருப்பொருளின்கீழ் நடத்தப்பட்டுள்ளது. மூன்று நாள் நடந்த இந்த நிகழ்ச்சியில் 80-க்கும் மேற்பட்ட அமர்வுகள் இருக்கும். கூட்டாளர் நாடுகளான பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து, தென் கொரியா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளால் அமர்வுகள் நடத்தப்படுகின்றன.

7. நீர்வள மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் துறையில் ஒத்துழைப்பு குறித்து கீழ்க்காணும் எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், இந்தியா கையெழுத்திட்டது?

அ. பின்லாந்து

ஆ. டென்மார்க் ☑

இ. ஆஸ்திரியா

ஈ. ஆஸ்திரேலியா

✓ நீர்வள மேம்பாடு மற்றும் நீர்மேலாண்மைத் துறையில் இந்தியா மற்றும் டென்மார்க் இடையேயான ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு நடுவண் அமைச்சரவை ஒப்புதலளித்துள்ளது. பசுமை செயல்திட்ட கூட்டாண்மையை நிறுவுவது குறித்து இருநாடுகளும் ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட்டன. வாரணாசியில் திறன்மிகு நீர்வள மேலாண்மைக்கான சிறப்பு மையமும் தூய ஆற்றுநீர் குறித்த ஸ்மார்ட் ஆய்வகமும் நிறுவுதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

8. இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனமானது கால்நடைகளுக்கான எந்த மருந்தைப் பயன்படுத்த தடை விதிக்க கோரியுள்ளது?

அ. அசெக்ளோஃபெனாக் ☑



ஆ. புரோஜெஸ்டின்

இ. எரித்ரோமைசின்

ஈ. கொலிஸ்டின்

✓ இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனமானது கால்நடைகளில் அசிக்ளோஃபெனாக் பயன்படுத்துவதைத் தடை செய்யக் கோரியுள்ளது. இந்த மருந்து நீர் எருமைகள் மற்றும் பசுக்களில், 'டிக்ளோஃபெனாக்' ஆக வளர்சிதை மாற்றமடைகிறது என்று ஒரு புதிய ஆராய்ச்சி கண்டறிந்த பின்னர் இந்த அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய வளர்சிதை மாற்றங்கள் நாட்டில் உள்ள கழுகுகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளன. டிக்ளோஃபெனாக், ஓர் அழற்சி எதிர்ப்பு மருந்தாகும். கழுகுகளின் எண்ணிக்கை குறைந்ததையடுத்து கடந்த 2006ஆம் ஆண்டில் இந்திய அரசால் கால்நடை மருத்துவப் பயன்பாட்டிற்கு அம்மருந்து தடை செய்யப்பட்டது.

9. ஒரு புதிய ஆய்வின்படி, கீழ்க்காணும் எந்த உயிரினம் நாள்தோறும் சுமார் பத்து மில்லியன் நுண் நெகிழித் துண்டுகளை விழுங்கக்கூடும்?

அ. ஆமை

ஆ. நீலத்திமிங்கலம் ☑



இ. கால்நடைகள்

ஈ. தவளை

✓ ஒரு புதிய ஆய்வின்படி, நீலத்திமிங்கலங்கள் தினமும் சுமார் 10 மில்லியன் மைக்ரோ பிளாஸ்டிக் துண்டுகள் அல்லது சுமார் 95 பவுண்டுகள் (43.5 கிலோ) பிளாஸ்டிக்கை விழுங்கக்கூடும். இறால் உண்ணும் திமிங்கலங்கள் தினமும் சுமார் 4 மில்லியன் மைக்ரோபிளாஸ்டிக் துண்டுகளை (38 பவுண்டுகள் பிளாஸ்டிக் வரை) உட்கொள்ளலாம்; அதே வேளையில் மீனுண்ணும் திமிங்கலங்கள் சுமார் 200,000 துண்டுகளை (இரண்டு பவுண்டுகள் பிளாஸ்டிக் வரை) உட்கொள்ளலாம்.

10. சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளில், 'ஒற்றுமை ஓட்டங்களை' ஏற்பாடு செய்த நடுவண் அமைச்சகம் எது?

அ. இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் ☑

युवा कार्यक्रम
एवं खेल मंत्रालय
MINISTRY OF
YOUTH AFFAIRS
AND SPORTS
सत्यमेव जयते

ஆ. கல்வி அமைச்சகம்

இ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

✓ நடுவண் இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் அதன் துணை அமைப்புகளான நேரு யுவ கேந்திரா சங்கதன் மற்றும் தேசிய சேவைத் திட்டம் (NSS) ஆகியவை சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளை முன்னிட்டு அனைத்து மாவட்டங்களிலும் 'ஒற்றுமை ஓட்டங்களை' நடத்தின. பஞ்சாப் மாநிலம் மொகாலியில் இருந்து ஒற்றுமைக்கான ஓட்டத்தை நடுவண் இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் கொடியசைத்து தொடங்கிவைத்தார். நாடு முழுவதும், 55.32 லட்சம் பங்கேற்புடன், 90,122 ஒற்றுமைக்கான ஓட்டங்கள், தேசிய ஒற்றுமையின் சாராம்சம் குறித்து குடிமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கோடு ஏற்பாடு செய்யப்பட்டன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 'நூலக நண்பர்கள்' திட்டம் டிச.1இல் தொடக்கம்

தமிழக அரசின் நூலக நண்பர்கள் திட்டம் சென்னையில் டிச.1ஆம் தேதி முதல் செயல்படுத்தப்படவுள்ளது. நூலக வாசகர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையிலும், நூலகங்களுக்கு வர முடியாத மாற்றுத் திறனாளிகள், முதியவர்கள் உள்ளிட்டோர், வீடுகளில் இருந்தே நூல்களை வாசிக்க உதவும் வகையில் 'நூலக நண்பர்கள்' திட்டத்தை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இதையடுத்து மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு நூலகங்களிலும் தலா ஐந்து தன்னார்வலர்கள் கட்டணமின்றி உறுப்பினர்களாக சேர்க்கப்படுவர்.

அவர்களுக்கு புத்தகங்கள் எடுத்துச்செல்ல பை, அடையாள அட்டை வழங்கப்படும். இதையடுத்து அவர்கள் இல்லங்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பொது இடங்களுக்குச் சென்று புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதுடன் அவர்கள் விரும்பும் நூல்களை வழங்குவர்.

---

2. தேர்தல் ஆணையராக அருண் கோயல் நியமனம்

ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி அருண் கோயல், தேர்தல் ஆணையராக நியமனம் செய்யப்பட்டார். அரசு செய்திக் குறிப்பில் இதுதொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

1985ஆம் ஆண்டு பஞ்சாப் பிரிவு ஐஏஎஸ் அதிகாரியான இவர், தலைமைத் தேர்தல் ஆணையர் இராஜீவ் குமார், தேர்தல் ஆணையர் அனுப்சந்திர பாண்டே ஆகியோருடன் தேர்தல் ஆணைய குழுவில் இடம்பெறுவார். தலைமைத் தேர்தல் ஆணையர் இராஜீவ் குமார் வரும் 2025–ஆம் ஆண்டு பிப்ரவரியில் பணி ஓய்வு பெற்ற பின்னர், அடுத்த தலைமைத் தேர்தல் ஆணையராக அருண் கோயல் பொறுப்பேற்பார். பின்னர், 2027–ஆம் ஆண்டு டிசம்பரில் 65 வயதை எட்டும்போது அந்தப் பதவியிலிருந்து கோயல் ஓய்வு பெறுவார்.

---

3. தலாய் லாமாவுக்கு காந்தி – மண்டேலா விருது

திபெத்திய பௌத்த மத குரு தலாய் லாமாவுக்கு காந்தி– மண்டேலா விருதை ஹிமாசல பிரதேச ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் வழங்கி கௌரவித்தார். அமைதி, நல்லிணக்கம், விடுதலையை முன்னெடுக்கும் சர்வதேச தலைவர்களுக்கு தர்மசாலாவில் செயல்பட்டு வரும் காந்தி மண்டேலா அறக்கட்டளை சார்பில் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

---

4. அரசுப்பள்ளிகளில், 'மிஷன் இயற்கை': வழிகாட்டுதல்கள் வெளியீடு

தமிழக அரசுப்பள்ளிகளில், 'மிஷன் இயற்கை' என்ற பெயரிலான சுற்றுச்சூழல் திட்டத்தை செயல்படுத்த பள்ளிக் கல்வித்துறை திட்டமிட்டுள்ள நிலையில் அது குறித்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதுகுறித்து பள்ளிக்கல்வி ஆணையர் அனுப்பிய சுற்றறிக்கை: தனியார் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து 'மிஷன் இயற்கை' என்ற சுற்றுச்சூழல் திட்டத்தை அரசுப்பள்ளிகளில் செயல்படுத்த பள்ளிக்கல்வித்துறை திட்டம் தீட்டியுள்ளது.

---


1. அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, 'ஆர்டெமிசினின்' என்பது கீழ்க்காணும் எந்த நோய்க்கெதிரான மருந்துகளின் முக்கிய கூறாக அமைந்துள்ளது?

அ. நீரிழிவு நோய்

ஆ. மலேரியா ☑

இ. சார்ஸ்

ஈ. உயர் இரத்த அழுத்தம்



✓ உலக நுண்ணுயிர்க்கொல்லி குறித்த விழிப்புணர்வு வாரத்தின்போது, ஆப்பிரிக்காவில் மலேரியா எதிர்ப்பு மருந்து எதிர்ப்பை எதிர்த்து உலக நலவாழ்வு நிறுவனம் ஒரு புதிய உத்தியை அறிமுகம் செய்தது. நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்பின் காரணமாக அதிகரித்து வரும் அச்சுறுத்தலைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான இந்த வார அனுசரிப்பு, ஆண்டுதோறும் உலகளாவிய பிரச்சாரமாக நடத்தப்படுகிறது. சில ஒட்டுண்ணிகள் மலேரியாவுக்கான மருந்துகளின் முதன்மை கூறாக விளங்கும் ஆர்ட்டெமிசினினுடன் கூடிய மருந்துகளை எதிர்க்கும் ஆற்றலைக் கொண்டுள்ளதாக உலக நலவாழ்வு நிறுவனம் எச்சரித்துள்ளது.

2. 'ஹ்வாசாங்–17' அல்லது மான்ஸ்டர் ஏவுகணையை ஏவிய நாடு எது?

அ. ஜெர்மனி

ஆ. வட கொரியா ☑

இ. இங்கிலாந்து

ஈ. பிரான்ஸ்



✓ வட கொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையான, 'ஹ்வாசாங்–17'ஐ அண்மையில் ஏவியது. இது 'மான்ஸ்டர் ஏவுகணை' என்றும் அழைக்கப்படுகிறது. 'Hwasong–17' ஏவுகணையானது வடகொரியாவின் மிகப் பெரிய ஏவுகணையாகும். இது திரவ எரிபொருள்மூலம் இயங்கும், கண்டம் விட்டு கண்டம் பாயும் உலகின் மிகப் பெரிய ஏவுகணையாகும்.

3. 2022 – உலக குழந்தைகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Inclusion, For Every Child ☑

ஆ. Children's Rights

இ. International togetherness

ஈ. Digital Access for all



✓ சர்வதேச ஒற்றுமை, உலகெங்கிலும் உள்ள குழந்தைகளிடையே விழிப்புணர்வு மற்றும் குழந்தைகளின் நலனை மேம்படுத்துவதற்காக நவ.20 அன்று, 'உலக குழந்தைகள் நாள்' கொண்டாடப்படுகிறது. இது முதன்முதலில் 1954 இல் உலகளாவிய குழந்தைகள் நாளாக நிறுவப்பட்டது. ஐநா பொதுச்சபை குழந்தைகளின் உரிமைகள் பற்றிய பிரகடனம் மற்றும் மாநாடு இரண்டையும் ஏற்றுக்கொண்ட தேதியின் ஆண்டு நிறைவையும் இந்த நாள் குறிக்கிறது. இந்த ஆண்டு, "Inclusion, For Every Child" என்பது இந்த நாளுக்கானக் கருப்பொருளாக உள்ளது.

4. அண்மையில் திறக்கப்பட்ட கமெங் நீர் மின்னுற்பத்தி நிலையம் அமைந்துள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. ஆந்திர பிரதேசம்

இ. கேரளம்

ஈ. அருணாச்சல பிரதேசம் ☑



✓ அருணாச்சல பிரதேச மாநிலத்தில் 600 மெகாவாட் (MW) உற்பத்தித் திறன்கொண்ட கமெங் நீர்மின்னுற்பத்தி நிலையத்தை பிரதமர் நரேந்திர மோதி திறந்து வைத்தார். எரிசக்தி அமைச்சகத்தின்கீழ் உள்ள 'மினி இரத்னா' மின் உற்பத்தி பொதுத்துறை நிறுவனமான, 'NEEPCO' லிமிடெட் மூலம் செயல்படுத்தப்படும் மிகப்பெரிய நீர் மின்னுற்பத்தி திட்டம் இதுவாகும். இது வடகிழக்கில் அமைந்துள்ள ஆறாவது நீர் மின்னுற்பத்தி நிலையமாகும். இந்தத் திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் 3353 மில்லியன் அலகுகளை உற்பத்தி செய்வது அருணாச்சல பிரதேச மாநிலத்தை மின் மிகை மாநிலமாக மாற்றும். இந்த மின்னுற்பத்தி தேசிய கட்டத்திற்கும் பங்களிக்கும்.

5. 2021–22 இந்திய மாநிலங்கள் குறித்த புள்ளிவிவரங்களின் கையேட்டை வெளியிட்ட நிறுவனம் எது?

அ. SEBI

ஆ. இந்திய ரிசர்வ் வங்கி ☑

இ. NITI ஆயோக்

ஈ. பொருளாதார விவகாரங்கள் துறை

✓ இந்திய ரிசர்வ் வங்கி தனது புள்ளிவிவர வெளியீட்டின் ஏழாவது பதிப்பை, "இந்திய மாநிலங்கள் குறித்த கையேடு 2021–22" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2022–23இல் சுமார் 7% இருக்கும். இது இந்த நிதியாண்டின் ஜூன்–செப்டம்பர் காலாண்டில் 6.1% முதல் 6.3% வரை வளர்ச்சி விகிதத்தை பதிவுசெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக்கையேட்டின் சமீபத்திய பதிப்பில், சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் என்ற இரண்டு புதிய பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

6. கல்வி அமைச்சகத்தின் செயல்திறன் தரவரிசைக் குறியீட்டின்படி, 2020–21ஆம் ஆண்டில் எத்தனை மாநிலங்கள் நிலை–2 தரத்தை எட்டியுள்ளன?

அ. ஒன்றுமில்லை

ஆ. இரண்டு

இ. நான்கு

ஈ. ஏழு ☑



✓ 2020–21ஆம் ஆண்டிற்கான மாநிலங்கள் & யூனியன் பிரதேசங்களுக்கான செயல்திறன் தரவரிசை குறியீட்டை நடுவண் கல்வியமைச்சகம் வெளியிட்டுள்ளது. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள பள்ளிக்கல்வி முறைகளின் ஆதார அடிப்படையிலான விரிவான பகுப்பாய்வை இந்தக் குறியீடு கொண்டுள்ளது. கேரளம், பஞ்சாப், சண்டிகர், மகாராஷ்டிரா, குஜராத், இராஜஸ்தான் மற்றும் ஆந்திர பிரதேசம் என மொத்தம் ஏழு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் 2020–21இல் நிலை–2 என்ற தரத்தை எட்டியுள்ளன. PGI 2020–21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை பத்துத்தரங்களாக வகைப்படுத்தியுள்ளது; அதில் ஒரு மாநிலமோ அல்லது யூனியன் பிரதேசமோ அதிகபட்சமாக அடையக்கூடிய தரம் 'நிலை–1' ஆகும்.

7. ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டத்துடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?

அ. வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சகம் ☑

ஆ. உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

இ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ. நகர்ப்புற மற்றும் வீட்டு விவகாரங்கள் அமைச்சகம்

रसायन एवं उर्वरक मंत्रालय
MINISTRY OF CHEMICALS AND FERTILIZERS
सत्यमेव जयते

✓ 2022–23 ரபி பருவத்திற்கான P&K உரங்களுக்கான ஊட்டச்சத்து அடிப்படையிலான மானிய விகிதங்களை பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு அங்கீகரித்துள்ளது. 2022–23ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் பாஸ்பேடிக் மற்றும் பொட்டாசிக் (P&K) உரங்களுக்கு ₹51,875 கோடி மானியம் வழங்க அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. நடுவண் வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தால் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. உர

உற்பத்தியாளர்கள்/இறக்குமதியாளர்கள்மூலம் மானிய விலையில் உழவர்களுக்கு உரங்களை இந்திய அரசாங்கம் கிடைக்கச் செய்கிறது.

8. 'நகர்ப்புற போக்குவரவு இந்தியா மாநாடு மற்றும் கண்காட்சி – 2022' நடத்தப்படுகிற மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா ☑

இ. கர்நாடகா

ஈ. மகாராஷ்டிரா



✓ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது கேரள மாநில அரசுடன் இணைந்து கொச்சியில் 15ஆவது நகர்ப்புற போக்குவரவு இந்தியா மாநாடு மற்றும் கண்காட்சி – 2022 ஆகியவற்றை ஏற்பாடு செய்துள்ளது. சர்வதேச அளவில் நடைமுறையில் உள்ள நவீன மற்றும் சிறந்த நகர்ப்புற போக்குவரத்து நடைமுறைகள் குறித்து அதிகாரிகள் தெரிந்து கொள்வதற்காகவே இந்த கருத்தரங்கு நடத்தப்படுகிறது. நடுவண் மற்றும் மாநில அரசுகளின் மூத்த அதிகாரிகள், கொள்கை வடிவமைப்பாளர்கள், மெட்ரோ இரயில் நிறுவனங்களின் மேலாண் இயக்குநர்கள், போக்குவரத்து நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகள், பன்னாட்டு வல்லுநர்கள், தொழிற்துறை வல்லுநர்கள், கல்வியாளர்கள், மாணவர்கள் முதலியவர்கள் இதில் கலந்துகொள்வார்கள்.

9. அமெரிக்க செய்திகள் மற்றும் உலக அறிக்கையின்படி, மலிவான உற்பத்தி செலவைக் கொண்டுள்ள நாடு எது?

அ. இந்தியா ☑

ஆ. வங்காளதேசம்

இ. சீனா

ஈ. இந்தோனேசியா



✓ அமெரிக்க செய்திகள் மற்றும் உலக அறிக்கையின்படி, 85 நாடுகளில், சீனா மற்றும் வியட்நாமை விஞ்சி மலிவான உற்பத்தி செலவைக்கொண்ட நாடாக இந்தியா தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த சிறந்த நாடுகளின் தர வரிசையில் இந்தியா 31ஆம் இடத்தைப்பிடித்துள்ளது; அதே வேளையில், 'வணிகத்திற்கான திறந்த' பிரிவில் 37ஆம் இடத்தைப்பிடித்தது. ஒட்டுமொத்த சிறந்த நாடுகளின் தரவரிசையில், சுவிச்சர்லாந்து முதலிடத்திலும், ஜெர்மனி, கனடா, அமெரிக்கா மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.

10. இந்தியா, எந்த மாதத்தில், 'கங்கா உத்சவத்தை'க் கொண்டாடவுள்ளது?

அ. அக்டோபர்

ஆ. நவம்பர் ☑

இ. டிசம்பர்

ஈ. ஏப்ரல்

✓ இந்திய அரசு இந்த ஆண்டு நவ.1–3 வரை 'கங்கா உத்சவத்தை'க் கொண்டாடவுள்ளது. கங்கையாற்றுக்குப் புத்துயிர் அளிப்பதில் பங்கேற்பாளர்களின் ஈடுபாடு & பொதுமக்கள் பங்கேற்பை ஊக்குவிப்பதில் இது கவனஞ்செலுத்துகிறது. தூய்மையான கங்கைக்கான தேசிய இயக்கத்தின்படி, தேசிய மற்றும் மாநில அளவில் வடிவமைக்கப்பட்ட பல்வேறு செயல்பாடுகள், நேரடி முறை மற்றும் மெய்நிகர் முறையில் ஏற்பாடு செய்யப்படும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கம்போடியாவில் இந்தியா–ஆசியான்பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாடு: இராஜ்நாத் சிங் நவ.22இல் பயணம்

இந்தியா–ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக, பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் கம்போடியாவுக்கு 2 நாள் பயணமாக நவ.22–இல் செல்லவிருக்கிறார்.

கம்போடியாவின் துணைப்பிரதமரும், பாதுகாப்பு அமைச்சருமான சாம்டெக் பிச்சே சேனாவின் அழைப்பின் பேரில், இராஜ்நாத் சிங் செல்லவுள்ளார். ஆசியான் அமைப்பில் பேச்சுவார்த்தைரீதியிலான கூட்டுறவு நாடாக 1992இல் இந்தியா சேர்ந்தது. ஆசியான்+ நாடுகளின் மாநாடு மற்றும் இந்தியா–ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாடு தவிர, பல்வேறு உறுப்புநாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களுடன் இராஜ்நாத் சிங் இருதரப்பு விவாதங்களை நடத்த உள்ளார். பரஸ்பர பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் இருதரப்புக்கும் நன்மைபயக்கும் உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து இராஜ்நாத் சிங் ஆலோசிக்கவுள்ளார்.

---

2. குறைந்த எடை குழந்தைகள்! பாதிப்புகளும்... பாதுகாப்பும்...

ஆண்டுதோறும் நவ.15–21ஆம் தேதி வரை பச்சிளங்குழந்தைகள் பாதுகாப்பு வாரமாக கடைப்பிடிக்கப்படுகிறது. கடந்த ஆண்டைப் பொருத்தவரை சராசரி அளவைவிடக் குறைவான எடையுடன் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் அதிகரித்துள்ளது.

குறைப்பிரசவம் மற்றும் மிகக்குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு உடல் உறுப்புகளின் செயல்திறன் குறையும் என்றும் இரத்தநோய்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் என்றும் எச்சரிக்கின்றனர் மருத்துவர்கள்.

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் பிறக்கும் குழந்தைகள் – 12 இலட்சம்

சராசரி எடை – 2.5 கிலோ முதல் 3.4 கிலோ வரை

சராசரி எடையில் பிறந்த குழந்தைகள்

2018–19 – 87 சதவீதம்

2021–22 – 82 சதவீதம்

எடை குறைவு பிரசவங்கள்

100–இல் 13 குழந்தைகள் (2021–22)

100–இல் 8 குழந்தைகள் (2018–19)

குறைந்த எடை குழந்தைகள் விகிதம் – 22 சதவீதம் (2021–22)

பேறுகாலத்தில் கர்ப்பிணிகளுக்கு நோய்கள் (2021–22)

இரத்தசோகை – 13%

சர்க்கரை நோய் – 3%

உயர் இரத்த அழுத்தம் – 1%

அதீத உடற்பருமன் – 10%

எடை குறைவுக்கான காரணங்கள்

பேறுகால ஊட்டச்சத்துக் குறைபாடு

மருத்துவக்கண்காணிப்பு இல்லாமை

மரபணு பாதிப்புகள்

இரட்டைக்குழந்தைகள் உருவாதல்

தாய்க்கு மனவழுத்தம்

உயர் இரத்த அழுத்தம்

கட்டுப்பாடற்ற சர்க்கரை அளவு

உடற்பயிற்சி இல்லாமை

தேவையற்ற மருந்துகளை உட்கொள்ளுதல்

மது, புகைப்பழக்கம்

சினைப்பை, தொப்புள்கொடி கிருமித்தொற்று

எடை குறைவு குழந்தைகளுக்கான அச்சுறுத்தல்கள்

டைப்–1 சர்க்கரை நோய்

கற்றலில் குறைபாடு

நரம்புசார் பாதிப்புகள்

ஹைபாக்சியா (மூச்சுத்திணறல்)

நிமோனியா பாதிப்பு

இரத்தவோட்டத்தில் சுணக்கம்

சிவப்பணுக்கள் அதிகரிப்பு நோய்

குடற்புழு மருந்துகள்...

19 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் சிறாருக்கு, 'அல்பெண்டசோல்' எனப்படும் குடற்புழு நீக்க மாத்திரைகள் பள்ளிகளிலோ அல்லது வீடுகளில் நேரடியாகவோ வழங்கப்படுவது வழக்கம். அதன்படி, ஆண்டுக்கு இருமுறை தமிழ்நாட்டில் 8 கோடி, 'அல்பெண்டசோல்' மாத்திரைகள் விநியோகிக்கப்படுகின்றன.

குடற்புழு நீக்க மாத்திரைகள் உட்கொள்ளாதபட்சத்தில் ஊட்டச்சத்துக்குறைபாடு, பசியின்மை, இரத்தசோகை, வயிற்று உபாதைகள், சோர்வுநிலை உள்ளிட்ட பிரச்னைகள் குழந்தைகளுக்கு ஏற்படும்.

தடுப்பூசி அட்டவணை...

காலம் – தடுப்பூசிகள்

பிறந்தவுடன் – பிசிஜி (காசநோய்), ஹெபிடைடிஸ் பி (கல்லீரல் தொற்று மற்றும் புற்றுநோய்), ஓபிவி (இளம்பிள்ளை வாதம்)

ஆறு வாரங்கள் – ஓபிவி (இளம்பிள்ளை வாதம்), ஐபிவி (இளம்பிள்ளை வாதம்), பென்டா (கக்குவான் இருமல், இரண ஜன்னி, தொண்டை அடைப்பான், இன்ஃப்ளூயன்ஸா தொற்று, கல்லீரல் தொற்று), பிசிவி (நிமோனியா), ரோட்டா (வயிற்றுப்போக்கு)

10 வாரங்கள் – ஓபிவி, பென்டா, ரோட்டா

14 வாரங்கள் – ஓபிவி, ஐபிவி, பென்டா, பிசிவி, ரோட்டா

9 மாதங்கள் – பிசிவி (பூஸ்டர்), எம் ஆர் (தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோய்), சப்பானிய மூளைக்காய்ச்சல், விட்டமின் – ஏ

16–24 மாதங்கள் – ஓபிவி, எம் ஆர்., சப்பானிய மூளைக்காய்ச்சல், டிபிடி பூஸ்டர் (கக்குவான் இருமல், தொண்டை அடைப்பான், இரண ஜன்னி)

5–6 வயது – டிபிடி இரண்டாவது பூஸ்டர் தவணை

10 வயது – டெட்டனஸ் (டிடி)

16 வயது – டெட்டனஸ் (டிடி)

1. 2022 – உலகளாவிய தகவல் தொழில்நுட்ப அறிக்கையின்படி, வலையமைப்பு தயார்நிலை குறியீட்டில் முதலிடம் வகிக்கிற நாடு எது?

அ. அமெரிக்கா ☑

ஆ. சிங்கப்பூர்

இ. இந்தியா

ஈ. சுவீடன்



✓ அமெரிக்கா, சிங்கப்பூர், சுவீடன், நெதர்லாந்து மற்றும் சுவிச்சர்லாந்து ஆகியவை 2022–வலையமைப்பு தயார்நிலைக் குறியீட்டின்படி நெட்வொர்க் தயார்நிலையிலுள்ள நாடுகளாகும். உலகளாவிய தகவல் தொழில்நுட்ப அறிக்கையின் ஒருபகுதியாக உலக பொருளாதார மன்றத்தால், கடந்த 2002இல் இந்தக்குறியீடு தொடங்கப்பட்டது. மேம்பாடு மற்றும் போட்டித்தன்மைக்கு தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான முக்கிய அளவீடாகும் இந்தக் குறியீடு. இந்த ஆண்டுக்கான கருப்பொருள், "Stepping into the new digital era: How and why digital natives will shape the world" என்பதாகும்.

2. இந்தியாவின் 53ஆவது சர்வதேச திரைப்பட விழாவின்போது (IFFI) 2022ஆம் ஆண்டுக்கான இந்திய திரைப்பட ஆளுமை விருதானது கீழ்க்காணும் யாருக்கு வழங்கப்பட்டது?

அ. இரஜினிகாந்த்

ஆ. சிரஞ்சீவி ☑

இ. கமல்ஹாசன்

ஈ. மோகன்லால்



✓ 53ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவின் (IFFI) தொடக்க விழாவில், தெலுங்கு 'சூப்பர் ஸ்டார்' சிரஞ்சீவிக்கு 2022ஆம் ஆண்டுக்கான இந்திய திரைப்பட ஆளுமை விருது வழங்கப்பட்டது. நடுவண் தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், கோவா ஆளுநர் PS ஸ்ரீதரன்பிள்ளை, முதலமைச்சர் பிரமோத் சாவந்த் ஆகியோர் கலந்துகொண்ட தொடக்க விழாவுடன் 53ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா தொடங்கியது.

3. ஏழை நாடுகளை ஆதரிப்பதற்காக, "இழப்பு மற்றும் சேத நிதியத்தை" தொடங்கிய மாநாடு எது?

அ. COP-27 ☑

ஆ. G-20 வருடாந்திர உச்சிமாநாடு

இ. ASEAN வருடாந்திர உச்சிமாநாடு


ஈ. WEF வருடாந்திர உச்சிமாநாடு

✓ ஐநாஇன் காலநிலை உச்சிமாநாடான COP–27இல் ஏறக்குறைய இருநூறு நாடுகள் பருவநிலை தாக்கங்களால் பாதிக்கப்பட்ட ஏழை நாடுகளை ஆதரிப்பதற்காக, "இழப்பு மற்றும் சேத நிதியத்தை" அமைப்பதற்கு ஒப்புக்கொண்டன. "இழப்பு மற்றும் சேதம்" என்பது காலநிலை இயக்கத்தால் ஏற்படும் வானிலை தீவிரங்கள் அல்லது கடல்மட்ட உயர்வு போன்ற தாக்கங்களால் ஏற்படும் செலவினங்களைக் குறிக்கிறது. ஏழை நாடுகளால் தவிர்க்க முடியாத அல்லது மாற்றியமைக்க முடியாத சேதத்தின் செலவை இந்த நிதியம் ஈடுசெய்கிறது.

4. ITTF–ATTU ஆசிய கோப்பையில் பதக்கம் வென்ற முதல் இந்திய டேபிள் டென்னிஸ் வீரர் / வீராங்கனை யார்?

அ. சரத் கமல் **ஆ. மனிகா பத்ரா ☑**

இ. ஸ்ரீஜா அகுல ஈ. சத்தியன் ஞானசேகரன்



✓ தாய்லாந்தின் பாங்காக்கில் நடைபெற்ற ITTF–ATTU ஆசிய கோப்பை டேபிள் டென்னிஸ் போட்டியில் பதக்கம் வென்ற முதல் இந்திய டேபிள் டென்னிஸ் வீராங்கனையாக மனிகா பத்ரா ஆனார். உலகின் 6ஆம்நிலை டேபிள் டென்னிஸ் வீராங்கனையான ஜப்பானின் ஹினா ஹயாடாவை தோற்கடித்து அவர் வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார். கடந்த 1997ஆம் ஆண்டில் வெள்ளி மற்றும் 2000ஆம் ஆண்டில் வெண்கலம் வென்ற சேத்தன் பாபூர், இதற்கு முன் ஆசிய கோப்பையில் பதக்கம் வென்ற ஒரே இந்திய டேபிள் டென்னிஸ் வீரராக இருந்தார்.

5. 2022ஆம் ஆண்டில் செயற்கை நுண்ணறிவுக்கான உலகளாவிய கூட்டாண்மையின் தலைவராக இருக்கும் நாடு எது?

அ. இலங்கை

ஆ. வங்காளதேசம்

இ. இந்தியா ☑

ஈ. இங்கிலாந்து



✓ செயற்கை நுண்ணறிவுக்கான உலகளாவிய கூட்டாண்மைக்கான (GPAI) தலைமைப்பொறுப்பை பிரான்ஸிடம் இருந்து இந்தியா பெற்றுக்கொண்டது. GPAI என்பது அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய ஒன்றியம், ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, நியூசிலாந்து, கொரியா குடியரசு மற்றும் சிங்கப்பூர் உட்பட 25 உறுப்புநாடுகளின் சங்கமாகும். இந்தியா, கடந்த 2020இல் GPAIஇன் நிறுவன உறுப்பினராக இணைந்தது.

6. UN–FAO கூட்டறிக்கையின்படி, எந்த நாட்டைச் சார்ந்த எட்டு மில்லியன் மக்கள் பட்டினியால் வாடும் அபாயத்தில் உள்ளனர்?

அ. தெற்கு சூடான் ☑

ஆ. இஸ்ரேல்

இ. இலங்கை

ஈ. எகிப்து



✓ உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO), ஐநா குழந்தைகள் நிதியமான UNICEF மற்றும் உலக உணவுத் திட்டம் ஆகியவை கூட்டாக இணைந்து வெளியிட்ட ஒரு சமீபத்திய அறிக்கையின்படி, தெற்கு சூடானில் கிட்டத்தட்ட எட்டு மில்லியன் மக்கள் பட்டினியால் வாடும் அபாயத்தில் உள்ளனர். இந்த அறிக்கையின்படி, அதிக அளவிலான உணவுப்பாதுகாப்பின்மை மற்றும் ஊட்டச்சத்துக குறைபாட்டை எதிர்கொள்ளும் மக்களின் விகிதம், கடந்த 2013 மற்றும் 2016ஆம் ஆண்டில் நடந்த மோதலின்போது இருந்த அளவைவிட அதிகரித்துள்ளது.

7. அண்மையில் இந்தியாவின் மிகப்பெரிய காற்றாலை நிறுவப்பட்ட மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. மகாராஷ்டிரா

இ. குஜராத் ☑

ஈ. கர்நாடகா



✓ அதானி நியூ இண்டஸ்ட்ரீஸ் இந்தியாவின் மிகப்பெரிய காற்றாலை மின்னியற்றியை குஜராத் மாநிலத்தில் உள்ள முந்த்ராவில் நிறுவியுள்ளது. இந்த விசையாழி ஒற்றுமை சிலையைவிட (182 மீ) உயரமானது என்று கூறப்படுகிறது. அதானி எண்டர்பிரைசஸ் லிமிடெடின் துணை நிறுவனமான முந்த்ரா விண்ட்டெக் லிமிடெட்மூலம் இவ்விசையாழி நிறுவப்பட்டுள்ளது.

8. ஆசிய கான்டினென்டல் செஸ் சாம்பியன்ஷிப்பில் ஓபன் மற்றும் மகளிர் பட்டங்களை வென்ற இந்திய செஸ் வீரர்/வீராங்கனைகள் யார்?

அ. R பிரக்ஞானந்தா மற்றும் P V நந்திதா ☑



ஆ. B அதிபன் மற்றும் கோனேரு ஹம்பி

இ. R பிரக்ஞானந்தா மற்றும் கோனேரு ஹம்பி

ஈ. B அதிபன் மற்றும் P V நந்திதா

✓ ஆசிய கான்டினென்டல் செஸ் சாம்பியன்ஷிப்பில் இந்திய கிராண்ட்மாஸ்டர் ஆர் பிரக்ஞானந்தா மற்றும் சகநாட்டு வீரரான PV நந்திதா ஆகியோர் முறையே ஓபன் மற்றும் பெண்கள் பிரிவில் பட்டங்களை வென்றனர். பிரக்ஞானந்தா ஒன்பதாவது மற்றும் கடைசி சுற்றில் சகநாட்டவரான B அதிபனுடன் டிரா செய்து ஏழு புள்ளிகளுடன் பட்டத்தை வென்றார். இந்த வெற்றி பிரக்ஞானந்தாவுக்கு அடுத்த FIDE உலகக்கோப்பைக்கான அனுமதியையும் பெற்றுத்தந்தது. பெண்களுக்கான போட்டியில் நந்திதா ஆட்டமிழக்காமல் 7.5 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தார்.

9. அண்மையில் காலஞ்சென்ற எலா பட், கீழ்க்காணும் எந்த முதன்மை நிறுவனத்தின் நிறுவனராவார்?

அ. SEWA ☑



ஆ. AICTU

இ. CII

ஈ. FICCI

✓ SEWAஇன் (Self Employed Women's Association) நிறுவனரும் புகழ்பெற்ற பெண்ணுரிமை ஆர்வலருமான எலா பட் அண்மையில் காலமானார். SEWA ஆனது அமைப்புசாரா துறையில் பணிபுரியும் பெண்களின் தொழிற்சங்கமாக உருவாக்கப்பட்டது; இதில் இப்போது இரண்டு மில்லியன் உறுப்பினர்கள் உள்ளனர். 89 வயதான, 'பத்ம பூஷண்' விருதாளரான இவர், பெண்கள் அதிகாரமளிப்புத் துறையில் முன்னோடியாக இருந்தார்.

10. 17ஆவது பிரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டில் கீழ்க்காணும் எந்த நாட்டின் அதிபர் முதன்மை விருந்தினராக கலந்துகொள்கிறார்?

அ. ஆஸ்திரேலியா



ஆ. இஸ்ரேல்

இ. கயானா ☑

ஈ. பிரேசில்

✓ 17ஆவது பிரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டில் கயானா அதிபர் Dr முகமது இர்பான் அலி முதன்மை விருந்தினராக கலந்துகொள்கிறார். இந்த மாநாடு 2023 ஜனவரியில் மத்திய பிரதேச மாநிலத்தின் இந்தூரில் நடைபெறும். இளையோர் பிரவாசி பாரதிய திவாஸ் விழாவில் சிறப்பு விருந்தினராக ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் சனெட்டா மஸ்கரென்ஹாஸ் கலந்துகொள்வார் என்றும் நடுவண் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. 17ஆவது பிரவாசி பாரதிய திவாஸின் கருப்பொருள், "Diaspora: Reliable Partners for India's Progress in Amrit Kaal" என்பதாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஜோகோவிச் சாதனை சாம்பியன்

ஏடிபி ஃபைனல்ஸ் ஆடவர் டென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் சாம்பியன் ஆனார். இறுதிச்சுற்றில் அவர் 7–5, 6–3 என்ற செட்களில் நார்வேயின் கேஸ்பர் ரூடை தோற்கடித்தார். இந்தப் போட்டியில் அவர் 2015ஆம் ஆண்டுக்குப்பிறகு சாம்பியன் ஆவது இதுவே முதல் முறையாகும். இப்போட்டியில் சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் ஆறு முறை சாம்பியன் ஆனதே அதிகபட்சமாக இருக்கும் நிலையில், தற்போது ஜோகோவிச்சும் அதே எண்ணிக்கையிலான பட்டங்களை வென்று அவரது சாதனையை சமன் செய்திருக்கிறார்.

மேலும், இந்தப் பட்டத்தை வெல்லும் மிக வயதான வீரர் (35) என்ற பெருமையையும் பெற்ற அவர், ரொக்கப் பரிசாக ரூ.38 கோடியை கைப்பற்றியுள்ளார். இந்தப் போட்டி முழுவதுமாக அவர் ஒரு தோல்வியைக் கூட பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்துடன் நடப்பு ஆண்டை, விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் உள்பட 5 சாம்பியன் பட்டங்களுடன் ஜோகோவிச் நிறைவு செய்திருக்கிறார்.

1. 'கர்மயோகி பிரரம்ப்' என்பது கீழ்க்காணும் எந்தப் பிரிவினருக்காகத் தயாரிக்கப்பட்ட பாடமாகும்?

அ. வெளிநாடு வாழ் இந்தியர்கள்

ஆ. அரசுப் பணியாளர்கள் ☑

இ. MSMEகள்

ஈ. அமைப்புசாரா துறை ஊழியர்கள்



✓ பிரதமர் நரேந்திர மோதி, அரசு ஊழியர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட இணையவழி அடிப்படையில் நடத்தப்படும் 'கர்மயோகி பிரரம்ப்' என்ற பாடத்தொகுதியைத் தொடங்கி வைத்தார். பிரதம மந்திரி ரோஸ்கர் மேளாவின்கீழ் 71,000 இளைஞர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் திட்டத்தையும் அவர் அப்போது தொடக்கிவைத்தார்.

2. 'சங்காய் திருவிழா' என்பது கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் கொண்டாடப்படும் ஒரு கலாச்சார விழாவாகும்?

அ. மேற்கு வங்காளம்

ஆ. ஒடிஸா

இ. மணிப்பூர் ☑

ஈ. அஸ்ஸாம்



✓ நடுவண் சுற்றுலாத்துறை அமைச்சர் ஜி கிசன்ரெட்டி, சங்காய் இனவியல் பூங்காவில் 'மணிப்பூர் சங்காய் விழாவைத் தொடக்கிவைத்தார். வடகிழக்கு மாநிலம் முழுவதும் 13 இடங்களில் நவ.30ஆம் தேதி வரை 10 நாட்கள் நடைபெறும் இவ்விழா, மாநிலத்தின் அனைத்து பழங்குடியினத்தைச் சார்ந்த மக்களின் பங்கேற்பின்மூலம் ஒற்றுமையை நிலை பெறச்செய்வதற்கான ஒரு திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

3. 2022இல் இந்தோ–பசிபிக் பிராந்திய அளவிலான பேச்சுவார்த்தையை நடத்தும் நகரம் எது?

அ. கொழும்பு

ஆ. புது தில்லி ☑

இ. டாக்கா

ஈ. இஸ்லாமாபாத்

✓ "இந்தோ–பசிபிக் பெருங்கடல்கள் முனைவைச் செயல்படுத்துதல்" என்ற கருப்பொருளில் இந்தோ–பசிபிக் பிராந்திய அளவிலான பேச்சுவார்த்தையின் நான்காவது பதிப்பு புது தில்லியில் தொடங்கப்பட்டது. இப்பேச்சுவார்த்தை என்பது இந்திய கடற்படையின் உயர்மட்ட சர்வதேச வருடாந்திர மாநாடாகும். தேசிய கடல்சார் அறக்கட்டளையானது இந்த நிகழ்வின் அறிவுசார் பங்காளராகவும் தலைமை அமைப்பாளராகவும் உள்ளது.

4. 2022இல் UNEP, 'சாம்பியன்ஸ் ஆஃப் தி எர்த்' விருதைப் பெற்ற இந்தியர் யார்?

அ. பூர்ணிமா தேவி பர்மன் ☑

ஆ. நரேந்திர மோதி

இ. K K ஷைலஜா

ஈ. பியூஷ் கோயல்



✓ அஸ்ஸாமைச் சேர்ந்த வனவுயிரி உயிரியலாளர் பூர்ணிமா தேவி பர்மனுக்கு இந்த ஆண்டுக்கான, 'சாம்பியன்ஸ் ஆஃப் தி எர்த்' விருது வழங்கப்பட்டது. இது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தால் (UNEP) வழங்கப்படுகிறது. அஸ்ஸாமிய மொழியில், 'ஹர்கிலா' என்று அழைக்கப்படும் 'பெருநாரையை'ப் பாதுகாக்கும் திட்டத்திற்காக, 'தொழில் முனைவோர் பார்வை' பிரிவில் பூர்ணிமா தேவி பர்மன் அவ்விருதை வென்றார்.

5. அண்மையில், 'தற்கொலை தடுப்புக் கொள்கையை' வெளியிட்ட ஆசிய நாடு எது?

அ. இலங்கை

ஆ. வங்காளதேசம்

இ. இந்தியா ☑

ஈ. இங்கிலாந்து



✓ இந்தியாவின் நடுவண் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகமானது ஒரு 'தேசிய தற்கொலை தடுப்பு உத்தி'யை அறிவித்துள்ளது. 2030ஆம் ஆண்டளவில் தற்கொலையின் காரணமாக ஏற்படும் மரணங்களை 10% குறைக்கும் வகையிலான செயல்திட்டங்களை இது கொண்டுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளுக்குள் அனைத்து மாவட்டங்களிலும், அடுத்த 8 ஆண்டுகளுக்குள் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் மனநலப் பாடத்திட்டத்தை ஒருங்கிணைக்க வேண்டும் என்பது இதன் நோக்கமாகும்.

6. 'உலக ஆழிப்பேரலை விழிப்புணர்வு நாள்' அனுசரிக்கப்படுகிற மாதம் எது?

அ. ஜனவரி

ஆ. மே

இ. செப்டம்பர்

ஈ. நவம்பர் ☑



✓ கடந்த 2015ஆம் ஆண்டில் ஐநா சபையானது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர்.5ஆம் தேதி உலக சுனாமி விழிப்புணர்வு நாளாக அனுசரிக்கப்படும் என்று அறிவித்தது. ஆழிப்பேரலை தாக்கும்போது, அனைவரும் உயரமான இடத்திற்குச் செல்ல தயாராக இருக்கவேண்டும் என்பதை இந்நாள் நினைவூட்டுகிறது. பேரிடர் அபாயக் குறைப்புக்கான ஐநா அலுவலகத்தின்படி, தொடக்கநிலை எச்சரிக்கை மற்றும் முன்கூட்டிய நடவடிக்கை ஆகியவை மக்களைக்காக்கும் இரு பயனுள்ள கருவிகளாகும்.

7. 2022ஆம் ஆண்டில், 'வேளாண் தொழில்நுட்ப இந்தியா – வேளாண் மற்றும் உணவு தொழில்நுட்பக் கண்காட்சி' நடத்தப்படும் நகரம் எது?

அ. மும்பை

ஆ. சண்டிகர் ☑

இ. மைசூரு

ஈ. காந்திநகர்



✓ இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு (CII) ஏற்பாடு செய்துள்ள 'வேளாண் தொழில்நுட்ப இந்தியாவின் 15ஆவது பதிப்பு நவ.4–7 வரை சண்டிகரில் நடக்கவுள்ளது. உழவு மற்றும் உழவர்கள்நல அமைச்சகம், உணவுப் பதனிடும் தொழிற் துறைகள் அமைச்சகம் மற்றும் வேளாண் & பதப்படுத்தப்பட்ட உணவு தயாரிப்புகள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) CII வேளாண் தொழில்நுட்ப இந்தியா – வேளாண் மற்றும் உணவு தொழில்நுட்பக் கண்காட்சிக்கான பங்காளர்களாக உள்ளன. இந்த ஆண்டுக்கான கருப்பொருள், "Digital Transformation for Sustainable Agriculture and Food Security" என்பதாகும்.

8. இந்தியாவில், 'தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. ஆகஸ்ட்.07 **ஆ. நவம்பர்.07 ☑**

இ. டிசம்பர்.07 ஈ. ஜனவரி.07



✓ புற்றுநோயின் அபாயங்களை எடுத்துரைப்பதற்காக, இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர்.07 அன்று 'தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாள்' அனுசரிக்கப்படுகிறது. தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாளானது கடந்த 2014 செப்டம்பரில் அறிவிக்கப்பட்டது. இது நோபல் பரிசு பெற்ற மேரி கியூரியின் பிறந்தநாளுடன் ஒத்திசைந்து வருகிறது; அவருடைய பங்களிப்புகள் புற்றுநோய் சிகிச்சைக்கான கதிரியக்க சிகிச்சையின் வளர்ச்சிக்கு வழிகோலியது.

9. கேரள மாநில அரசால் நிறுவப்பட்ட, 'கேரள ஜோதி' விருதை முதன்முதலில் பெற்றவர் யார்?

அ. அடூர் கோபாலகிருஷ்ணன்

ஆ. M T வாசுதேவன் நாயர் ☑

இ. கணாய் குன்ஹிராமன்

ஈ. வைக்கம் விஜயலக்ஷ்மி



✓ மூத்த எழுத்தாளர் M T வாசுதேவன் நாயர், கேரள மாநில அரசால் நிறுவப்பட்ட முதல் 'கேரள ஜோதி' விருதைப் பெற்றவர். இதன் நடுவர் குழுமத்திற்கு பிரபல திரைப்பட தயாரிப்பாளர் அடூர் கோபாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். நடிகர் மம்மூட்டி, முன்னாள் அரசு ஊழியர், சமூக ஆர்வலர் T மாதவ மேனன் உள்ளிட்டோர் 'கேரள பிரபா' விருதுக்கும், 'சிற்பி' கணாய் குன்ஹிராமன், அறிவியலாளரும் கல்வியாளருமான M P பரமேஸ்வரன், பாடகி வைக்கம் விஜயலட்சுமி உள்ளிட்டோருக்கு, 'கேரள ஸ்ரீ' விருதும் வழங்கப்படவுள்ளது.

10. 'Innovations for You' என்ற நினைவுக் குறிப்பேட்டின் நான்காவது பதிப்பை வெளியிட்ட நிறுவனம் எது?

அ. NITI ஆயோக் ☑

ஆ. இந்திய ரிசர்வ் வங்கி

இ. UIDAI

ஈ. தேசிய புத்தாக்க அறக்கட்டளை



✓ NITI ஆயோக்கின் அடல் புத்தாக்க இயக்கமானது (AIM) 'Innovations for You' என்ற நினைவுக்குறிப்பேட்டின் 4ஆவது பதிப்பை வெளியிட்டது. இது AIM, NITI ஆயோக்கின் அடல் அடைவு மையங்களின் ஆதரவில் இருக்கும் இந்தியாவின் 75 வெற்றிகரமான பெண்தொழில்முனைவோர் பற்றிய விவரங்களைக் கொண்டுள்ளது. 'Innovations for You' என்ற தொடர், நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக துளிர் நிறுவனங்கள் எத்தகைய புதுமைகளை உருவாக்குகின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தீனதயாள் உபாத்தியாய ஊரக திறன் பயிற்சி திட்டம் (DDU–GKY)

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது நடுவணரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின்கீழ் ஒன்றிய மாநில அரசின் வாயிலாக கிராமப்புற இளைஞர்களின் வேலைவாய்ப்பிற்காக மாநில அரசின் ஊரக வளர்ச்சித் துறையின்மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை நீங்கலாக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டுவரும் தீனதயாள் உபாத்தியாய ஊரக திறன் பயிற்சி திட்டத்தின்கீழ் 18–35 வயதிற்குட்பட்ட கிராமப்புறத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு நிலையான மாத வருமானம் ஈட்டும் வகையில் திறன் பயிற்சியளித்து வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சுகாதார பராமரிப்பு, ஆயத்த ஆடை வடிவமைப்பு, கட்டுமானத் துறை, ஆட்டோமோட்டிவ், சில்லரை வணிகம், தளவாடங்கள், கட்டுமானத்துறை, அழகுக்கலை, தகவல் தொழில் நுட்பம், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் போன்ற எளிதில் வேலைவாய்ப்புப் பெறவியலும் 120க்கு மேற்பட்ட தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. மொத்த பயிற்சி ஒதுக்கீட்டில், சமூகரீதியாக பின்தங்கியுள்ள பிரிவினரான

பட்டியலினத்தினருக்கு – 62 சதவீதம், மலைவாழ் பழங்குடியினருக்கு 3 சதவீதம் மற்றும் சிறுபான்மையினருக்கு 16 சதவீதம் என சிறப்பு ஒதுக்கீடு அளித்து இலவச பயிற்சி வழங்கப்படுகிறது.

---

2. 23–11–2022 – 'உவமைக் கவிஞர்' **சுப்புரத்தினதாசன்** (**சுரதா**) அவர்களின் 102ஆவது பிறந்தநாள்.

---

3. 'கனவு இல்லம்' திட்டம்: 10 எழுத்தாளர்கள் தேர்வு

தமிழ் எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் வகையில், அவர்களுக்கு வீடு வழங்கும் திட்டத்தின்கீழ், நிகழாண்டில் 10 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதுகுறித்து, தமிழ்நாடு அரசு வெளியிட்ட அறிவிப்பு: எழுத்தாளர்களுக்கு வீடு வழங்கும் திட்டமானது, 'கனவு இல்லம்' என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிகழாண்டில், பத்துப்பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

---

1. இந்தியாவுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை அண்மையில் நிறைவேற்றியுள்ள நாடு எது?

அ. இலங்கை



ஆ. ஆஸ்திரேலியா ☑

இ. பிரான்ஸ்

ஈ. ஜெர்மனி

✓ இந்தியாவுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை ஆஸ்திரேலிய நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளதாக பிரதமர் அந்தோனி அல்பானீஸ் அறிவித்துள்ளார். இந்தத் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டவுடன், ஜவுளித்துறை, தோல், அறைகலன்கள், நகைகள் மற்றும் இயந்திரங்கள் உட்பட இந்தியாவின் 6,000 துறைகளுக்கு ஆஸ்திரேலிய சந்தையில் வரியில்லா அணுகலை வழங்கும். முதல் நாளன்று சுமார் 96.4 சதவீத ஏற்றுமதிகளுக்கு வரியேதும் விதிக்காமல் ஆஸ்திரேலிய இந்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்தியது.

2. கீழ்க்காணும் எந்த மாநிலத்தின் முதல் பல்லுயிர் பாரம்பரிய தளமாக, 'அரிட்டாபட்டி' அறிவிக்கப்பட்டுள்ளது?

அ. தமிழ்நாடு ☑



ஆ. கேரளா

இ. தெலுங்கானா

ஈ. ஒடிஸா

✓ சீர்மேவும் தமிழ்நாட்டின் மதுரை மாவட்டத்தில் உள்ள அரிட்டாபட்டி கிராமம் தமிழ்நாட்டின் முதல் பல்லுயிர் பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு வகையான வல்லூறுகள், கழுகுகள் உட்பட சுமார் 250 பறவையினங்கள் அங்கு காணப்படுவதால் அது வளமான உயிரியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாரம்பரிய தளமாக கருதப்படுகிறது. இது எறும்புண்ணி, மலைப்பாம்பு மற்றும் தேவாங்குபோன்ற வனவுயிரிகளையும் கொண்டுள்ளது. இந்த அறிவிப்பு, 'உயிரியல் பன்முகத்தன்மை சட்டம், 2002'இன்கீழ் வருகிறது.

3. சமீப செய்திகளில் இடம்பெற்ற அரசியலமைப்பின் 324ஆவது பிரிவு, எந்தப் பதவி நியமனத்துடன் தொடர்பானது?

அ. குடியரசுத்தலைவர்

ஆ. ஆளுநர்

இ. தேர்தல் ஆணையர் ☑

ஈ. உச்சநீதிமன்ற தலைமை நீதியரசர்

✓ தேர்தல் ஆணையர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் ஆணையர்களின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் சட்டம் இல்லாதது கவலையளிக்கும் போக்கு என உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. தேர்தல் ஆணையர்கள் நியமம்பற்றி பேசும் அரசியலமைப்பின் 324ஆவது பிரிவைச் சுட்டிக்காட்டிய உச்சநீதிமன்றம், அத்தகைய நியமனங்களுக்கான வழிமுறையை அது வழங்கவில்லை என்று கூறியது. கடந்த 2004ஆம் ஆண்டு முதல், எந்தத் தலைமைத் தேர்தல் ஆணையரும் 6 ஆண்டுகால பதவியை நிறைவு செய்ததில்லை.

4. அண்மைய OECD அறிக்கையின்படி, நிதியாண்டு 2022–23–க்கான இந்தியாவின் GDP முன்கணிப்பு என்ன?

அ. 6.1%

ஆ. 6.6% ☑

இ. 7.2%

ஈ. 7.5%

✓ பொருளியல் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பானது (OECD) நிதியாண்டு 2022–23க்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு வளர்ச்சிக் கணிப்பை 6.9 சதவீதத்திலிருந்து 6.6 சதவீதமாகக் குறைத்துள்ளது. அதீத நடுத்தர கால உலகளாவிய நிச்சயமற்ற தன்மை மற்றும் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் வேகக்குறைவு ஆகியவை இதற்கான காரணங்களாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறைந்துவரும் உலகளாவிய தேவை, பணவியல் கொள்கையின் கடுமை ஆகியவை இருந்தபோதிலும், 2022–23 நிதியாண்டில் G20இல் இந்தியா இரண்டாவது வேகமாக வளரும் பொருளாதாரமாக இருக்கும்.

5. உலகளாவிய குறியீடுகளில் இந்தியாவின் தரவரிசை சரிவு குறித்து ஒரு திட்டமிடும் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ. NITI ஆயோக்

ஆ. பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு ☑

இ. பொருளாதார விவகாரங்கள் துறை

ஈ. நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறை



✓ பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு, "உலகளாவிய கருத்துக் குறியீடுகளில் இந்தியா ஏன் மோசமாக செயல்படுகிறது: 3 கருத்து அடிப்படையிலான குறியீடுகளின் ஆய்வு" என்ற தலைப்பில் ஒரு திட்டமிடும் கட்டுரையை வெளியிட்டுள்ளது. குறியீடுகளில் பயன்படுத்தப்படும் முறையிலுள்ள சிக்கல்களின் காரணமாக பல உலகளாவிய குறியீடுகளில் இந்தியாவின் தரவரிசை சரிந்துள்ளதாக அது கூறுகிறது. உலகளாவிய சுதந்திரக் குறியீடு, V–DEM குறியீடுகள் மற்றும் EIU ஜனநாயகக் குறியீடு முதலான 3 குறியீடுகளை இது பகுப்பாய்வு செய்துள்ளது.

6. பாம்புக்கடிபற்றிய ஓர் அண்மைய உலகளாவிய ஆய்வின்படி, பாம்புக்கடியால் இறந்தவர்களின் எண்ணிக்கை கீழ்க்காணும் எந்த நாட்டில் அதிகமாகப் பதிவாகியுள்ளது?

அ. கானா

ஆ. இலங்கை

இ. இந்தியா ☑

ஈ. எகிப்து



✓ கடந்த 2019ஆம் ஆண்டில் பாம்புக்கடியால் உலகம் முழுவதும் 63,000–க்கும் அதிகமானோர் இறந்துள்ளனர் என்று ஒரு புதிய உலகளாவிய ஆய்வு கண்டறிந்துள்ளது. இந்த எண்ணிக்கையில் கிட்டத்தட்ட 51,000–க்கும் மேற்பட்டது இந்தியாவில் பதிவாகியுள்ளது. 'Global Burden of Disease'ஆல் இயற்றப்பட்ட இந்த ஆய்வில், பாம்புக்கடி நஞ்சு என்பது மிகவும் ஆபத்தான புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய் ஆகும்.

7. 2022ஆம் ஆண்டில், 'தேசிய பழங்குடியினர் நடன விழா'வை நடத்தும் மாநிலம் எது?

அ. மத்திய பிரதேசம்

ஆ. அருணாச்சல பிரதேசம்

இ. சத்தீஸ்கர் ☑

ஈ. ஜார்கண்ட்



✓ சத்தீஸ்கர் மாநிலத்தின் இராய்ப்பூரில், 'தேசிய பழங்குடியினர் நடன விழா' அண்மையில் நடத்தப்பட்டது. இந்தத் திருவிழாவில் சுமார் 1 இலட்சம் பேர் கலந்துகொண்டனர். இந்தியா முழுவதிலுமிருந்தும் மொசாம்பிக், மங்கோலியா, டோங்கா, ரஷ்யா, இந்தோனேசியா, மாலத்தீவுகள், செர்பியா, நியூசிலாந்து மற்றும் எகிப்துபோன்ற நாடுகளிலிருந்தும் சுமார் 1,500 நடனக்கலைஞர்கள் இவ்விழாவில் பங்கேற்றனர்.

8. உணவு மற்றும் உழவின் நிலை குறித்த அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?

அ. UNEP

ஆ. UNFCCC

இ. FAO ☑

ஈ. உலக பொருளாதார மன்றம்

✓ "உணவு மற்றும் உழவின் நிலை" என்பது ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் உழவு அமைப்பின்மூலம் ஒவ்வோர் ஆண்டும் தயாரிக்கப்படும் முதன்மை அறிக்கைகளுள் ஒன்றாகும். அவ்வறிக்கையின் 2022ஆம் ஆண்டுக்கானப் பதிப்பு, நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDG) அடைவதற்கு நமது வேளாண் உணவு முறைகளில் தானியங்கு முறைமை எவ்வாறு பங்களிக்கும் என்பதைக் கூறுகிறது. நன்மைகளை அதிகப்படுத்துவது மற்றும் அபாயங்களைக் குறைப்பது எப்படி? என்பது குறித்து கொள்கை வகுப்பாளர்களுக்கு இது பரிந்துரைகளையும் வழங்குகிறது.

9. 'புஷ்கர் மேளா' என்பது இந்தியாவின் எந்த மாநிலத்தில் நடைபெறும் ஒரு கலாச்சாரம் சார்ந்த கண்காட்சியாகும்?

அ. இராஜஸ்தான் ☑



ஆ. பஞ்சாப்

இ. அஸ்ஸாம்

ஈ. கோவா

✓ 'புஷ்கர்' என்பது இராஜஸ்தான் மாநிலத்தின் மிகவும் ஈர்க்கத்தகும் சுற்றுலாத் தலங்களுள் ஒன்றாகும். இங்கு கலாச்சார நிகழ்வுகள், இயற்கை நடைகள், மணற்கலை திருவிழா, காத்தாடி திருவிழா, ஆண்டுதோறும் ஐந்து நாள் நடைபெறும் ஒட்டகம் மற்றும் கால்நடை கண்காட்சி ஆகியவை அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடையில் நடைபெறும். ஜெய்ப்பூரில், 'புஷ்கர் மேளா' கண்காட்சியை இராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அசோக் கெலாட் தொடக்கிவைத்தார். இந்த ஆண்டு, தோல் கழலை நோய் பரவும் காரணத்தால், எட்டு நாள் நிகழ்வில் புகழ்பெற்ற கால்நடை கண்காட்சி இடம்பெறாது.

10. இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) அறிமுகப்படுத்திய புதிய இயலியின் (chatbot) பெயர் என்ன?

அ. UIDAI பாரத்

ஆ. ஆதார் மித்ரா ☑



இ. ஆதார் திஷா

ஈ. ஆதார் பிரஷ்னா

✓ நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத்துறை வெளியிட்ட, 'குறைதீர்ப்பு குறியீட்டில்' இந்திய தனித்துவ அடையாள ஆணையமைப்பு (UIDAI) முதலிடம் பிடித்துள்ளது. UIDAI ஆனது இத்தரவரிசையில் தொடர்ந்து மூன்றாம் மாதமாக முதலிடத்தைப் பிடித்துள்ளது. UIDAI ஆனது 'ஆதார் மித்ரா' என்ற புதிய செயற்கை நுண்ணறிவு / எந்திரக்கற்றல் அடிப்படையிலான இயலியையும் அறிமுகப்படுத்தியது. இப்புதிய இயலி, ஆதார் பதிவு நிலையைச் சரிபார்த்தல், பதிவு மையத்தின் இருப்பிடம் அறிதல்போன்ற மேம்படுத்தப்பட்ட அம்சங்களுடன் வருகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மாநிலங்களின் புதிய கடன்களுக்கு 7.68% வட்டி விகிதம்

இந்திய மாநில அரசுகள் ஏலத்தில் வெளியிட்ட கடன் பத்திரங்களின் சராசரி வட்டி விகிதம் அதிக மாற்றமில்லாமல் 7.68 சதவீதமாக இருந்தது.

---

2. தமிழ்நாட்டின் முதல் பல்லுயிர் பாரம்பரியத் தளமானது மதுரை அரிட்டாபட்டி

தமிழ்நாட்டின் மதுரை மாவட்டத்தில், அரிட்டாபட்டி மற்றும் மீனாட்சிபுரம் கிராமங்களிலுள்ள 193.215 ஹெக்டேர் பரப்பளவிலான பகுதியை அரிட்டாபட்டி பல்லுயிர் பாரம்பரியத் தளமாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இது தமிழ் நாட்டின் முதல் பல்லுயிர் பாரம்பரியத் தளமாகும்.

இது குறித்து தமிழ்நாட்டு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "பல்லுயிர் மரபுத்தளங்கள் என்பது, சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பரப்பு, கடலோர மற்றும் உள்ளூர் நீர்நிலைகள், பல்லுயிர்த்தன்மைமிக்க தாவர, விலங்கின சிற்றினங்களின் வாழ்விடங்கள், பரிணாம முக்கியத்துவம் வாய்ந்த சிற்றினங்களின் வாழ்விடங்கள் போன்றவற்றைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டது.

அரிட்டாபட்டி கிராமம் என்பது 7 சிறுகுன்றுகளை தொடர்ச்சியாக கொண்டுள்ள பகுதியாகும். இம்மலைக்குன்றுகளின் தனித்துவமான நிலப்பரப்பு இப்பகுதியின் முக்கிய நீராதாரப் பகுதியாகச் செயல்படுகிறது. 72 ஏரிகள், 200 இயற்கை நீரூற்று குளங்கள் மற்றும் மூன்று தடுப்பணைகள் உள்ளது. இங்குள்ள ஆனைகொண்டான் ஏரி, பதினாறாம் நூற்றாண்டில் பாண்டியர்களின் ஆட்சியில் உருவாக்கப்பட்டது.

அரிட்டாபட்டி கிராமத்தில் உள்ள மலைப்பகுதிகளில் 250 பறவையினங்கள் உள்ளன. இதில் லகர் இராசாளி, ஷாஹீன் இராசாளி, மற்றும் இராசாளிப்பருந்து ஆகிய மூன்று முதன்மையான கொன்றுண்ணிப் பறவையினங்கள் உள்ளன. எறும்புத்திண்ணிகள் (*Manis crassicaudata*), மலைப்பாம்பு (*Python molurus*) மற்றும் அரிய வகை தேவாங்கு (*Loris*) ஆகிய வனவுயிரிகளும் உள்ளன. இப்பகுதி பல பறவைகள் மற்றும் விலங்குகளின் வாழ்விடமாக உள்ளது.

இங்கு பல்வேறு சமண சிற்பங்கள், சமணர் படுக்கைகள், தமிழ் பிராமி கல்வெட்டுகள், வட்டெழுத்து கல்வெட்டுகள், 2200 ஆண்டுகள் பழைமையான குடைவரைக் கோவில்கள் உள்ளன. இந்த வரலாற்றுச் சின்னங்கள் இப்பகுதிக்கு கூடுதல் சிறப்பை அளிக்கின்றன.

---

1. தணிக்கைத் தலைமை இயக்குநர் என்ற பதவியை உருவாக்கிய முதல் மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. ஒடிஸா

இ. கேரளா

ஈ. இராஜஸ்தான்

✓ இந்தியாவிலேயே தணிக்கைத் தலைமை இயக்குநர் என்ற பதவியை உருவாக்கிய முதலாவது மாநிலம் தமிழ்நாடு ஆகும். இந்தப் பதவிக்காக இந்தியத் தணிக்கை மற்றும் கணக்கு சேவையிலிருந்து ஓர் அதிகாரியை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ளக தணிக்கைத் துறைகளின் செயல்பாட்டை வலுப்படுத்துவதும் நெறிப்படுத்துவதும் இந்தப் புதிய அதிகாரியின் பொறுப்பாகும்.

2. 'சின்–குகி–மிசோ' இனச் சமூகங்களுடன் தொடர்புடைய நாடு எது?

அ. சீனா

ஆ. ரஷ்யா

இ. வங்காளதேசம் ☑



ஈ. தாய்லாந்து

✓ வங்காளதேச பாதுகாப்புப் படையினருக்கும் குகி–சின் தேசிய இராணுவத்திற்கும் இடையிலான சண்டையைத் தொடர்ந்து, சின்–குகி இனத்தைச் சேர்ந்த பழங்குடியினர்கள் வங்காளதேசத்தை விட்டு வெளியேறி வருகின்றனர். வங்காளதேசத்திலிருந்து வெளியேறிய 274 வங்கதேச பழங்குடியினருக்கு தற்காலிக தங்குமிடம், உணவு மற்றும் நிவாரணம் வழங்குவதாக மிசோரம் அரசு அறிவித்துள்ளது.

3. 'ஆபரேஷன் டர்ட்ஷீல்டு' என்றவொன்றைத் தொடங்கிய நாடு எது?

அ. சீனா



ஆ. இந்தியா ☑

இ. ரஷ்யா

ஈ. இந்தோனேசியா

✓ அழிந்துவரும் வனவிலங்குகள் மற்றும் தாவரங்களின் (CITES) சர்வதேச வர்த்தகம் தொடர்பான கூட்டமைப்பிற்கான கட்சிகளின் மாநாட்டின் (CoP–19) 19ஆவது கூட்டம் பனாமா நகரத்தில் நடைபெற்றது. நன்னீர் ஆமையான, 'படகுர் கச்சுகா'வை இதில் இணைப்பதற்கான இந்தியாவின் முன்மொழிவு, CITESஇன் CoP–19இல் உள்ள கட்சிகளின் ஆதரவைப்பெற்றது. நன்னீர் ஆமைகளை வேட்டையாடுதல் மற்றும் அதன் சட்டவிரோத வர்த்தகத்தை ஒழிப்பது ஆகிய நோக்கத்திற்காக, 'ஆபரேஷன் டர்ட்ஷீல்ட்' என்றவொன்றைத் தொடங்கியது. இது குறித்து CITES இந்தியாவைப் பாராட்டியது.

4. 'ஓரியன்' விண்கலத்தை ஏவிய நாடு எது?

அ. ஜப்பான்



ஆ. அமெரிக்கா ☑

இ. ஐக்கிய அரபு அமீரகம்

ஈ. இஸ்ரேல்

✓ NASAஇன் ஓரியன் விண்கலம் ஆர்ட்டெமிஸ்–I திட்டத்தின் ஒருபகுதியாக தனது முதல் நிலவு இலக்கு அணுகலை வெற்றிகரமாகச் செய்துள்ளது. இது நிலவின் மேற்பரப்பிலிருந்து 130 கிமீட்டர் தொலைவில் கடந்துள்ளது. ஓரியன் நிலவுக்கு அப்பால் சுமார் 57,287 மைல்கள் தொலைவில் பயணம் செய்து அப்பல்லோ–13இன் சாதனையை விஞ்சும். ஓரியன் விண்கலமானது நிலவுக்கு அப்பால் உள்ள தொலைதூர பிற்போக்குச் சுற்றுப்பாதையில் நுழையும்.

5. ஐரோப்பிய நாடாளுமன்றம் கீழ்க்காணும் எந்த நாட்டை பயங்கரவாதத்தின் அரச ஆதரவாளராக அறிவித்துள்ளது?

அ. சீனா

ஆ. ரஷ்யா ☑

இ. ஆப்கானிஸ்தான்

ஈ. பாகிஸ்தான்



✓ ஐரோப்பிய நாடாளுமன்றமானது ரஷ்யாவை பயங்கரவாதத்தின் அரச ஆதரவாளராக அறிவித்துள்ளது. எரிசக்தி உட்கட்டமைப்பு, மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் தங்குமிடங்கள்போன்ற உக்ரேனிய இலக்குகள் மீதான அதன் இராணுவத் தாக்குதல்கள் சர்வதேச சட்டத்தை மீறுவதாக வாதிடுகிறது. ஐரோப்பிய ஒன்றியம் இதற்கான ஒரு சட்ட ரீதியான கட்டமைப்பைக் கொண்டிருக்கவில்லை என்றாலும், உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு தொடர்பாக ரஷ்யா மீது முன்னெப்போதும் இல்லாத பொருளாதாரத் தடைகளை அது ஏற்கனவே விதித்துள்ளது.

6. உலகின் முதல் வேத கடிகாரம் கட்டப்படுகிற நகரம் எது?

அ. காஞ்சிபுரம்

ஆ. ஜெய்ப்பூர்

இ. உஜ்ஜைனி ☑

ஈ. துவாரகா



✓ உலகின் முதல் வேத கடிகாரத்தின் கட்டுமானப் பணிக்கான அடிக்கல், மத்திய பிரதேச மாநிலத்தின் உஜ்ஜைனி நகரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜந்தர் மந்தர் அரசு ஜிவாஜி ஆய்வகத்தில் ₹1.62 கோடி செலவில் 'வேத கடிகாரம்' நிறுவப்படும். இந்தக் கடிகாரம் வேதகால கணக்கீட்டுக் கொள்கைகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். வேத கடிகாரத்தின் பயன்பாடு சந்திரனின் நிலை, பண்டிகை, மங்கள நேரம், பிறந்தநாள், விரதம், பண்டிகை முக்கிய விடுமுறை நாட்களில் பயன்படுத்தப்படும்.

7. 2022ஆம் ஆண்டில், 'ரைசிங் சன் வாட்டர் ஃபெஸ்ட்' நிகழ்ச்சியை நடத்திய மாநிலம் எது?

அ. மேகாலயா ☑

ஆ. மேற்கு வங்காளம்

இ. மகாராஷ்டிரா

ஈ. இராஜஸ்தான்



✓ ரைசிங் சன் வாட்டர் ஃபெஸ்ட்–2022 ஆனது மேகாலயா மாநிலத்தில் உமியாம் ஏரியில் நடைபெற்றது. மூன்று நாள் நடைபெற்ற இந்த நீர் விளையாட்டு மற்றும் கலாச்சார கண்காட்சி வடகிழக்கு மாநிலங்களில் நடைபெறுவது இதுவே முதன்முறையாகும். வடகிழக்கு மாநிலங்களைச் சார்ந்த இளையோர் படகோட்டம்போன்ற நீர் விளையாட்டுகளில் ஈடுபட ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும். இது வடகிழக்கில் சுற்றுலாவை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது அஸ்ஸாம் மற்றும் மேகாலயா மாநில அரசாங்கங்களுடன் இணைந்த இந்திய இராணுவத்தின் கிழக்குப் படையின் முனைவாகும்.

8. இந்தியாவின் முதல் வாக்காளரான மாஸ்டர் ஷியாம் சரண் நேகி சார்ந்த மாநிலம் எது?

அ. அஸ்ஸாம்

ஆ. ஹிமாச்சல பிரதேசம் ☑

இ. மேற்கு வங்கம்

ஈ. குஜராத்



✓ நாட்டின் முதல் வாக்காளரான 106 வயதான மாஸ்டர் ஷியாம் சரண் நேகி அண்மையில் காலமானார். அவர் ஹிமாச்சல பிரதேசத்தின் கின்னௌர் மாவட்டத்தில் வசித்தார். அவரது இறுதிச்சடங்குகளை மாவட்ட நிர்வாகம் முழு மரியாதையுடன் மேற்கொண்டது. நேகி, ஹிமாச்சல பிரதேச சட்டமன்றத் தேர்தலுக்காக தபால் வாக்குமூலம் மூன்று நாட்களுக்கு முன்னர்தான் வாக்களித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


9. உலகம் முழுவதும், 'உலக கதிரியக்க வரைவியல் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. நவம்பர்.05

ஆ. நவம்பர்.08 ☑

இ. நவம்பர்.15

ஈ. நவம்பர்.25



✓ உலக கதிரியக்க வரைவியல் நாளானது ஒவ்வோர் ஆண்டும் நவ.08 அன்று, X–கதிர் கண்டுபிடிக்கப்பட்டதை நினைவைக் குறிக்கிறது. கடினமாக உழைக்கும் கதிரியக்க வரைவியலாளர்கள் / கதிரியக்க நிபுணர்களையும் இந்நாள் கொண்டாடுகிறது. ஜெர்மனி பேராசிரியர் வில்ஹெம் இரான்ட்ஜென் என்பவரால் கடந்த 1895ஆம் ஆண்டில் X–கதிர் தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்டது.

10. ஐநா பொதுச்சபையால் சிறார் பாலியல், வன்கொடுமை/வன்முறையைத்தடுப்பதற்கும் குணப்படுத்துவதற்குமான உலக நாள் என அறிவிக்கப்பட்ட தேதி எது?

அ. நவம்பர்.15

ஆ. நவம்பர்.18 ☑

இ. நவம்பர்.25

ஈ. நவம்பர்.27



✓ ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையானது நவ.18ஆம் தேதியை "சிறார் பாலியல், வன்கொடுமை / வன்முறையைத் தடுப்பதற்கும் குணப்படுத்துவதற்குமான உலக நாள் – World Day for the Prevention of and Healing from Child Sexual Exploitation, Abuse and Violence" என அறிவித்துள்ளது. சிறார் பாலியல் வன்கொடுமையின் பாதிப்புகளை உலகளாவியப் பார்வையைக் கொண்டுவருவதை இந்த நாள் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. விடுதலையின் அமுதப்பெருவிழாவின்கீழ், சங்கீத நாடக அகாடமி அமுத விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டைச் சார்ந்த ஐந்து பேருக்கு விருதுகள் அறிவிப்பு.

75 ஆண்டு இந்திய விடுதலையின் அமுதப்பெருவிழாவின்கீழ், 75 கலைஞர்களுக்கு சங்கீத நாடக அகாடமி அமுதா விருதுகளை சங்கீத நாடக அகாடமி அறிவித்துள்ளது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 75 வயதுக்கு மேற்பட்ட, இதுவரை தேசிய அளவிலான விருதுகளைப் பெறாத கலைஞர்களைக் கௌரவிக்கும் வகையில், இந்த

விருதுகள் வழங்கப்படவுள்ளன. இந்த விருதுக்கு தேர்வானவர்களுக்கு ₹1 லட்சம் ரொக்கப்பரிசும், தாமிரப்பத்திரமும், அங்கவஸ்திரமும் வழங்கப்படும்.

இந்த விருதுக்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆச்சாள்புரம் சின்னத்தம்பி (நாதஸ்வரம்), புருசை சுப்பிரமணியம் (தெருக் கூத்து), சுந்தரேசன் இராமமூர்த்தி (நாடக நடிகர்), வி ஏ கே இரங்காராவ் (நடன இசை), பி இரமணி (வீணை இசை) ஆகிய கலைஞர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. புதுச்சேரிசார் நாடக இசைக்கலைஞர் கே எம் சுப்பையா, பொம்மலாட்டக் கலைஞர் வீராசாமி சீனிவாசன் ஆகியோரும் இந்த விருதுக்குத் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்.

---

2. நாளை விண்ணில் பாய்கிறது பிஎஸ்எல்வி சி–54

புவிக்கண்காணிப்பு செயற்கைக்கோள், எட்டுச் சிறிய இரக செயற்கைக்கோள்களுடன் பிஎஸ்எல்வி சி–54 ஏவுகலம் நவ.26 அன்று விண்ணில் ஏவப்படுகிறது. ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் ஆராய்ச்சி மைய ஏவுதளத்தில் இருந்து அந்த ஏவுகலம் செலுத்தப்படவிருக்கிறது.

புவிக் கண்காணிப்புக்கான இஓஎஸ்–06 (ஒசோன்சாட்–3) என்ற நவீன செயற்கைக்கோள் அதில் பிரதானமாக இடம்பெற்றுள்ளது. இதை ISRO வடிவமைத்துள்ளது. இதுதவிர, அமெரிக்காவின் ஆஸ்ட்ரோகாஸ்ட், இந்தியா–பூடான் கூட்டுத்தயாரிப்பான ஐஎன்எஸ்–2பி, துருவா ஸ்பேஸ் நிறுவனத்தின் தைபோல்ட், பிக்சலின் ஆனந்த் உள்பட 8 நானோ செயற்கைக்கோள்களும் பிஎஸ்எல்வி சி–54 ஏவுகலம்மூலம் வெவ்வேறு சுற்றுப்பாதைகளில் விண்ணில் நிலைநிறுத்தப்படவுள்ளன.

இஓஎஸ்–06 செயற்கைக்கோள் 1,117 கிலோ எடைகொண்டது. ஒசோன்சாட் வரிசையில் அனுப்பப்படும் 4ஆவது செயற்கைக்கோள் இதுவாகும். கடலின் தன்மை, அதன் மேற்பரப்பு, வெப்பநிலை, காற்றின்திசை மாறுபாடுகள், வளி மண்டலத்தின் நிகழும் ஒளியியல் மாற்றங்கள் போன்றவற்றைத் தொடர்ந்து கண்காணித்து தகவல்களை அந்தச் செயற்கைக்கோள் அளிக்கவல்லது. அதேபோல், இந்தியா–பூடான் ஒருங்கிணைந்த ஆராய்ச்சியின்கீழ் வடிவமைக்கப்பட்ட ஐன்எஸ்–2பி செயற்கைக் கோளும் விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

---

1. 'Sonzal–2022' என்பது கீழ்க்காணும் எம்மாநிலம்/UTஇல் ஆண்டுதோறும் நிகழும் ஓர் இளையோர் விழாவாகும்?

அ. ஜம்மு & காஷ்மீர் ☑



ஆ. ஒடிஸா

இ. கேரளா

ஈ. இராஜஸ்தான்

✓ ஜம்மு–காஷ்மீரின் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, காஷ்மீர் பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் இளையோர் திருவிழாவான, 'சோன்சல்–2022'ஐ தொடக்கிவைத்தார். இளம் கலைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிக்கொணர ஒரு வாய்ப்பாக இவ்விழா அமைகிறது. மேலும், 'ஒரே பாரதம் ஒப்பிலா பாரதம்' என்ற கனவை அடைவதற்கான ஒரு தளத்தை 'சோன்சல்' விழா வழங்குகிறது.

2. யாரின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், 'தேசிய பால் நாள்' அனுசரிக்கப்படுகிறது?

அ. M S சுவாமிநாதன்

ஆ. Dr வர்கீஸ் குரியன் ☑



இ. சரண் சிங்

ஈ. மொரார்ஜி தேசாய்

✓ "இந்தியாவின் பால்காரர்" என்று அழைக்கப்படும் "இந்தியாவின் வெண்மைப்புரட்சியின் தந்தை" Dr வர்கீஸ் குரியன் அவர்களின் 101ஆவது பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், 'தேசிய பால் நாள்' அனுசரிக்கப்படுகிறது. இந்த நாளின்போது மதிப்புமிக்க, 'தேசிய கோபால் ரத்னா விருதுகள்' வழங்கப்படுகின்றன. கர்நாடக மாநிலத்தில் நடக்கும் இந்தத் தேசிய நிகழ்வில், வர்கீஸ் குரியன் வாழ்க்கை குறித்த வரலாற்று நூல் மற்றும் பாலில் செய்யப்படும் கலப்படம் குறித்த சிறுநூலும் வெளியிடப்படவுள்ளது.

3. இந்தியாவின் முதலாவது இரவு வான் சரணாலயம் அமைந்துள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. ஹிமாச்சல பிரதேசம்



ஆ. சிக்கிம்

இ. உத்தரகாண்ட்

ஈ. லடாக் ☑

✓ இந்தியாவின் முதல் இரவு வான் சரணாலயம் லடாக்கின் ஹான்லேயில் நடுவண் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழுள்ள அறிவியல் & தொழில்துறை ஆராய்ச்சிக் கவுன்சிலால் நிறுவப்படுகிறது. திட்டமிடப்பட்ட இந்த இரவு வான் சரணலாயத்தின் காப்பகம், சாங்தாங் வனவுயிரிகள் சரணாலயத்தின் ஒருபகுதியாக ஹான்லேயில் அமைக்கப்படும். இது இந்தியாவில் வானவியல்–சுற்றுலாவை மேம்படுத்தும். ஆப்டிகல், அகச்சிவப்புக்கதிர் மற்றும் காமா கதிர் தொலைநோக்கிகளுக்கான உலகின் மிகவுயர்ந்த தளங்களுள் ஒன்றாக இது இருக்கும்.

4. 27 ஆண்டுகால இயற்கை எரிவாயு வழங்கல் ஒப்பந்தத்தில் சீனாவுடன் கூட்டு சேர்ந்துள்ள நாடு எது?

அ. ஐக்கிய அரபு அமீரகம்

ஆ. கத்தார் ☑



இ. ஈரான்

ஈ. ரஷ்யா

✓ கத்தார் ஆற்றல் நிறுவனமானது சீனாவுடனான 27 ஆண்டுகால இயற்கை எரிவாயு வழங்கல் ஒப்பந்தத்தை அறிவித்தது. இன்றுவரை கையெழுத்திடப்பட்ட மிகநீண்ட கால எரிவாயு வழங்கல் ஒப்பந்தம் இதுவாகும். கத்தார் ஆற்றல் நிறுவனமானது அதன் புதிய வடகள கிழக்குத் திட்டத்திலிருந்து ஆண்டுதோறும் நான்கு மில்லியன் டன் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை சீன பெட்ரோலியம் & கெமிக்கல் கார்ப்பரேஷனுக்கு (சினோபெக்) அனுப்பும்.

5. இந்தியாவில், 'அரசியலமைப்பு நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. நவம்பர்.24

ஆ. நவம்பர்.26 ☑

இ. நவம்பர்.30

ஈ. டிசம்பர்.01



✓ கடந்த 1949ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச்சட்டத்தை அரசியலமைப்பு சபை ஏற்றுக்கொண்டதன் நினைவாக கடந்த 2015ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் நவ.26 அன்று அரசியலமைப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது. முன்னர் இந்த நாள் சட்ட நாளாக அனுசரிக்கப்பட்டது. இந்த நாளின்போது, 'விர்ச்சுவல் ஜஸ்டிஸ் கடிகாரம்', 'JustIS' திறன்பேசி செயலி 2.0, டிஜிட்டல் கோர்ட் மற்றும் 'S3WaaS' இணையதளங்கள் உள்ளிட்ட இ–கோர்ட் திட்டத்தின் கீழ் புதிய முயற்சிகளை பிரதமர் தொடங்குவார்.

6. 2022இல் 26ஆவது சர்வதேச மலபார் கடற்படை பயிற்சியை நடத்தும் நாடு எது?

அ. ஆஸ்திரேலியா

ஆ. ஜப்பான் ☑

இ. இந்தியா

ஈ. அமெரிக்கா



✓ ஜப்பானின் யோகோசுகாவில் தொடங்கும் 26ஆம் சர்வதேச மலபார் கடற்படை பயிற்சியில் இந்தியா பங்கேற்கிறது. மலபார் கடற்படை பயிற்சியில் ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளும் பங்கேற்கின்றன. மலபார் பயிற்சியானது கடந்த 1992ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் அமெரிக்க கடற்படைகளுக்கு இடையே தொடங்கப்பட்டது. இந்திய கடற்படைக் கப்பல்களான INS ஷிவாலிக் மற்றும் INS கமோர்டாவுடன் இந்தியா இந்தப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது.

7. 'நங்கனா சாஹிப்' என்பது கீழ்க்காணும் எந்த நாட்டில் அமைந்துள்ள சீக்கியர்களின் புனிதத்தலமாகும்?

அ. இந்தியா

ஆ. பாகிஸ்தான் ☑

இ. நேபாளம்

ஈ. வங்காளதேசம்



✓ குருபுரப் பண்டிகையையொட்டி பாகிஸ்தானில் உள்ள நங்கனா சாஹிப்பிற்கு இந்திய சீக்கிய யாத்ரீகர்கள் வருகை தருவதற்கு நடுவண் உள்துறை அமைச்சகம் வசதி செய்துள்ளது. மொத்தம் 2420 இந்திய சீக்கிய யாத்ரீகர்கள் பத்து நாள் பாகிஸ்தான் யாத்திரை நுழைவு இசைவுடன் குருநானக் ஜெயந்தி விழாவில் பங்கேற்பதற்காக பாகிஸ்தானுக்கு புறப்பட்டனர். பாகிஸ்தானில் உள்ள ஸ்ரீ கர்தார்பூர் சாஹிப் குருத்வாராவிற்கு குருபுரப் பண்டிகையையொட்டி இந்தியாவில் இருந்து மொத்தம் 433 யாத்ரீகர்கள் வருகை தந்துள்ளனர்.

8. ஆனைமலை புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑



ஆ. கேரளம்

இ. மேற்கு வங்கம்

ஈ. குஜராத்

✓ ஆனைமலை புலிகள் காப்பகமானது யானைகளைத் தத்தெடுக்கும் திட்டத்தை தொடங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் அரசு சாரா நிறுவனங்கள், நிறுவனங்கள், அறக்கட்டளைகள் அல்லது தனிநபர்கள் வனத்துறையின் முகாம் யானைகளின் செலவுகளுக்கு நிதியுதவி செய்யலாம். உணவுகள், மருந்துகள், சுகாதாரப் பொருட்கள் மற்றும் பிற தற்செயலான செலவுகளை அவர்கள் ஏற்றுக்கொள்வர். யானைகளைத் தத்தெடுக்க விரும்புவோர்க்கு வருமான வரிச்சட்டம், 1961இன் 80ஜி பிரிவின்கீழ் விலக்களிக்கப்படும்.

9. மதுரா–பிருந்தாவனம் என்ற புனித யாத்திரை தலம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ. குஜராத்



ஆ. உத்தரகாண்ட்

இ. உத்தர பிரதேசம் ☑

ஈ. பஞ்சாப்

✓ இந்தியாவின் முக்கிய புனித யாத்திரை தலங்களுள் ஒன்றான மதுரா–பிருந்தாவனம், 2041ஆம் ஆண்டுக்குள், 'நிகர சுழிய கரியமிலவாயு (CO_2) உமிழ்வு' சுற்றுலாத்தலமாக மாறுவதை இலக்காகக் கொண்டுள்ளது. உத்தர பிரதேச மாநில அரசாங்கத்தின்படி, வரைவு மறுவடிவமைப்புத் திட்டத்தில் சுற்றுலா வாகனங்களுக்குத் தடைவிதிக்கவும், பொதுமக்களை மின்சார வாகனங்களில் வரச்சொல்லி ஊக்கப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மதுரா–பிருந்தா வனத்திற்கு ஆண்டுதோறும் வருகைதரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. அந்த எண்ணிக்கை 2041ஆம் ஆண்டுவாக்கில் ஆறு கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

10. 'முதலமைச்சர் தேவதர்ஷன் யாத்ரா யோஜனா'வைத் தொடங்கியுள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. கோவா ☑

ஆ. புது தில்லி

இ. உத்தர பிரதேசம்

ஈ. குஜராத்

✓ கோவா மாநில அரசாங்கம், 'முதலமைச்சர் தேவதர்ஷன் யாத்ரா யோஜனா' என்ற பெயருடைய மக்களுக்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் புனித யாத்திரைத்திட்டத்தை முறையாகத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். சுற்றுலாவின்போது யாத்ரீகர்களின் உணவு மற்றும் தங்குவதற்கு மாநில அரசு நிதியுதவி அளிக்கும். இந்தத் திட்டத்தின்கீழ் திருப்பதிக்குப் பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்தை முதலமைச்சர் பிரமோத் சாவந்த் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 'பத்மஸ்ரீ', 'கேல் இரத்னா' விருதுபெற்ற முனைவர் (கௌரவ பட்டம்) தீபா மாலிக், காசநோய் இல்லாத இந்தியா இயக்கத்தின் தேசிய தூதராகி உள்ளார்.

'பத்மஸ்ரீ', 'கேல் இரத்னா' விருதுபெற்ற, இந்தியாவின் முதலாவது மகளிர் பாராலிம்பிக் பட்டம் வென்ற, இந்திய பாரா லிம்பிக் குழுவின் தலைவரான முனைவர் (கௌரவ பட்டம்) தீபா மாலிக், காசநோய் இல்லாத இந்தியா இயக்கத்தின் தேசிய தூதராகி உள்ளார். இந்த இயக்கத்திற்கு முழு ஆதரவளிக்க அவர் உறுதிபூண்டுள்ளார்.

---

2. "ஆஸ்ட்ரா ஹிந்த்–22" கூட்டு இராணுவப்பயிற்சியில் கலந்துகொள்ளும் ஆஸ்திரேலிய வீரர்கள் இந்தியா வருகை

இந்திய மற்றும் ஆஸ்திரேலிய இராணுவத்திற்கு இடையே, "ஆஸ்ட்ரா ஹிந்த்–22" என்ற கூட்டு பயிற்சி ராஜஸ்தான் மாநிலத்தில் 2022 நவ.28 முதல் டிச.11 வரை நடைபெறவுள்ளது. இரு இராணுவங்களின் அனைத்து படைகளும் கலந்து கொள்ளும் முதல் பயிற்சி, இது. இந்திய இராணுவத்தின் டோக்ரா படை, இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ள உள்ளது. ஆஸ்ட்ரா ஹிந்த் பயிற்சி, ஆண்டுதோறும் ஆஸ்திரலியாவிலும் இந்தியாவிலும் மாறிமாறி நடைபெற்று வருகிறது. நேர்மறையான இராணுவ உறவைக் கட்டமைப்பது, சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவது மற்றும் இணைந்து பணியாற்றும் திறனை ஊக்குவிப்பது முதலியவை இந்தப்பயிற்சியின் நோக்கமாகும்.

---

3. எழுத்தாளர் இமையத்துக்கு குவெம்பு விருது

'குவெம்பு இராஷ்டிரிய புராஸ்கர்' தேசிய விருதைப் பெறும் முதல் தமிழ் எழுத்தாளர் என்ற பெருமையைப் பெற்ற எழுத்தாளர் இமையம்.

'குவெம்பு' என்ற தமது புனைப்பெயராலும் சுருக்கமாக கே வி புட்டப்பா என்றும் பரவலாக அறியப்படும் குப்பளி வெங்கடப்ப கௌடா புட்டப்பா அவர்கள், கன்னட மொழியின் புகழ்பெற்ற எழுத்தாளர். இவரின் நினைவைப் போற்றும் வகையில் குவெம்பு அவர்களின் நினைவு அறக்கட்டளை சார்பாக, 2013ஆம் அண்டு முதல் 'குவெம்பு இராஷ்டிரிய புராஸ்கர் தேசிய விருது' வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது இந்த ஆண்டிற்கான (2022) 'குவெம்பு இராஷ்டிரிய புராஸ்கர் தேசிய விருது' சாகித்திய அகாதெமி விருதுபெற்ற இமையம் என்கிற வெ அண்ணாமலை அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த விருதுடன் பரிசுத்தொகையாக ₹5 இலட்சமும் வெள்ளிப்பதக்கமும் வழங்கப்படவிருக்கிறது. இந்த விருதைப் பெறுவதன்மூலம் 'குவெம்பு இராஷ்டிரிய புராஸ்கர்' தேசிய விருதைப்பெறும் முதல் தமிழ் எழுத்தாளர் என்ற பெருமையையும் பெறுபவராவார் எழுத்தாளர் இமையம்.

---

4. 9 செயற்கைக்கோள்களின் முக்கியப் பயன்கள் என்ன?

பிஎஸ்எல்வி சி54 ஏவுகலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டு, செயற்கைக்கோள்கள் வெற்றிகரமாக அதன் சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

புவி கண்காணிப்புக்காக விண்ணில் ஏவப்பட்டுள்ள இஓஎஸ்–06 செயற்கைக்கோளில் பயன்படுத்தப்பட்டுள்ள அதி நவீன ஆர்கோஸ் தொழில்நுட்பம் மற்றும் கு–பேண்ட்மூலம் கடலில் ஏற்படும் வெப்பநிலை மாற்றம், காற்றின் வேகம் ஆகியவை கண்காணிக்கப்படும். மேலும், இது கடல் நிறம், காற்றின் திசை மாறுபாடுகள், வளிமண்டலத்தில் நிகழும் ஒளியியல் மாற்றங்கள் உள்ளிட்ட செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணித்து தரவுகளை வழங்கும்.

ஐஎன்எஸ் 2பி: இந்தியா–பூடான் ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஐஎன்எஸ் 2பி இரண்டு நானோ செயற்கைக்கோள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்கைக்கோள் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்காக விண்ணில் ஏவப்பட்டு உள்ளது.

ஆனந்த் சாட்: பெங்களூரைச் சேர்ந்த விண்வெளி தொழில்நுட்ப துளிர் நிறுவனமான, 'பிக்செல்', ஆனந்த் செயற்கைக் கோளை வடிவமைத்துள்ளது. நாட்டின் முதல் தனியார் புவி கண்காணிப்புச் செயற்கைக்கோள் இதுவாகும். இந்தச்

செயற்கைக்கோளில் அதிநவீன கேமரா பொருத்தப்பட்டுள்ளது. அதன்மூலம், பூமியை விரிவாக படம்பிடிக்க முடியும். குறைந்த வட்டப்பாதையில் செயற்கைக்கோள் சுற்றிவரும்.

தைபோல்ட்: ஹைதராபாதைச் சார்ந்த துளிர் நிறுவனமான துருவா ஸ்பேஸ் உருவாக்கிய தைபோல்ட் 2 செயற்கைக் கோள்கள், தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சிக்காக ஏவப்பட்டுள்ளன. இச்செயற்கைக்கோளின் ஆயுட்காலம் ஓராண்டு ஆகும்.

ஆஸ்ரோகாஸ்ட் நான்கு செயற்கைக்கோள்: அமெரிக்காவின் ஸ்பேஸ் ப்ளைட்டின் செயற்கைக்கோள். தொழில்நுட்ப ஆராய்ச்சி மேம்பாட்டுக்காக ஆஸ்ரோகாஸ்ட் விண்ணுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

---

5. கோதுமை, எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பு 10%–க்கு மேல் அதிகரிப்பு

நடப்பு இஇரபி பருவத்தில் கோதுமை மற்றும் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பு 10 சதவீதத்துக்கு மேல் உயர்ந்து உள்ளது என்று நடுவண் வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆண்டுதோறும் அக்டோபரில் பிரதான இஇரபி பயிரான கோதுமை சாகுபடி தொடங்குகிறது. அதன் அறுவடை மார்ச்–ஏப்ரலில் நடைபெறுகிறது. 2022–23ஆம் பயிராண்டின் (ஜூலை முதல் ஜூன்) இரபி பருவத்தில் கோதுமையைத்தவிர, பயறு, கடுகு ஆகிய வேறு முக்கிய பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன.

இந்நிலையில், நடுவண் வேளாண் அமைச்சகம் வெளியிட்ட புள்ளிவிவரத்தில், இந்த ஆண்டின் இஇரபி பருவத்தில் கோதுமை சாகுபடி பரப்பு 10.5 சதவீதம், எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பு 13.58 சதவீதம் உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிர் கடந்த ஆண்டு சாகுபடி பரப்பு நிகழாண்டு சாகுபடி பரப்பு (நவ.25 வரை)

கோதுமை 138.35 இலட்சம் ஹெக்டேர் 152.88 இலட்சம் ஹெக்டேர்

நெல் 8.33 இலட்சம் ஹெக்டேர் 9.14 இலட்சம் ஹெக்டேர்

எண்ணெய் வித்துக்கள் 66.71 இலட்சம் ஹெக்டேர் 75.77 இலட்சம் ஹெக்டேர்

பயறு வகைகள் 94.37 இலட்சம் ஹெக்டேர் 94.26 இலட்சம் ஹெக்டேர்

சோளம், வாற்கோதுமை போன்ற தானியங்கள் 26.70 இலட்சம் ஹெக்டேர் 26.54 இலட்சம் ஹெக்டேர்

நிகழாண்டு அதிக அளவில் கோதுமை சாகுபடி செய்யப்பட்டுள்ள மாநிலங்கள் (நவ.25 வரை)

மத்திய பிரதேசம்–6.40 இலட்சம் ஹெக்டேர்

இராஜஸ்தான்–5.67 இலட்சம் ஹெக்டேர்

பஞ்சாப்–1.55 இலட்சம் ஹெக்டேர்

எண்ணெய் வித்துக்களில் இந்த ஆண்டு 70.89 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் கடுகு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு 61.96 இலட்சம் ஹெக்டேராக இருந்தது.

நடப்பு பருவத்தில், இதுவரை அனைத்து இரபி பயிர்களின் சாகுபடி பரப்பு 358.59 இலட்சம் ஹெக்டேராகும். இது கடந்த ஆண்டின் 334.46 இலட்சம் ஹெக்டேரைளவிட 7.21 சதவீதம் அதிகம்.

இரபி பயிர்கள் சாகுபடி பரப்பு 24 இலட்சம் ஹெக்டேர் அதிகரிப்பு:

கடந்த ஆண்டு இரபி பருவத்தின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், நடப்பு பருவத்தில் இரபி பயிர்களின் சாகுபடி பரப்பு இதுவரை 24.13 இலட்சம் ஹெக்டேர் உயர்ந்துள்ளது.

---

1. 'உலக அறிவுசார் சொத்து குறிகாட்டிகள்' என்பது கீழ்க்காணும் எந்த நிறுவனத்தால் வெளியிடப்படும் ஓர் அறிக்கை ஆகும்?

அ. உலக பொருளாதார மன்றம்

ஆ. ஆசிய வளர்ச்சி வங்கி

இ. NITI ஆயோக்

ஈ. உலக அறிவுசார் சொத்து அமைப்பு (WIPO) ☑

✓ ஜெனீவாவைச்சார்ந்த உலக அறிவுசார் சொத்து அமைப்பானது (WIPO) உலக அறிவுசார் சொத்து குறிகாட்டிகள் என்ற அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, கடந்த 2021ஆம் ஆண்டில் காப்புரிமைகள், வர்த்தக முத்திரைகள் மற்றும் வடிவமைப்புகளின் உலகளாவிய அறிவுசார் சொத்துரிமைகளின் தாக்கல்கள் சாதனை அளவை எட்டியது. இந்தியா, சீனா மற்றும் தென்கொரியா ஆகிய ஆசிய நாடுகளிலிருந்து அதிக தாக்கல்கள் பெறப்பட்டுள்ளன.

2. 'சர்வதேச தினை ஆண்டு' என்று அறிவிக்கப்பட்ட ஆண்டு எது?

அ. 2021

ஆ. 2022

இ. 2023 ☑

ஈ. 2025

✓ நடுவண் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர் 2023ஆம் ஆண்டை சர்வதேச தினை ஆண்டாக அறிவிக்கும் கொண்டாட்ட நிகழ்வில் கலந்துகொண்டார். கடந்த 2018ஆம் ஆண்டில், 2023ஆம் ஆண்டை சர்வதேச தினை ஆண்டாக அறிவிக்க ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்தியா முன்மொழிந்தது. இந்த முன்மொழிவை கடந்த 2018ஆம் ஆண்டில் உணவு மற்றும் உழவு அமைப்பு (FAO) அங்கீகரித்தது.

3. GST சட்டத்தின்படி, GST தொடர்பான வருவாய் இழப்புக்கு மாநிலங்களுக்கு எத்தனை ஆண்டுகள் வரை இழப்பீடு வழங்கப்படும்?

அ. மூன்று

ஆ. ஐந்து ☑

இ. ஏழு

ஈ. பத்து

✓ 2017 ஜூலை.01 முதல் இந்தியாவில் சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்பட்டது. GST (மாநிலங்களுக்கான இழப்பீடு) சட்டம், 2017இன் விதிகளின்படி, GSTஐ அமல்படுத்துவதால் ஏற்படும் வருவாய் இழப்புக்கு மாநிலங்களுக்கு ஐந்தாண்டு காலத்திற்கு இழப்பீடு வழங்கப்படும். 2022 ஏப்ரல்–ஜூன் காலகட்டத்திற்கான சரக்கு மற்றும் சேவை வரிக்கான (GST) இருப்பு இழப்பீடாக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நடுவண் அரசு அண்மையில் ₹17,000 கோடியை வழங்கியுள்ளது.

4. ISROஆல் PSLV–C54 ஏவுகலம்கொண்டு ஏவப்பட்ட செயற்கைக்கோள் எது?

அ. OceanSat–3 ☑

ஆ. ICRISat–3

இ. AstroSat–3

ஈ. RISAT–3



✓ புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்-6 எனப்படும் ஓசன்சாட்-3 மற்றும் 8 நானோ செயற்கைக்கோள்களை சுமந்து கொண்டு இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் (ISRO) PSLV-C54 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் பறந்தது. ஆந்திர பிரதேச மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து இந்தச் செயற்கைக்கோள் ஏவப்பட்டது. எட்டு நானோ செயற்கைக்கோள்களில் பூட்டானுக்கான ISRO நானோ செயற்கைக் கோள்-2 (INS-2B), ஆனந்த், ஆஸ்ட்ரோகாஸ்ட் (நான்கு செயற்கைக்கோள்கள்) மற்றும் 2 தைபோல்ட் செயற்கைக் கோள்கள் அடங்கும்.

5. காசநோய் முக்த் பாரத் பரப்புரையின் தேசிய தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ. விராத் கோலி

ஆ. தீபிகா படுகோனே

இ. தீபா மாலிக் ☑

ஈ. P V சிந்து



✓ 'பத்மஸ்ரீ', 'கேல் இரத்னா' மற்றும் 'அர்ஜுனா விருது' பெற்ற தீபா மாலிக் நி-க்ஷய் மித்ரா மற்றும் காசநோய் முக்த் பாரத் பரப்புரை திட்டத்தின் தேசிய தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். தீபா மாலிக், பாராலிம்பிக்கில் பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண்மணி ஆவார். மேலும், இந்தியாவின் பாராலிம்பிக் குழுமத்தின் தலைவராகவும் அவர் உள்ளார். நி-க்ஷய் மித்ரா என்பது இந்தியக் குடியரசுத்தலையவர் திரௌபதி முர்முவால் தொடங்கப்பட்ட ஒரு முனைவாகும். அது காசநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு ஊட்டச்சத்து, கூடுதல் நோயறிதல் மற்றும் தொழிற்சார் ஆதரவின் மூன்று நிலைகளில் உதவி வழங்க முற்படுகிறது.

6. இந்தியாவின் ஐம்பதாவது தலைமை நீதியரசராக பதவியேற்றவர் யார்?

அ. நீதியரசர் D Y சந்திரசூட் ☑

ஆ. நீதியரசர் U U லலித்

இ. நீதியரசர் இரஞ்சன் கோகாய்

ஈ. நீதியரசர் சஞ்சை கிஷன் கௌ



✓ இந்தியாவின் ஐம்பதாவது தலைமை நீதியரசராக D Y சந்திரசூட் பொறுப்பேற்றார். சமீபத்தில் முன்னாள் தலைமை நீதியரசர் UU லலித் அவர்களால் நீதியரசர் D Y சந்திரசூட் இப்பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டார். உச்சநீதிமன்றத்தின் மிக மூத்த நீதிபதியான நீதியரசர் D Y சந்திரசூட், 74 நாட்கள் மட்டுமே பதவியிலிருந்த உதய் உமேஷ் லலித்துக்குப் பிறகு, ஈராண்டுகளுக்கு தலைமை நீதியரசாராக பணியாற்றவுள்ளார். நீதியரசர் D Y சந்திரசூட் 2024 நவம்பர் மாதம் வரை தலைமை நீதியரசராக பொறுப்பு வகிப்பார்.

7. இந்தியாவில், 'தேசிய சட்ட சேவைகள் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. நவம்பர்.03

ஆ. நவம்பர்.05

இ. நவம்பர்.09 ☑

ஈ. நவம்பர்.11



✓ தேசிய சட்ட சேவைகள் நாளானது ஆண்டுதோறும் நவம்பர்.09 அன்று நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. சட்ட சேவைகள் அதிகாரசபை சட்டம் இயற்றப்பட்டதை நினைவுகூருவதும், சட்டம் தொடர்பான விதிகள்குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இந்த நாளின் நோக்கமாகும். இந்தியாவில் ஒரே மாதிரியான முறையில், "சட்ட உதவி திட்டங்களுக்கு சட்டப்பூர்வ தளத்தை" வழங்குவதற்காக 1987ஆம் ஆண்டு சட்ட சேவைகள் அதிகாரசபை சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் 1995 நவ.9இல் நடைமுறைக்கு வந்தது. இந்தச் சட்டத்தின் நோக்கம், நாட்டில் ஒடுக்கப்பட்ட சமூக-பொருளாதார சமூகங்களைச் சேர்ந்த மக்களுக்கு தகுதியான மற்றும் இலவச சட்ட உதவிகளை வழங்குவதாகும்.

8. 2023ஆம் ஆண்டில், IBA மகளிர் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பை நடத்தவுள்ள ஆசிய நாடு எது?

அ. இலங்கை

ஆ. பாகிஸ்தான்

இ. நேபாளம்



ஈ. இந்தியா ☑

✓ 2023 – IBA மகளிர் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பை நடத்தும் நாடாக இந்தியா அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச குத்துச்சண்டை சங்கம் (IBA) மற்றும் இந்திய குத்துச்சண்டை கூட்டமைப்பு (BFI) இடையே இந்த நிகழ்வு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இது இந்தியாவில் நடத்தப்படும் மூன்றாவது மகளிர் உலக சாம்பியன்ஷிப்பும் ஆறு ஆண்டுகளுக்குள் நடத்தப்படும் இரண்டாவது போட்டியுமாகும்.

9. 2022 நவம்பர் நிலவரப்படி, காலநிலைக்கான சதுப்புநிலக்காடுகள் கூட்டணியில் உள்ள நாடுகள் எத்தனை?

அ. மூன்று

ஆ. ஐந்து ☑

இ. ஏழு

ஈ. ஒன்பது



✓ எகிப்தில் உள்ள ஷர்ம் எல்–ஷேக்கில் நடந்த COP27 அமர்வில், காலநிலைக்கான சதுப்புநிலக்காடுகள் கூட்டணியில் இணைந்த முதல் ஐந்து நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். இந்தக் கூட்டணியில் இணைந்த பிற நாடுகள்: ஆஸ்திரேலியா, ஜப்பான், ஸ்பெயின் மற்றும் இலங்கை. இந்த நடவடிக்கையானது 2.5–3 பில்லியன் டன் கரியமில வாயு உமிழ்வினைக் (CO_2) கட்டுப்படுத்தும் இந்தியாவின் தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளுக்கு இணங்கும் வகையில் உள்ளது.

10. 'சர்வதேச வறட்சியை எதிர்க்கும் கூட்டணி (IDRA)' தொடங்கப்பட்ட ஆண்டு எது?

அ. 2022 ☑

ஆ. 2010

இ. 2015

ஈ. 2020



✓ ஸ்பெயின் மற்றும் செனகல் தலைமையில் முப்பது நாடுகள் மற்றும் இருபது உலகளாவிய நிறுவனங்கள், 'சர்வதேச வறட்சியை எதிர்க்கும் கூட்டணியை (International Drought Resilience Alliance–IDRA)' தொடங்கியுள்ளன. இது ஷர்ம் எல்–ஷேக்கில் நடந்த ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றத்திற்கான மாநாட்டின் (UNFCC) COP27 மாநாட்டில் தொடங்கப்பட்டது. காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கு ஐக்கிய நாடுகள் அவையின் ஒரு குறிப்பிட்ட தீர்வாக இக்கூட்டணி கருதப்படுகிறது; ஏனெனில், இது எதிர்காலத்தில் நிகழப்போகின்ற வறட்சிகளுக்கு ஒருவருக்கொருவர் சிறப்பாக தயாராக இருப்பதற்கு உதவும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மலேசியாவில் தொடங்கியது இந்திய– மலேசிய கூட்டு இராணுவப் பயிற்சி

"ஹரிமாவு சக்தி–2022" என்ற இந்திய– மலேசிய கூட்டு இராணுவப்பயிற்சி மலேசியாவின் குலுவாங்கில் உள்ள புலாயில் தொடங்கியது. இந்தப் பயிற்சி டிசம்பர்.12–ஆம் தேதி நிறைவடையும். "ஹரிமாவு சக்தி" என்பது 2012 முதல் இந்திய மற்றும் மலேசிய இராணுவங்களுக்கு இடையே ஆண்டுதோறும் நடைபெறும் கூட்டுப்பயிற்சியாகும்.

இந்திய ராணுவத்தின் கர்வால் ரைபிள்ஸ் படையும், மலேசிய இராணுவத்தின் ராயல் மலாய் படையும் இந்தக் கூட்டு பயிற்சியில் கலந்துகொண்டு, வனப்பகுதிகளில் பல்வேறு இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிட்டு செயல்படுத்தும் முறையை மேம்படுத்துவதற்கான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவிருக்கின்றன. உத்திசார்ந்த திறன்கள் மற்றும் படைகளுக்கு இடையேயான இயங்குதன்மையை மேம்படுத்துவது, இராணுவங்களுக்கு இடையேயான உறவை ஊக்குவிப்பது முதலியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தும் வகையில் இரண்டு நாள் நிறைவு நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது. இந்திய மற்றும் மலேசிய இராணுவங்களுக்கு இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் இந்தக் கூட்டுப்பயிற்சியால், இருநாடுகளின் உறவும் அடுத்த நிலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

---

2. சிறந்த கைவினைக் கலைஞர்களுக்கு சில்ப் குரு மற்றும் தேசிய விருதுகள் வழங்கப்பட்டன

2017, 2018, 2019 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான 'சில்ப் குரு' மற்றும் தேசிய விருதுகள் வழங்கப்பட்டன. 30 பேருக்கு 'சில்ப் குரு' விருதுகளும். 78 பேருக்கு தேசிய விருகளும் வழங்கப்பட்டன. கைவினைஞர்களின் சிறப்பான செயல்திறன், இந்திய கைவினைப்பொருட்கள் மற்றும் ஜவுளித்துறையில் மதிப்புமிக்க பங்களிப்புக்காக இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. 'சில்ப் குரு' விருதுகள் மிகச்சிறந்த கைவினை கலைஞர்களுக்கு வழங்கப்படுகிறது. 2002–ஆம் ஆண்டு, இந்திய கைவினைத் தொழில்கள் பொன்விழாவையொட்டி இந்த விருது நிறுவப்பட்டது.

'சில்ப் குரு' விருதில் தங்க நாணயம் ஒன்று ₹2 லட்சம் ரொக்கப்பரிசு, தாமிரப்பத்திரம், சால்வை, சான்றிதழ் ஆகியவை அடங்கும். தேசிய விருதுகள் கடந்த 1965ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் ரொக்கப்பரிசு ₹1 இலட்சம், தாமிரப்பத்திரம், சால்வை மற்றும் சான்றிதழ் அடங்கும். தமிழ்நாட்டைச் சேர்ந்த தஞ்சாவூர் ஓவியக்கலைஞர் வி பன்னீர்செல்வம், 2019ஆம் ஆண்டுக்கான 'சில்ப் குரு' விருதைப் பெற்றுள்ளார். புதுச்சேரியைச் சேர்ந்த கே வெங்கடேசன், டெரக்கோட்டா வேலைப்பாட்டுக்காகவும், மாசிலாமணி, ஷோலாபித் வேலைப்பாட்டுக்காகவும், தேசிய விருதுகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் 2019ஆம் ஆண்டுக்கான விருதுகளைப் பெற்றுள்ளனர்.

---

3. குடியரசு நாள் விழா தலைமை விருந்தினர் எகிப்து அதிபர் எல்–சிசி: வெளியுறவு அமைச்சகம்

தில்லியில் வரும் ஜன.26இல் நடைபெறவுள்ள குடியரசு நாள் விழாவில் தலைமை விருந்தினராக எகிப்து அதிபர் அப்தல் பதா எல்–சிசி பங்கேற்கவிருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது. இந்திய குடியரசு நாள் விழாவில் தலைமை விருந்தினராக எகிப்து நாட்டின் அதிபர் பங்கேற்கவிருப்பது இதுவே முதல்முறை என்று அந்த அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குடியரசு நாளையொட்டி, தேசத்தின் ராணுவ வல்லமையையும் பல்வேறு மாநிலங்களின் கலாசார பெருமையையும் பறைசாற்றும் வகையில் தில்லியில் பிரம்மாண்ட அணிவகுப்பு நடைபெறும். இதில் தலைமை விருந்தினராக நட்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்று சிறப்பிப்பது வழக்கம். 1950 முதலே இந்த வழக்கம் தொடர்ந்து வருகிறது. 1952, 1953, 1966 ஆகிய ஆண்டுகளில் வெளிநாட்டுத் தலைவர்கள் பங்கேற்பின்றி குடியரசு நாள் விழா நடைபெற்றது. கடந்த 2021இல் அப்போதைய பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்ஸனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதிலும் கரோனா பரவல் அதிகரிப்பு காரணமாக அவரது இந்திய பயணம் இரத்து செய்யப்பட்டது. 2022இல் 5 மத்திய ஆசிய நாடுகளின் தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால், COVID சூழல் காரணமாக அவர்கள் பங்கேற்கவில்லை. 2020இல் பிரேஸில் அதிபர் ஜெயிர் பொல்சனாரோ தலைமை விருந்தினராகப் பங்கேற்றிருந்தார். 2016இல் அப்போதைய பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா ஹொலாந்த், 2015இல் அப்போதைய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, 2007இல் ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் தலைமை விருந்தினர்களாகப் பங்கேற்றிருந்தனர்.

4. பள்ளி மாணவர்களின் அறிவியல் மனப்பான்மையை மேம்படுத்தும் 'ஸ்டெம் ஆன் வீல்ஸ்' (வானவில் மன்றம்)

திருச்சி காட்டூர் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் நடந்த அரசு விழாவில் பள்ளி மாணாக்கர்களுக்காக வானவில் மன்றம் என்ற புதிய திட்டத்தை (எங்கும் அறிவியல்–யாவும் கணிதம்) முதலமைச்சர் மு க ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதையடுத்து 38 மாவட்டங்களில் 13,210 அரசுப்பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வானவில் மன்றம் தொடங்கிவைக்கப்பட்டது. இதன்மூலம் 25 இலட்சம் மாணவ, மாணவிகள் பயனடைவார்கள். இந்தத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு ₹25 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

பள்ளிக்கல்வித்துறையின்கீழ் செயல்படும் அரசுப்பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளிடையே அறிவியல் மற்றும் கணித கருத்துகள் குறித்த சிந்திக்கும் திறமையுடன் கூடிய ஆர்வத்தை வளர்த்தெடுப்பதற்கான சூழலை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தத்திட்டத்திற்கு 'ஸ்டெம் திட்டம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் ஆகிய நான்கு பாடங்களில் முதல் எழுத்தை இணைத்து 'STEM' என உருவகப்படுத்தி உள்ளனர். அரசுப்பள்ளிகளில் முதல் முறையாக மேற்கொள்ளப்படும் ஒரு புதுமையான முயற்சி என்பது குறிப்பிடத்தக்கது.

1. CITES COP19 ஆனது அண்மையில் எந்த விலங்கின் நிலை தரமிறக்கும் திட்டத்தை ஏற்றுக்கொண்டது?

அ. இமயமலை காட்டெருமை

ஆ. இந்திய மெல்லோட்டு ஆமை

இ. தெற்கத்திய வெண் காண்டாமிருகங்கள் ☑

ஈ. கானமயில்



✓ CITES COP19 ஆனது அண்மையில் தெற்கத்திய வெண் காண்டாமிருகங்களின் நிலையை பின்னிணைப்பு–Iஇலிருந்து பின்னிணைப்பு–IIக்கு தரமதிப்புக்குறைக்கும் திட்டத்தை ஏற்றுக்கொண்டது. போட்ஸ்வானா மற்றும் நமீபியாவின் கோரிக்கையை ஏற்று COP19 இதனை ஆதரித்தது. பின்னிணைப்பு–Iஇல் பட்டியலிடப்பட்டுள்ள காட்டு விலங்கினங்கள், 'அழிவின் விளிம்பில்' உள்ளவையாகும்.


2. தங்கமயில் விருதை வென்ற, 'I have Electric Dreams' என்பது எந்த மொழியில் தயாரிக்கப்பட்ட திரைப்படமாகும்?

அ. ஆங்கிலம்

ஆ. சீனம்

இ. ஸ்பானியம் ☑

ஈ. ஜெர்மானியம்



✓ இந்திய சர்வதேச திரைப்பட விழாவின் (IFFI) 53ஆவது பதிப்பு அண்மையில் நிறைவடைந்தது. வாலண்டினா மாரல் இயக்கிய ஸ்பானிய திரைப்படமான, 'ஐ ஹேவ் எலக்ட்ரிக் டிரீம்ஸ்' 'தங்கமயில்' விருதை வென்றது. நோ எண்ட் படத்தின் நடிகரான வஹித் மொபசேரி சிறந்த நடிகருக்கான (ஆண்) 'வெள்ளிமயில்' விருதும், ஐ ஹேவ் எலக்ட்ரிக் டிரீம்ஸ் திரைப்படத்தின் முன்னணி நடிகையான டேனிலா மரின் நவரோ சிறந்த நடிகருக்கான (பெண்) 'வெள்ளி மயில்' விருதும் பெற்றார். ஈரானிய எழுத்தாளரும் இயக்குநருமான நாடர் சேய்வர் சிறந்த இயக்குநருக்கான 'வெள்ளி மயில்' விருதை நோ எண்ட் திரைப்படத்திற்காக பெற்றார். பிரான்ஸ், இந்த ஆண்டுக்கான, 'சிறப்புக்கவனம்' பெற்ற நாடாக இருந்தது.


3. சாத்தியம்மிகு லித்தியம் இருப்புக்களை மதிப்பிடுவதற்காக, இந்தியா, கீழ்க்காணும் எந்நாட்டிற்கு குழுவொன்றை அனுப்பியுள்ளது?

அ. ஆஸ்திரேலியா

ஆ. பிரேஸில்

இ. அர்ஜென்டினா ☑

ஈ. எகிப்து



✓ அர்ஜென்டினாவில் சாத்தியம் நிறைந்த லித்தியம் படிவுகள் மற்றும் சாத்தியம்மிகு கையகப்படுத்தல் வாய்ப்புகளை மதிப்பிடுவதற்காக இந்தியா மூன்று புவியியலாளர்கள் குழுவை அர்ஜென்டினாவிற்கு அனுப்பியுள்ளது. மினரல் எக்ஸ்ப்ளோரேஷன் கார்ப்பரேஷன் லிட் (MECL), KABIL (கனிஜ் பிதேஷ் இந்தியா லிட்) மற்றும் இந்திய புவியியல் ஆய்வு (GSI) ஆகியவற்றிலிருந்து தலா ஒரு புவியியலாளர் இக்குழுவில் உள்ளனர். இந்தியாவில் லித்தியம் சார்ந்த எந்தவொரு வளமும் இல்லாத காரணத்தினால் அந்தக்கனிமம் முதன்மையாக இறக்குமதி செய்யப்படுகிறது. மின்–வாகனங்களில் பயன்படுத்தப்படும் மறுவூட்டம் செய்யக்கூடிய மின்கலங்களில் லித்தியம் முக்கிய அங்கமாக பயன்படுத்தப்படுகிறது.

4. கீழ்க்காணும் எந்த நாட்டின் அதிபர், இந்தியக் குடியரசு நாள் கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்?

அ. ஐக்கிய அரபு அமீரகம்

ஆ. எகிப்து ☑

இ. ஆஸ்திரேலியா

ஈ. ஜப்பான்



✓ 2023ஆம் ஆண்டு குடியரசு நாளில் முதன்மை விருந்தினராக எகிப்து அதிபர் அப்தெல் பத்தா அல்–சிசியை இந்தியா அழைத்துள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தியக் குடியரசு நாள் விழாவில் எகிப்து அதிபர் ஒருவர் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்வது இதுவே முதல்முறையாகும். இந்தியாவின் தலைமையின்கீழ் G20 உச்சிமாநாட்டிற்கு வருகைதரும் ஒன்பது நாடுகளில் எகிப்தும் ஒன்றாகும். இருநாடுகளும் இந்த ஆண்டில் தங்களது தூதரக உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றன.

5. கீழ்க்காணும் எந்த நகரத்தின் அருங்காட்சியக மறுசீரமைப்புத் திட்டத்திற்கு UNESCOஇல், 'சிறப்புத்துவத்திற்கான விருது' வழங்கப்பட்டுள்ளது?

அ. பெங்களூரு

ஆ. மும்பை ☑

இ. கொச்சின்

ஈ. பனாஜி

✓ மும்பையைச் சார்ந்த சத்திரபதி சிவாஜி மகாராஜா வாஸ்து சங்கராலயாவுக்கு ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் (UNESCO) 'ஆசிய–பசிபிக் கலாச்சார பாரம்பரியப் பாதுகாப்புக்கான விருதுகள்–2022'இல் 'சிறப்புத்துவத்திற்கான விருது' வழங்கப்பட்டது. ஹைதராபாத்தில் உள்ள கோல்கொண்டாவைச் சேர்ந்த ஸ்டெப்வெல்ஸுக்கு 'தனிச்சிறப்பு' விருதும், டோமகொண்டா கோட்டை, தெலுங்கானா மற்றும் பைகுல்லா நிலையம், மும்பைக்கு 'சிறப்பு மதிப்பு' விருதும் வழங்கப்பட்டது.

6. 'SVAMITVA' திட்டத்தைச் செயல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?

அ. உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

ஆ. பஞ்சாயத்து இராஜ் அமைச்சகம் ☑

இ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ பஞ்சாயத்து இராஜ் அமைச்சகம், 'SVAMITVA' என்ற சொத்துக்கணக்கெடுப்பு திட்டத்தைச் செயல்படுத்துகிறது. மத்திய பிரதேச மாநிலம் போபாலில் நடந்த, 'SVAMITVA' திட்டம் மற்றும் கிராமப்புற திட்டமிடல் குறித்த தேசிய மாநாட்டின் போது, 'SVAMITVA' திட்டம்குறித்த நிபுணர் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டது. 'SVAMITVA' என்ற திட்டத்தின் நோக்கங்களை முழுமையாய் உணர்வதற்காக மாநிலங்கள் பின்பற்றக்கூடிய வழிகாட்டும் கொள்கைகளை இது வழங்குகிறது. இந்திய அரசின் முன்னாள் செயலாளர் பி கே அகர்வால் தலைமையில் 2022 பிப்ரவரியில் இதற்கான நிபுணர் குழு உருவாக்கப்பட்டது.

7. திடீரென தட்டம்மை நோய் பரவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள மெட்ரோ நகரம் எது?

அ. சென்னை **ஆ. மும்பை ☑**

இ. புது தில்லி ஈ. கொல்கத்தா



✓ மும்பையில் நிலவும் தட்டம்மை நோய் பரவலைக் கட்டுப்படுத்தவும், அதை மதிப்பிடவுமாக ஓர் உயர்மட்ட பல்துறைக் குழுவை நடுவணரசு மும்பைக்கு அனுப்பியுள்ளது. மும்பையின் குடிமை அமைப்பான பிரகன்மும்பை முனிசிபல் கார்ப்பரேஷன் ஆனது கோவந்தியில் 15 ஐயத்திற்கிடமான தட்டம்மை பாதிப்புகளைக் கண்டறிந்துள்ளது. தட்டம்மை என்பது வைரஸால் ஏற்படும் ஒரு தொற்றுநோயாகும்; இது சுவாசக்குழாயைப் பாதித்து பின்னர் உடல் முழுவதும் பரவும் நோயாக மாறுகிறது.

8. 2022 – அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Basic Sciences for Sustainable Development ☑

ஆ. Growth and World Peace

இ. Science and Society

ஈ. Learning and Teaching



✓ அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் நாளானது ஆண்டுதோறும் நவ.10 அன்று அனுசரிக்கப்படுகிறது. சமூகத்திற்கும் நமது அன்றாட வாழ்விற்கும் அறிவியல் எவ்வளவு முக்கியம் என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும். "Basic Sciences for Sustainable Development" என்பது இந்த ஆண்டு (2022) அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

9. 2023–24இல், 'கேலோ இந்தியா தேசிய பல்கலைக்கழக விளையாட்டுகளை' நடத்தும் மாநிலம் எது?

அ. கர்நாடகா

ஆ. ஒடிஸா

இ. உத்தர பிரதேசம் ☑

ஈ. மேற்கு வங்காளம்



✓ உத்தர பிரதேச மாநிலத்தின் லக்னௌ, கோரக்பூர், வாரணாசி மற்றும் நொய்டா ஆகிய 4 நகரங்களில் 2023–24இல் கேலோ இந்தியா தேசிய பல்கலைக்கழக விளையாட்டுகள் நடத்தப்படவுள்ளன. ஒடிஸா மற்றும் கர்நாடகாவுக்குப் பிறகு, உத்தர பிரதேசம் முதல்முறையாக தேசிய பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளை நடத்துகிறது. தேசிய பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளில் 26 வயதுக்குட்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்பார்கள். 12 முன்னாள் விளையாட்டு வீரர்களை பயிற்சியாளர்களாக அரசு நியமித்துள்ளது.

10. அண்மையில், 2ஆவது BIMSTEC வேளாண்துறை அமைச்சர்கள் கூட்டத்தை நடத்திய நாடு எது?

அ. இலங்கை

ஆ. இந்தியா ☑

இ. மாலத்தீவுகள்

ஈ. தைவான்



✓ நடுவண் வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தலைமையில் பல்வேறு துறைசார்ந்த தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பின் வேளாண்துறை அமைச்சர்கள் நிலையிலான இரண்டாவது கூட்டத்தை இந்தியா நடத்தியது. இந்தக் கூட்டத்தில் பூடான், வங்காளதேசம், நேபாளம், மியான்மர், இலங்கை மற்றும் தாய்லாந்து நாடுகளின் வேளாண்துறை அமைச்சர்கள் பங்கேற்றனர்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவராகிறார் P T உஷா!

இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் முதல் பெண் தலைவராக முன்னாள் தடகள வீராங்கனை P T உஷா (58) தேர்வாக உள்ளார். தலைவர் தேர்தலுக்கு P T உஷா மட்டுமே வேட்புமனுத் தாக்கல்செய்துள்ள நிலையில், போட்டியின்றி தலைவராகத் தேர்வாகவுள்ளார். இவர் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் முதல் பெண் தலைவர் என்ற பெருமையை பெறவுள்ளார். ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் தங்கம், வெள்ளி உள்ளிட்ட பதக்கங்களை குவித்துள்ள P T உஷா, கடந்த 1984இல் நடந்த ஒலிம்பிக்கில் 400 மீ போட்டியில் 4ஆவது இடம்பெற்று இந்தியாவுக்குப் பெருமைசேர்த்தார்.

---

2. 13,210 அரசுப்பள்ளிகளில் 'வானவில் மன்றம்'

'எங்கும் அறிவியல்–யாவும் கணிதம்' என்பதை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டில் 13,210 அரசுப்பள்ளிகளில் 'வானவில் மன்றம்' திட்டத்தை முதலமைச்சர் மு க ஸ்டாலின், திருச்சியில் தொடக்கிவைத்தார்.

திருச்சி காட்டூர், பாப்பாக்குறிச்சி ஆதிதிராவிடர் நல பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற இந்த விழாவின் ஒருபகுதியாக, 100 நடமாடும் அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் இருசக்கர வாகனங்களில் பயிற்சியளிக்க செல்லும் தன்னார்வலர்களையும் முதலமைச்சர் கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.

அரசுப்பள்ளிகளில் 6 வகுப்பு முதல் 8 வகுப்பு வரை பயிலும் மாணவர், மாணவிகளிடையே அறிவியல் மற்றும் கணிதம் குறித்த ஆர்வத்தை ஏற்படுத்துதல், மாணவர்களிடம் இயல்பாகவே உள்ள படைப்பாற்றல் ஆர்வத்தை வளர்த்தெடுத்தல், புதுமைகளைக் காணும் மனப்பாங்கை வளர்த்தெடுத்தல், தமக்கான மொழியில் அறிவியல் மொழி பழகுதல், அன்றாட வாழ்க்கையிலுள்ள அறிவியலை உணர்தல், சமூகவியல், இலக்கியத்துடனான அறிவியலைப் புரிந்துகொள்ளுதல் ஆகியவையே இந்தத் திட்டத்தின் நோக்கங்களாகும். இந்தத் திட்டத்திற்கு 710 கருத்தாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

710 கருத்தாளர்களுக்கும் இருசக்கர வாகனங்கள் வழங்கப்பட்டு நடமாடும் அறிவியல் மற்றும் கணித பரிசோதனை ஏதுவாளர்களாக செயல்படுவர். மாணவர்களுக்கு எளிய அறிவியல் பரிசோதனைகளுக்கான கருவிகளையும் உடன் எடுத்து வருவர். இவர்கள் பள்ளிதோறும் சென்று ஆசிரியர்கள் துணையோடு மாணவர்களுக்கு அறிவியல் பரிசோத –னைகளை செய்து காட்டுவர். அறிவியல் மற்றும் கணித வல்லுநர்களுடன் இணையவழி கலந்துரையாடலுக்கும் ஏற்பாடுகள் செய்யப்படும். இதன்மூலம் சக ஆசிரியர்களுடனான துறைசார்ந்த உரையாடலுக்கு வாய்ப்பு ஏற்படும்.

நவீன தொழிநுட்பங்களையும் கணிதம் சார்ந்த புதிய உத்திகளையும் அறிந்துகொள்வதுடன் அவற்றை வகுப்புகளில் மாணவர்களிடத்தில் பகிர்ந்துகொள்ளவும் இந்தக் கலந்துரையாடல் உதவும். இந்தத் திட்டமானது மாநிலம் முழுவதும் திங்கள்கிழமை முதல் பயன்பாட்டுக்கு வந்தது. இந்தத்திட்டத்துக்காக ₹25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 25 இலட்சம் மாணவர், மாணவிகள் பயன்பெறுகின்றனர்.

---

3. 75% இந்தியர்களுக்கு கட்டுப்பாடற்ற இரத்த அழுத்தம்

இந்தியாவில் 75 சதவீதத்துக்கும் அதிகமானோருக்குக் கட்டுப்பாடற்ற அளவில் இரத்தவழுத்தம் இருப்பதாக லான்செட் மருத்துவ இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியர்களின் இரத்த அழுத்தக் கட்டுப்பாடு தொடர்பாக கடந்த 2001ஆம் ஆண்டு முதல் வெளியான 51 ஆய்வறிக்கைகளை லான்செட் குழு ஆராய்ந்தது. அது தொடர்பான அறிக்கை லான்செட் பிராந்திய இதழில் வெளியிடப்பட்டுள்ளது. இரத்த அழுத்தத்தைக் கட்டுக்குள் வைத்திருப்பதில் பெண்கள் ஆண்களை விட சிறப்பாகச் செயல்படுவதாக 21 ஆய்வறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிராமப்பகுதிகளில் வசிக்கும் இந்தியர்கள் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதில் முறையாகச் செயல்படுவதில்லை என ஆறு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஆய்விதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

4. டிச.01இல் அறிமுகமாகிறது டிஜிட்டல் ரூபாய்!

டிஜிட்டல் ரூபாய் வருகின்ற டிச.01 முதல் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. 2022 மத்திய பட்ஜெட் கூட்டத்தொடரின்போது ரிசர்வ் வங்கிமூலம் டிஜிட்டல் ரூபாய் அறிமுகப்படுத்தப்படும் என்று நடுவண் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்திருந்தார். இந்நிலையில், டிஜிட்டல் ரூபாய் வெளியீடு குறித்த அறிவிப்பை ரிசர்வ் வங்கி இன்று வெளியிட்டுள்ளது.

தற்போது புழக்கத்திலுள்ள நாணயங்களின் மதிப்பிலேயே டிஜிட்டல் ரூபாயும் சில்லறைப் பணப்பரிவர்த்தனைகளுக்–காக டிச.01ஆம் தேதி வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. டிஜிட்டல் முறையில் 'e₹–R' என்ற குறியீடு டிஜிட்டல் ரூபாய்க்கு வழங்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக SBI, ICICI, YES வங்கி, IDFC பர்ஸ்ட் ஆகிய நான்கு வங்கிகளில் அறிமுகமாகிறது. விரைவில் பரோடா வங்கி, யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, HDFC வங்கி, கொடாக் மகேந்திரா வங்கியும் இணையவுள்ளன. மும்பை, தில்லி, பெங்களூரு, புவனேசுவரம் நகரங்களில் டிச.01ஆம் தேதியும், ஆமதாபாத், கௌகாத்தி, இந்தூர், லக்னௌ, பாட்னா, சிம்லாவில் விரைவில் அறிமுகமாகவுள்ளது. இதன்மூலம் நாளை மறுநாள் முதல் ₹1, ₹2, ₹5, ₹10, ₹20, ₹50, ₹100, ₹200, ₹500, ₹2000 மதிப்பிலான டிஜிட்டல் கரன்சிகள் புழக்கத்திற்கு வரவுள்ளன.

---

5. குரங்கு அம்மைக்குப் புதிய பெயர்

குரங்கம்மைக்கு 'M–அம்மை' என்று உலக சுகாதார அமைப்பு பெயரிட்டுள்ளது. தொடக்கத்தில் குரங்குகள் இடையே பரவிய அந்நோய், தற்போது மனிதர்களிடையே, அதிலும் ஆப்பிரிக்க நாடுகளில் அதிகமாகப்பரவும் நிலையில், குரங்கு அம்மை என்ற பெயர் கருப்பினத்தவர்களை இழிவுபடுத்தக் கூடும் என்பதால் புதிய பெயர் வைக்கப்பட்டுள்ளது.

---

1. 'சமன்வை–2022' என்ற மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணப்பயிற்சியை நடத்துகிற ஆயுதப்படை எது?

அ. இந்திய இராணுவம்

ஆ. இந்திய கடற்படை

இ. இந்திய வான்படை ☑

ஈ. இந்திய கடலோர காவல்படை

✓ ஆக்ராவில் உள்ள வான்படை தளத்தில் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணத்திற்கு வருடாந்திர கூட்டுப் பயிற்சியான 'சமன்வை–2022' நவ.28–30 வரை நடைபெறவுள்ளது. இது நிறுவனம் சார்ந்த பேரிடர் மேலாண்மை கட்டடைமப்புகளின் திறன் மற்றும் அவசரகால நடவடிக்கைகள்பற்றி மதிப்பீடு செய்வதை நோக்கமாகக்கொண்டது. மேலும், பேரிடர் மேலாண்மைகுறித்த கருத்தரங்கும் வான்படை விமானங்களின் காட்சி விளக்கங்களும் இதில் இடம்பெறும். இந்தப் பயிற்சியின்போது ஆசியான் நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்பார்கள்.

2. 'நை சேத்னா' என்ற பரப்புரைத் திட்டத்தைத் தொடங்கிய நடுவண் அமைச்சகம் எது?

அ. ஊரக வளர்ச்சி அமைச்சகம் ☑

ஆ. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

இ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. MSME அமைச்சகம்

ग्रामीण विकास मंत्रालय
भारत सरकार
MINISTRY OF RURAL DEVELOPMENT
GOVERNMENT OF INDIA

✓ நடுவண் ஊரக வளர்ச்சி அமைச்சகமானது 'நை சேத்னா' என்ற பெயரில் ஒருமாதகாலம் நீளும் பரப்புரைத் திட்டத்தை மக்கள் பங்கேற்பு இயக்கமாகத் தொடங்கியுள்ளது. குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள பெண்களுக்கு அவர்களின் உரிமைகள் மற்றும் அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய உதவும் வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நடுவண் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. 2022 நவ.25 அன்று பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச நாளின்போது இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

3. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச்சட்டத்தை மறுசீரமைப்பதற்காக அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் யார்?

அ. அமர்ஜீத் சின்ஹா ☑

ஆ. A K சிக்ரி

இ. இரஞ்சன் கோகோய்

ஈ. V V இரமணா



✓ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்தின் (MNREGA) கீழ் தேவைப்படும் கட்டமைப்பு & பிற சீர்திருத்தங்களை பரிந்துரைப்பதற்காக முன்னாள் ஊரக வளர்ச்சி செயலர் அமர்ஜீத் சின்ஹா தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. மிகவும் தேவைப்படும் மாநிலங்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்குவதன்மூலம் பிராந்திய ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை இந்தக் குழு பரிந்துரைக்கவுள்ளது.

4. 'மனநலம் மற்றும் சமூகப்பாதுகாப்புக் கொள்கையை' அறிமுகப்படுத்திய முதல் வடகிழக்கு மாநிலம் எது?

அ. அஸ்ஸாம் **ஆ. மேகாலயா ☑**

இ. சிக்கிம் ஈ. மணிப்பூர்

Government of Meghalaya
सत्यमेव जयते
Shillong

✓ மேகாலயா மாநிலமானது வடகிழக்கில் முதல் மாநிலமாகவும், இந்தியாவில் மூன்றாவது மாநிலமாகவும், 'மனநலம் மற்றும் சமூகப்பாதுகாப்புக் கொள்கையை'க் கொண்டுள்ளது. ஒட்டுமொத்த மனநலம் & நலவாழ்வை மேம்படுத்துதல் மற்றும் பொருத்தமான அணுகல் மற்றும் பராமரிப்பு வழிகளை எளிதாக்குவது இந்தக் கொள்கையின் நோக்கமாகும். இந்தக் கொள்கையானது சரியான மனநலம் (குறிப்பாக குழந்தைகள், இளம்பருவத்தினர் மற்றும் இளையோர்) பேணப்படுவதில் கவனம் செலுத்துவதை உறுதி செய்யும் என்று மேகாலயா மாநில முதலமைச்சர் கான்ராட் K சங்மா தெரிவித்தார்.

5. 'சர்வதேச போர்த்துகீசிய மொழி பேசுவோர் (லூசோபோன்) திருவிழா' நடத்தப்படும் மாநிலம் எது?

அ. மகாராஷ்டிரா

ஆ. கோவா ☑

இ. குஜராத்

ஈ. அஸ்ஸாம்



✓ இந்திய கலாசார உறவுகள் கவுன்சில் மற்றும் கோவா மாநில அரசாங்கத்துடன் இணைந்து வெளியுறவு அமைச்சகம் 'சர்வதேச போர்த்துகீசிய மொழி பேசுவோர் (லூசோபோன்) திருவிழா'வை நடத்துகிறது. லூசோபோன்கள் என்பது போர்த்துகீசிய மொழியை பூர்வீகமாகவோ அல்லது இரண்டாம் மொழியாகவோ பேசும் மக்களைக் குறிக்கின்றது. இவ்விழாவின் ஒருபகுதியாக, லூசோபோன் இசை குறித்த பயிலரங்கங்கள், கோவா கட்டடக்கலை கண்காட்சிகள், கோவா கைவினைப்பொருட்கள் மற்றும் கோவா மரச்சாமான்கள், உணவு மற்றும் பானங்கள் திருவிழா ஆகியவை ஏற்பாடு செய்யப்படுகின்றன.

6. அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட, '*Pseudohelice annamalai*' என்பது சார்ந்த இனம் எது?

அ. ஆமை

ஆ. சிலந்தி

இ. நண்டு ☑

ஈ. வண்ணத்துப்பூச்சி



✓ வளம்நிறை தமிழ்நாட்டின் வெள்ளாற்றின் முகத்துவாரம் அருகேயுள்ள சதுப்புநிலத்தில் புதிய வகை 'கழிமுக நண்டு' இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கல்வி & ஆராய்ச்சி சார்ந்த அதன் 100 ஆண்டுகால சேவையை அங்கீகரிப்பதற்காக இந்த இனத்திற்கு, '*Pseudohelice annamalai*' என்று பெயரிடப்பட்டுள்ளது. *Pseudohelice* என்ற இந்த இனம் முதல்முறையாக இங்குதான் கண்டறியப்பட்டுள்ளது. அதிக அலையிடைப் பகுதிகளிலிருந்து இது சேகரிக்கப்பட்டது. '*Pseudohelice annamalai*' இணமானது அடர் ஊதா நிறத்தில் இருந்து அடர் சாம்பல் நிறம் வரை வேறுபட்ட நிறங்களில் காணப்படுகிறது.

7. 2022 – உலக பயன்மை (Usability) நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Our Health ☑

ஆ. Make things easier

இ. Better Design

ஈ. Inclusivity

✓ ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதத்தில் வரும் இரண்டாவது வியாழனன்று, உலகம் முழுவதும் உலக பயன்மை நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள், 'Make things easier' நாள் என்றும் அழைக்கப்படுகிறது. 'பயன்மை' என்பது ஒரு நபர் ஒரு பொருளை எவ்வளவு திறமையாகவும் பயனுள்ளதாகவும் பயன்படுத்த முடியும் என்பதை மதிப்பிடும் தரமாகும். 2022ஆம் ஆண்டில் வரும் உலக பயன்மை நாளுக்கானக் கருப்பொருள், "Our Health" என்பதாகும்.

8. சுவிச்சர்லாந்து சுற்றுலாத்துறையால், 'நட்புத்தூதராக' நியமிக்கப்பட்டுள்ள இந்திய விளையாட்டு வீரர் யார்?

அ. P V சிந்து

ஆ. நீரஜ் சோப்ரா ☑

இ. மேரி கோம்

ஈ. விராட் கோலி



✓ ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற ஈட்டியெறிதல் வீரர் நீரஜ் சோப்ராவை, 'நட்புத்தூதராக' சுவிச்சர்லாந்து சுற்றுலாத் துறை நியமித்துள்ளது. ஒரு 'நட்புத்தூதராக' அவர் சுவிச்சர்லாந்தின் சாகசம் நிறைந்த சுற்றுலாத்தலங்களை இந்தியப் பயணிகளுக்கு காட்சிப்படுத்துவார் மற்றும் விளம்பரப்படுத்துவார்.

9. 2022 – இந்திய வேளாண் வணிக விருதுகளில் 'சிறந்த மாநிலம்' பிரிவில் விருதுபெற்ற மாநிலம் எது?

அ. கர்நாடகா

ஆ. ஒடிஸா

இ. ஹரியானா ☑

ஈ. மேற்கு வங்காளம்

✓ கொள்கைகள், திட்டங்கள், உற்பத்தி, உள்ளீடுகள், தொழில்நுட்பங்கள், சந்தைப்படுத்தல், மதிப்புக்கூட்டல், உட்கட்டமைப்பு மற்றும் வேளாண்துறையில் ஏற்றுமதி ஆகிய துறைகளில் பங்களித்ததற்காக ஹரியானாவுக்கு, 'சிறந்த மாநிலம்' என்ற பிரிவில் 2022 – இந்திய வேளாண் வணிக விருது வழங்கப்பட்டுள்ளது. மீன்வள அமைச்சகத்தின் கீழ் ஹைதராபாத்தில் உள்ள தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்திற்கு, 'சிறந்த வேளாண் வணிக' விருதுக்கான 2022 – இந்திய வேளாண் வணிக விருது வழங்கப்பட்டுள்ளது. இந்திய சர்வதேச வேளாண் வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப கண்காட்சி – 2022 ஆனது இந்திய உணவு மற்றும் உழவு சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.

10. 2022 – தேசிய கல்வி நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Changing Course, Transforming Education ☑

ஆ. Education and Scientific Research

இ. Shaping Country's Education System

ஈ. Culture and Education



✓ இந்தியாவின் முதல் கல்வியமைச்சர் மௌலானா அபுல் கலாம் ஆசாத்தின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் kடந்த 2008ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் நவ.11ஆம் தேதி தேசிய கல்வி நாள் கொண்டாடப்படுகிறது. ஆசாத், நாட்டின் கல்வி முறையை வடிவமைப்பதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தார் மற்றும் UGC, AICTE மற்றும் பல்வேறு கல்வி நிறுவனங்களை அமைப்பதில் பங்களித்தார். "Changing Course, Transforming Education" என்பது இந்த ஆண்டு (2022) தேசிய கல்வி நாளுக்கானக் கருப்பொருள் ஆகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. அருங்காட்சியகம் மற்றும் பூங்கா!

அரியலூர் மாவட்டத்திலுள்ள கங்கைகொண்ட சோழபுரத்தில் அருங்காட்சியகமும், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் புதைபடிவப் பூங்காவும் அமைக்கப்படும் எனத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. அரியலூர் மாவட்டத்தில் அகழ்வாராய்ச்சியின்போது கிடைக்கப்பெறும் புதைபடிவங்களை காட்சிப்படுத்துவதற்காக வாரணவாசி என்ற கிராமத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது.

---

2. பெரம்பலூர் மாவட்டம் எறையூரில் சிப்காட் சார்பில் முதல் தொழிற்பூங்கா

பெரம்பலூர் மாவட்டம் எறையூரில் அமைக்கப்பட்டுள்ள சிப்காட் தொழிற்பூங்காவை தமிழ்நாட்டு முதலமைச்சர் மு க ஸ்டாலின் திறந்து வைத்தார். மேலும், அங்கு அமையவுள்ள தனியார் காலணி பூங்காவுக்கு அடிக்கல் நாட்டினார். தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்துக்கும், கோத்தாரி பீனிக்ஸ் அக்கார்டு நிறுவனத்துக்கும் ₹1,700 கோடி மதிப்பில் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதன்மூலம் 25,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறப்படுகிறது. மேலும், தைவான்நாட்டைச் சேர்ந்த 10 தொகுப்பு நிறுவனங்களுடன், ₹740 கோடி முதலீட்டில், 4,500 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

---

3. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் இந்தியாவின் மிகப்பெரிய ஐபோன் தயாரிப்பு ஆலை

இந்தியாவில் பாக்ஸ்கான், பெகட்ரான், விஸ்ட்ரான் ஆகிய நிறுவனங்கள் புதிய ஐபோன்களை தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பாக்ஸ்கான் தொழிற்சாலையில் ஐபோன் தயாரிப்பு பணிகள் ஏற்கனவே நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இந்தியாவில் ஐபோன் தயாரிப்பை 2 ஆண்டுகளில் 4 மடங்காக அதிகரிக்க பாக்ஸ்கான் நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ளது. அதன்படி, நாட்டிலேயே மிகப்பெரிய ஐபோன் தயாரிப்பு தொழிற்சாலை ஓசூரில் தொடங்கப்படும் என்று அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. இதற்கான கட்டுமானப் பணிகளை டாடா குழுமம் மேற்கொள்ளவிருப்பது குறிப்பிடத்தக்கது.
